மாவீரர் நாள் சிறப்பிதழ்

தமிழீழ ஆவணக் காப்பகம்

நவம்பர் 1995

# எரிமலை



வீரர்களின் பூமியாக எழுப்பி
நெருப்புப் பறவைகளின்
சங்கீதத்தைப் பரப்பி
தேசத்தின் உயிர்த் தீயை மூட்டிய
உன்னதங்களின் தலைவனை
உச்சரித்துக் கொண்டு
ரியின் புதல்வர்களே எழுக.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அன்புடன் ஆசிரியருக்கு,

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இன்று பூரிப்புடன் நிற்கும் எரிமலையின் புதிய ஒளி கண்டு என் உள்ளம் கூசுகின்றது. தேசவிடுதலைப் போரினின்று விலகி வேதனையுடன் வெளி நாடுகளில் வாழும் என் போன்ற சோதரிகளுக்கு எரிமலையின் அன்புக் கரங்கள் ஆறுதல் அளிக்கின்றது.

ஆசிரியரே கவிஞர் புதுவை இரத்தின துரையின் கவிதை வரிகளால் எரிமலையின் இதழ்கள் அலங்கரிக்கப்படும் போதெல்லாம் என் மகிழ்விற்கு எல்லையில்லை. கவிஞ ரின் கவிதைகளை தாயகத்திலேயே நேசித்த வள் நான். இம்மாதம் கவிஞரின் பேட் டியை சுமந்து வந்த எரிமலையே உனக்கு பல கோடி நன்றிகள்.

ஆசிரியரே பேட்டியைக் கண்டவரை அறிய என் உள்ளம் ஆவலுறுகின்றது. தயவு செய்து அவரை யாரென்று அறியத் தருமாறு அன்புடன் கேட்கின்றேன்.

வசந்தி மனோகரன்

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் நேர் காணலைக் கண்டிருந்தவர் 'புதியவன்' (ஜேர் மனி) அவர்களேதவறுதலாக அவரது பெயர் பிரசுரிக்கப்படாமைக்கு வருந்துகிறோம்.

- ஆசிரியர் குழு.

★★★

அன்பும் மதிப்பும் மிக்க ஆசிரியருக்கு,

எரிமலை தற்போது புதுப்பொலிவுடன் வெளிவருவதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். தங்கள் ஆசிரியத் தலை யங்கம் மிகவும் யதார்த்தமானதும் தெளிவா னதுமாகும். இதன் வெளியீட்டிற்காக உழைக்கும் எல்லோருக்கும் எமது நன்றிகள்.

அன்னிய மண்ணில் வாழும் தன் தோழி மூலம் தூது விடும் தங்கை, பாலமனோக ரனின் சிறுகதைக்கு, மகா வரைந்த ஓவியம் மிகவும் ஆழமானது. அன்னிய மண்ணில் வாழும் நாம் ஒவ்வொருவரும் எமது இனத் துக்காக ஏதாவது செய்தாக வேண்டும். இது பிறவிக் கடன்.

ஆகாயத்திலிருந்து திடீரென விழுந்தாற் போல் அரசியலில் முன் பின் பெயர் அடிபடாத வெளிநாட்டமைச்சர் லக்ஷமன் கதிர்காமரின் அரசியல் வருகை, அப்படியே சிறிமாவின் அரசில் அமைச்சர் பதவி பெற்று இனத்தைக் காட்டிக் கொடுத்த குமாரசூரியரை நினைவுபடுத்துகின்றது. கதிர்காமர் மிகவும் விசுவாசமான அடிமை யாக செயற்படுகிறார். 50 வருடங்கட்கும் மேலாக தமிழ் அரசியலில் ஈடுபட்டிருந்தும் தமிழர்களின் பிரச்சினைகளை அவர்க ளுடன் கூட இருந்தே வாழ்ந்து துல்லியமாக தெரிந்திருந்துமே சிங்களத் தலைவர்களின் நம்பிக்கை மோசத்தால் சோரம் போன (சிங்களவர்களின் கபடங்களைப் புரிந்து கொள்ளும் விவேகமற்ற) எமது பழைய தலைவர்களுக்கெல்லாம் தெரியாத அரசி யல் தனக்குத் தெரிந்து விட்டாற் போன்ற பேதமை எண்ணத்துடன் செயற்படுகின் றாரா? அல்லது தமிழரைப் பற்றி எனக்




## அக்கறைப் பூக்கள்

கென்ன அக்கறை, அவர்களா எனக்குப் பதவி தந்தார்கள், பதவியும் புகழும் தந்த சந்திரிகாவுக்காக எதையும் செய்ய வேண் டியது தான் என் கடமை என அடிமை விசுவாசத்துடன் செயல்படுகின்றாரா?

இதுவரை எந்த சிங்கள முஸ்லீம் அமைச்சரும் செய்யாத துரோகங்களை தனது துஷ்பிரச்சாரம் மூலம் செய்து வரு கிறார். என்ன அற்பத்தனமான மனிதர்? சந்திரிகாவும் மிக சாதுரியமாக தமிழ னைக் கொண்டே தமிழனுக்கெதிரான பிரச்சாரங்களை உலக அரங்கில் மேற் கொண்டு வருகின்றார். சிங்களத் தலை வர்களின் கபட புத்தியை அறிந்து கொள் வது எப்படி என்பது பற்றி பாடம் கற்றுக்கொள்ள இவர் தலைவர் பிரபா விடம் தான் பாடம் கற்றுக்கொள்ள வேணும். வேறெவருக்குமே இக் கபடங் களை இலேசில் புரிந்துகொள்ள இயலாது.

எமது பழைய கூட்டணி தலைவர்கள் இன்னும் அந்த விவேகத்தைப் பெற வில்லை. சந்திரிகாவின் அரசியல் திட் டத்தை ஆழமாகப் புரியாது அருமை என்று துள்ளிக் குதிக்கிறார்கள். முன்வைக்கப் பட்ட திட்டமே ஓட்டையானது. அதற்கு மேலும் திருத்தங்கள் கொணரப்படவுள் ளதாக இப்போதே அமைச்சர் தெளிவா கக் கூறிவிட்டார்.

காணிப் பகிர்வு, மாகாண அரசு கலைப்பு, வெளிநாட்டுக் கடன் பெறல் ஆகிய விடயங்களில் மத்திய அரசின் அதிகாரத்தைப் பலப்படுத்த திருத்தங்கள் கொணரப்போவதாக கூறிவிட்டார். இப்போது இந்தக் கூத்தணித் தலைவர்கள் என்ன செய்யப் போகிறார்கள். வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி இதுவரை தெளிவாக எதுவும் கூறப்படவில்லை. புதிய தமிழ் அலகு பற்றி பின்பு தான் தீர்மானிக்கப்படுமாம். கிழக்கின் பல பகுதிகளைப் பறித்தெடுக்க திட்டங்கள் தீட்டப்பட்டு விட்டன. இத்தனை தியா கங்கள் கஸ்டங்களின் பின்பு இப்படி ஒரு தீர்வை ஏற்றதானதெனக் கூற கூத்தணித் தலைவர்கட்கு எப்படித்தான் மனம் இடங் கொடுத்ததோ? மற்றைய துரோகக் குழுக் களை விட்டுத் தள்ளுங்கள். அவர்கள் முற்றிலுமாகவே அரசின் பிச்சையில் வாழ்பவர்கள். அவர்கட்கு அரசின் எந்தத் தீர்வையும் ஆதரிப்பது தவிர வேறு வழியே இல்லை. புலிகளுக்கு மட்டுமே இந்தச் சிக்கலான அரசியலைப் புரிந்து கொள்ளும் திறன் உள்ளது. எனவே அவர்களின் கையை எமக்காக ஓங்க வைக்கவேண்டியது எமது கடனே. எமது பிரச்சனைத் தீர்வுகள் போராட்டத்திலேயே வென்றெடுக்கப்பட வேண்டியன. பேச்சுவார்த்தை வெறும் ஜாலமே என்று தான் கொள்ள வேண்டும்.

வ. சின்னரத்தினம்
சவுதி அரேபியா

★★★

பெருமதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கும் உதவு கரங்களுக்கும் என் வணக்கங்கள்..

ஐயா! தாய் மண்ணை விட்டு புலம் பெயர்ந்து அகதி அந்தஸ்துக்கோரி முகாங் களில் முடங்கிக் கிடக்கும் நூற்றுக்கணக் கானவர்களில் நானும் ஒருவன். கிணற்றுத் தவளையாக வெளியுலகம் புரியாத நிலை யில் இருந்த எமக்கு, விடுமுறையில் சென்று திரும்பிய நண்பன் மூலம் தங்களது வெளி யீடான எரிமலை இதழ் கிடைக்கப் பெற்று கண்ணுற்றோம். புலம்பெயர்ந்த எம்மவர் மத்தியில் எவ்வளவு அவசியமான வெளி யீடு என்பதை உணர்ந்து கொண்டோம்.

எமது தேசியத் தலைவர் எம்மீது காட் டும் அக்கறைக்கு ஒரு உதாரணம் இதுவே போதும்.

எமது இனம் மொழி கலாச்சார பழக்க வழக்கங்களை மறந்து அந்நிய மோகத்தில் கட்டுண்டவர் மத்தியிலும், எமது சகோதர சகோதரிகள் தாய் மண்ணுக்காய் மரணித்துக் கொண்டுள்ள போது களியாட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கும், எமது இன மொழி கலாச்சார பழக்கவழக்கங்களின் தனித் துவத்தை விளக்கும் சிறந்த ஊடகமாகவும் உள்ளது. (இப்படிப்பட்டவர்களை நினைக் கவே மனது வேதனையின் விளிம்பில் தள் ளாடுகின்றது) மற்றும் பத்திரிகைத்துறையின் போட்டிகளால் சில பத்திரிகைகள் ஒன் றுக்கு பத்தாக பல முரண்பட்ட தகவல் களை பிரசுரிக்கின்றன. இதன் மூலம் தாய் மண்ணின் நிகழ்வுகளை முழுமையாக அறிய முடியாத நிலையே இருந்தது. தற் போது எரிமலையைக் கண்டவுடன் அக் குறை தீர்ந்து விட்டது. எமது தேசியத் தலை வருக்கும் அவர் எண்ணத்திற்கும் உருவ மைத்த ஆக்குனர்களுக்கும் எமது பணி வான மகிழ்சிகரமான வாழ்த்துக்கள். வாழ்க தமிழ். வெல்க தமிழீழம்.

தங்கள் வெளியீடுகளை ஆவலுடன் எதிர்பார்த்தபடி,

எரிமலை வாசகன்
ம. வாணன்

★★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு
நவம்பர் 1995

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்டு

★

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# உயிரினும் மேலான சுதந்திரத்தை வென்றெடுக்க இன்றே களத்தில் இறங்குவோம்

சிறீலங்கா அரசாங்கங்களின் தமிழ் மக்களுக்கெதிரான கடந்த 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால இனவாத நடவடிக்கைகள் தமிழ்த் தேசியத்தை வளர்க்கவும், விடுதலையின் வேகத்தை அதிகப்படுத்தவுமே உதவியிருக்கின்றன. விடுதலைப் போராட்டத்தை எந்தக் காலத்திலும் பின் நோக்கித் தள்ளியதில்லை. இந்த அடிப்படையில், சந்திரிகா அம்மையாரின் இனவாதம் தோய்ந்த இராணுவ நடவடிக்கைகள் மக்களை அணிதிரட்டவும், பல்லாயிரக்கணக்கான போராளிகளைப் போராட்டத்தில் இணைக்கவும், சுதந்திரத்தை வெகுவிரைவில் நிலைநாட்டவுமே உதவுகின்றன. இனப்படு கொலை வடிவிலான, மக்கள் விரோத நடவடிக்கைகள் மக்களை உடல் ரீதியாக அழித்து வருகின்றன. பல்லாயிரக்கணக்கானோரை அங்கவீனர்ளாக்கி வருகின்றன. பொதுமக்களின் சொத்துடமைகள் கொள்ளையடிக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டு, புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்கப்படுகின்றன. பல இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக, வெய்யிலிலும், மழையிலும் பல மைல்கள் தூரம் சாரிசாரியாக நடந்து செல்ல வைக்கப்படுகிறார்கள். குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள் மாணவர்கள், குழந்தைகள், பெண்கள் என்ற வித்தியாசம் பாராது உடற்கூறுகளைச் சிதறடித்து வருகின்றன. உணவு, மருந்து ஆகியவை அனுப்பப்படாத நிலையில், மக்கள், பசியினாலும், பஞ்சத்தினாலும் வாடும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. மருந்தின்றி, காயம்பட்ட வர்கள் இறந்தும், நோய்கள் பரவி மக்கள் நலிவுற்று மடிந்தும் வருகின்றனர்.

அண்மையில் அமெரிக்கா சென்ற சிறீலங்கா ஜனாதிபதி, தனது தந்தையார் கொண்டு வந்த தனிச் சிங்களச் சட்டம் சரியானதொன்றே என்றும் 80 வீதமானோர் சிங்களம் பேசிய அக்காலகட்டத்திற்குப் பொருத்தமானதே என்றும் வாதாடியுள்ளார். அன்றைய காலகட்டத்தை நோக்குவோமாயின், சட்டவாக்க, நிர்வாக நடவடிக்கைகள் மூலம், தமிழ்மக்களைச் சிங்கள மயமாக்கும் நோக்குடன் அன்றைய சிங்களத் தலைவர்கள் செயற்பட்டதை அவதானிக்கலாம். 80 வீதமாக அல்ல 100 வீதமான சிங்களவர்களைக் கொண்ட தேசமாக இலங்கையை மாற்றும் நோக்குடனேயே அன்றைய சிங்களத் தலைமை மட்டுமல்ல சகல தலைமைகளுமே செயற்பட்டதை நோக்கலாம். அன்றைய செயற்பாட்டை இன்றைய ஜனாதிபதி நியாயப்படுத் துவதையும், இவரது தாயார் அன்று கொண்டு வந்த கல்லூரி மாணவர்க ளுக்கான தரப்படுத்தல் இன்றும் நிலவுவதையும் பார்க்கும் போது ஒரு விடயம் தெளிவாகின்றது. இத்தீவை முழுச் சிங்கள மயப்படுத்தலே இன்றைய ஜனாதிபதியினதும் கொள்கை எனவும், அதன் பொருட்டு தமிழ் மக்களும், அதற்குத் தலைமை தாங்கும் விடுதலைப்புலிகளும் அழிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்து விட்டதும் தெரிகின்றது.

சிங்கள மேலாதிக்கத்தை தமிழ் மக்கள் மேல் ஏற்படுத்தி, அவர்களைப் படிப்படியாக சிங்கள மயப்படுத்தி, இத் தீவிலிருந்து தமிழர்களை பூண்டோடு அழிப்பது என்ற இனப்படுகொலைத் திட்டத்துடன் இன்றைய ஜனாதிபதி செயற்படுவது நன்கு புலனாகின்றது. சமாதானத் தேவதை என்ற முகமூடியுடனும், சர்வதேச சமூகத்தை ஏமாற்றியும் இராணுவ ரீதியாக தமிழின அழிப்பு நடைபெறுகிறது.

சிறீலங்கா அரசாங்கங்களின் இன அழிப்பு நடவடிக்கைகள் உக்கிரமாகக் கட்டவிழ்த்து விடப்படும் போதுதான், தமிழ் மக்கள் அணி திரளவோ, எதிர்ப்புச் செயற்பாடுகளைச் செய்யவோ முன்வருவதில் அர்த்தமில்லை. இன அழிவில் இருந்து எம்மைப் பாதுகாத்து வாழ வேண்டுமாயின் தவிர்க்க முடியாதவாறு நாம் போராட வேண்டும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். 40 ஆண்டுகால வரலாறு தந்த போதனை போதும். எனவே, நாம் அனைவரும் கிளர்ந்தெழுவோம். தாயகத்திலும், வெளி நாடுகளிலும் வாழுகின்ற அனைத்து மக்களும் எழுச்சி பெறுவோம். எமது விடுதலையை நாமே முன்னெடுப்போம். விடுதலைக்கான அனைத்துச் செயற் பாடுகளையும் இன்றே செய்யத் தொடங்குவோம் என்று உறுதி எடுப்போம். எமது உயிரினும் மேலான சுதந்திரத்தையும், எமது தாயினும் மேலான தாயகத்தையும் வென்றெடுக்க இன்றே களத்தில் இறங்குவோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# நெஞ்சில் நிறுத்தி நிதம் தொழுதிடுவோம்

- தேவர் கைலாசபிள்ளை

மாவீரர்களே!
மனிதர்களில் உண்மையானவரே!
மானமுடன் தமிழன்
மானிடத்தில் வாழ
மனமுவந்து தம்உயிரை
ஈகம் செய்த இளவல்களே
கண்ணயர்ந்து தூங்கும் போதும் -
எங்கள்
கண் (மண்ணின்) ணின் மணிகளை
மறப்போமா?
நூல் அறுந்த பட்டம் போல்
நாதியற்று நாயிலும் கீழாக
நசியுண்டு மிதயுண்டு
சினமடங்கி சிரம்தாழ்தி
சிதறுண்டு அடிமைகளாய்
அனாதைகளாய் அகதியாய்
அல்லல்பட்டு வாழ்ந்த தமிழருள்
ஒளிக் கீற்று போல் உதிர்ந்த
ஒப்புயர்வில்லா மறப் புலிகளே
கார்த்திகை திங்கள் என்ன
தமிழனும் தமிழும் வாழும்
காலம் வரை
எங்கள் நெஞ்சில் நிறுத்தி
நித்தம் தொழுதிடுவோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கார்த்திகைப் பூக்களின் கடிதம்




மாவீரத் தெய்வங்களே!

மனிதகுலம் தோன்றுவதற்கு முன்னரே தோன்றியவர்கள் நாங்கள். ஆதித் தமிழ்ப்புலவர்கள் எம்மைக் காந்தள் மலர்கள் எனத் தங்கள் பாடல்களிலே ஒப்புவமை காட்டி மகிழ்ந்தார்கள். இடையில் குறுக்கிட்டதோர் இருண்ட காலம். தமிழும் தமிழர்களும் தமது சிறப்புக்களை இழந்து நின்ற ஒரு காலம். அதன்பின் வாழ்ந்த தமிழர்கள், நாம் கார்த்திகை மாதங்களில் மட்டுமே மலர்வதனால் எம்மைக் கார்த்திகைப் பூக்கள் என அழைத்தார்கள்.

இடையில் வந்த வெள்ளையர்கள் எம்மை முதன் முதலில் கண்டபோது பிரமித்துப் போனார்கள். ஆகா! என்ன அற்புத அழகு! என்று வியந்து போய் அவர்கள் எமக்குத் தந்த இலத்தீன் பெயர் Gloriosa Superba என்பதாகும். பிரபை! மகிமை! அதியுன்னதம்! என்றெல்லாம் இப்பெயருக்கு அர்த்தம் காணலாம்.

இன்று, எமக்கு இந்தப் பெயர்களை விட ஒரு புதிய, மகிமையான பெயரைப் பெறுவதற்கு மிகவும் ஆசையாக இருக்கின்றது.

இன்று, தமிழர்கள் மட்டுமல்ல, முழு உலகமுமே வியப்பினால் பிரமித்துப் போவதற்குக் காரணமாய் நிற்கும் உங்களுடைய பெயரைச் சூடிக் கொள்ளவே நாம் இன்று ஆசைப்படுகின்றோம். தியாகம், வீரம், கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம், இலட்சிய வைராக்கியம் என்ற அருங்குணங்கள் யாவும் ஒன்றாய்த் திரண்டு உருவாகி, வீர வரலாறு படைக்கும் நீங்கள் தான் மகிமைக்கு உரியவர்கள்! மகோன்னதமானவர்கள்! எனவே தான் நாம் உங்கள் நாமத்தைத் தாங்க வாஞ்சிக்கின்றோம்.

மாவீரர் மலர்கள் என்று நாம் புதிய பெயர் பெறுவதற்கு உங்களது ஆசியை நாடி நாம் இங்கு ஒரு விண்ணப்பத்தை விடுக்கின்றோம்!

நீங்கள் பெருமையுடன் ஏந்திச் செல்லும் புலிக்கொடியின் செங்குருதி வண்ணத்தையும், அதன் மங்கல மஞ்சள் நிறத்தையும் கொண்டவர்கள் நாங்கள்! உங்களைப் போலவே நஞ்சைச் சுமப்பவர்கள் நாங்கள்! முதன்முதலில் தன் உயிரைத் தமிழீழ விடுதலைக்காக ஈந்து சென்ற முதல் மாவீரன் மறைந்த மாதமாகிய கார்த்திகையில் மலர்பவர்கள் நாங்கள்! மழை பொழியும், இருண்ட கார்த்திகை மாதத்திலே, ஒளி விடும் அக்கினி மலர்களாகப் பூப்பவர்கள் நாங்கள்! அசுரரின் மார்புகளைப் பிளந்தெறிந்து அந்தக் குருதியாடிய புலிக்கரங்கள் போன்றது எமது தோற்றம்! அடிக்கு மேல் அடி வாங்கி, தன் சொந்த மண்ணிலேயே சுதந்திரமாக உலவமுடியாமல், தனக்குள்ளே கண்ணீர்விட்டுக் கலங்கிச் செய்வதறியாது தவித்த ஈழத்தமிழினம் மறுபடியும் நிமிர்ந்தெழுந்து விடுதலைக்கான மார்க்கத்தில் நம்பிக்கையுடன் பயணந் தொடங்கப் பாதை காட்டிய அருந்தலைவன் அவதரித்த இந்தக் கார்த்திகை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மாதத்தில்தான் நாமும் மலர்வது வழக்கம். எனவே தான் 'மாவீரர் மலர்கள்' என்று பெருமையுடன் கூறிக்கொள்வதற்கு அருகதையுடையவர்கள் நாம் என எண்ணுகின்றோம்.

அதியற்புதமானவர்கள்! மகோன்னதமானவர்கள்! என அழைக்கப்படுவதற்கு உங்களை விட வேறு எவருக்குத் தகுதியுண்டு?

பள்ளி சென்று புதியன பல கற்று, ஆடிப்பாடி மகிழ்ந்திருக்க வேண்டிய பிள்ளைப் பருவம்! இளங்குமரப் பருவ வாலிபர்களும், யுவதிகளும் பருவத்தில் பூத்துச் சொரிந்து, வண்ண வண்ணக் கனவுகளில் வாழ வேண்டிய வசந்தபிராயம்! களங்கமும் கவலையுமற்ற இந்த உன்னத பருவத்தை உதறி எறிந்து விட்டு, தமிழீழம் காண்பதற்கென கையில் ஆயுதத்தையும், மார்பில் நஞ்சையும், இதயத்தில் தமிழீழக் கனவையும் சுமந்து சென்றவர்கள் நீங்கள். உங்கள் இளந் தோள்களில்தான் எத்தனை சுமைகள்! எத்தனை நாட்கள் கொடும் பசியுடன் கிடந்திருப்பீர்கள்! எத்தனை நீண்ட இரவுகள் கண் விழித்துக் கடமையை ஆற்றியிருப்பீர்கள். எத்தனை வேதனைகளையும் கொடுமைகளையும், கொண்ட இலட்சியத்திற்காகத் தாங்கியிருப்பீர்கள்!

இத்தனையையும் யாருக்காகச் செய்தீர்கள்? நீங்கள் வாழ, உங்கள் குடும்பம் வாழ வேண்டும் என்பதற்காகவா இவற்றையெல்லாம் அனுபவித்தீர்கள்? இல்லையே! இனிவரும் எதிர்காலத்தில் ஈழத்தமிழரும் அவரது சந்ததிகளும் சுதந்திரமாக, நிம்மதியாக வாழ ஒரு தேசத்தை உருவாக்குவதற்கல்லவா உங்களுடைய குற்றமற்ற இரத்தத்தைச் சொரிந்தீர்கள்! ஈற்றில், தனக்கென வாழாமல் பிறர்க்கென உயிர் ஈய்ந்த பெருந்தகைகள் என்ற அழியாப் புகழையல்லவா ஈட்டிக் கொண்டீர்கள்!

ஒருவரா, இருவரா, பத்தா, நூறா? ஆயிரம் ஆயிரமாக அல்லவோ உங்களது இளம் இன்னுயிர்களை ஈந்து கொண்டே இருக்கின்றீர்கள்!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற பொய்யாமொழிப் புலவன் வள்ளுவனையும் நாம் நன்கறிவோம்! அவனது கூற்றின் வழி இன்று நீங்கள் யாவரும் தெய்வநிலையை எய்தி விட்டீர்கள் என்பதைத் தமிழர் பெரும்பாலும் உணரவே செய்கின்றனர்.

உணர்வதுடன் மட்டும் நின்று விட்டால் போதுமா?

உங்கள் அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தும் இந்தக் கார்த்திகை மாத நள்ளிரவில் அவர்கள் என்ன உறுதியை மேற்கொள்ளப் போகின்றார்கள் என்பதல்லவா முக்கியம்!

அதுவும், கடல் கடந்த நாடுகளிலே, சிதறிப்போய் வாழும் ஈழத் தமிழர்கள் இன்றைய காலகட்டத்தின் அவசரத்தை, அவசியத்தை, அவர்களது கடமையை உணர்வார்களா?

ஈழத்தமிழனுக்கெனத் தேசம் ஒன்று உருவாகும் மகத்தான வரலாற்றுக் காலம் இது. ஆயிரம் ஆயிரம் இளம் புலிகள் களத்திலும், காட்டிலும், கடலிலும் யுத்த சன்னதராய் நிற்கும் காலம் இது!

எதிரியோ, பன்மடங்கு படைப் பலத்துடனும், புத்தம் புது நவீன ஆயுதங்களுடனும், வெளிநாட்டுப் பண உதவியுடனும் பள்ளிப்பருவத்துப் பாலகர்களையும், பாலகிகளையும் பலி எடுத்துக் கொண்டிருக்கும் நெருக்கடி மிகுந்த நேரம்! களத்துக்கு தாம் பெற்ற குஞ்சுகளை அனுப்பிவிட்டு, வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு தாயும் தந்தையும் தவிக்கும் காலம்!

ஆயிரக் கணக்கில் மக்கள் இருக்க இடமின்றி, உண்ண உணவின்றித் தத்தளிக்கும் காலம்!

இவர்கள் யாவருக்காகவும், நாளை மலரப்போகும் தமிழீழத் தேசத்திற்காகவும், வெளிநாடுகளில் இன்று வசதியாக வாழும் தமிழர்கள் எதை நாம் செய்வோம் என்று சபதம் எடுத்துக் கொள்வார்கள்?

தெட்டத் தெளிவானதொரு இலட்சியம், அதை அடைவதற்குத் தம் உயிரையும் அர்ப்பணிக்கும் இளம்புலிகள், வழிநடத்திக் கூடவே செல்வதற்கு அபாரத் திறமையும், அசாத்தியத் துணிவும், எதற்கும் கலங்காத வைராக்கியமும் மிக்கதொரு தலைமை, இவையனைத்தும் ஒருங்கே கிடைத்துள்ள இந்த அரும் பெரும் சந்தர்ப்பத்தின் மகத்துவத்தையும், அது கோரி நிற்கும் வரலாற்றுக் கடமையையும், கடல் கடந்த தமிழர்கள் நன்குணர்ந்து தமது கடமையை நிறைவேற்றுவார்களா என மாவீரர் மலர்களாகிய நாம் எம்மையே கேட்டு நிற்கின்றோம்!

இன்றிருக்கும் நிலையில், அவர்களிடம் நாம் கேட்பது அவர்களது இரத்தத்தையல்ல! அவர்களது உயிரையும் நாம் கேட்கவில்லையே! நாம் கேட்பதெல்லாம் போரில் ஈடுபட்டிருக்கும் இளம் வேங்கைகளுக்கு மிகவும் அத்தியாவசியமான போராயுதங்களை வாங்குவதற்குரிய நிதியைத்தான்! தமது அன்றாடச் செலவில் ஒரு சிறு பகுதியை அவர்கள் யாவரும் அளிப்பதற்கு முன்வருவார்களேயானால், மேலும் மேலும் எமது இளஞ்சந்ததியை நாம் பலியாகத் தாரைவார்க்க வேண்டியதில்லை என்ற உண்மையை அவர்கள் யாவரும் உணர்ந்து, உடனடியாகவே செயலாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு நாம் ஆவலுடன் தமிழீழ மண்ணில், இந்தக் கார்த்திகையில் பூத்துக் காத்து நிற்கின்றோம்.

இப்படிக்கு,

உங்களை என்றும் இதயத்திலிருத்தி வணங்கி நிற்கும் மாவீரர் மலர்கள்.

**ஆக்கம்: அ. பாலமனோகரன்**



**ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல; அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு; ஒரு உன்னத இட்சியம் உயிர் பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை; அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை. அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக் கொள்கின்றது; ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டியெழுப்பி விடுகின்றது.**

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# வீரயுகம்

**நாக. பத்மநாதன்**

தலையை உயர்த்தி, கண்களை விழித்துப் பார்க்கும் போது தான் தெரிகிறது - அந்தக் கொடிக் கம்பத்தின் உயரம்!

சுற்றிலும் பரந்த வெளி!

அங்கு காற்றுடன் கலந்ததைப் போன்ற வடிவங்கள் ஒரு சில!

உரையாடலின் ஒலி!

வெய்யிலையும் வெளியையும் கடந்து செல்கிறோம்.

அங்கு காட்சி தருவது யார்? நன்றாகத் தெரிகிறது! அவள் வேறு யாருமல்ல- ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஐந்தாம் ஆண்டு தான்!

அணங்கென அவள் தலை நிமிர்ந்து நிற்கிறாள்!

அருகே உயரம் குறைந்ததைப் போல முன்னைய சில ஆண்டுகள்! சோர்வாம், ஏக்கமாம், தயக்கமாம், கவலையாம்! இது முப்பது வருடங்களுக்கு முன்னர்!

ஆண்டு 1995! அவள் வளர்ந்து தலை நிமிர்ந்து நிற்கிறாள், துணிவின் வடிவமாய்!

விடுதலைப்போரின் உருவமாய்! ஈகத்தின் உயிராய்! விடுதலை வரலாறாய்!

"என்ன, சோர்வு கொள்கிறீர்களா! ஏன்?" என்கிறாள்.

கண்கள் மின்னுகின்றன;

குரல் முழங்குகிறது!

"இல்லை!" என சுற்றிலும் நின்றவை சிறிது உயர்கின்றன.

"அப்படிச் சொல்லுங்கள்!" என்கிறாள். இன்னும் விசாலித்து அவள் உலகைப் பார்க்கிறாள்!

உலகம் அவளை வியந்து பார்க்கிறது!

"மரணமும் இறப்பும்! இவற்றை வீரச் சாவென ஆக்கியவர்கள் நாங்கள்!" என்கிறாள்.

"பலர் எண்ணத் துணியாத உச்ச வெற்றி எய்தியவர்கள்- இன்னும் எய்த இருப்பவர்கள் நாங்கள்!" எனக் கண்கள் சிவக்கக் குரல் தருகிறாள் அவள்.

"துன்பம் தர வருபவனைக் கண்டு துவளாதே, சிரித்தெழு! அடிக்க வருபவனை அடி! அழிக்க வருபவனை நீ முற்றாக அழி! இது எம் பொய்யா மொழி!"

"கொல்ல வருகிறானா? அவனைத் தேடி நீ கொல்!" இது வரலாற்றுத் தலைவனின் வாக்கு!

வானம் தெரிந்தது!

தரையில் எம் படை அணிகள்! தமிழினத்தின் முழு வடிவமாய் எழுந்த எம் விடுதலைப் புலி அணிகள்!

இழப்புக்களால் மனம் சோரவில்லை. உறுதியே பெருகியது! இடர் வந்த போது உறுதியைப் பெருக்கிய தமிழீழத் தாய் மண்!

சிரிக்க முயன்ற பகைவன் மீண்டும் தலை கவிழ்கிறான்!

இறுதியில் அவன் பொய்யை நாடினான்; அதுவும் கைவிடும் காலமாகியது!

வீர வரலாறு- தமிழீழ விடுதலை- உருவாகிக் கொண்டிருந்தது! தமிழினத்தின் விறல் எனப் புலிக்கொடி அதன் உயர் கம்பத்தின் உச்சியில் பறந்து கொண்டிருந்தது!

சிரித்தெழுந்த பகைவன் மீண்டும் அழிந்து கொண்டே இருந்தான்!

## விலங்கை உடைத்தெறிய வயதெல்லை எதற்கு?

தமிழினமே, தமிழினமே
வேர்வை சிந்தி
உதிரம் சிந்தி
உடலைக் கொடுக்கிறோம்;
எங்கள் உயிரை
மகிழ்ந்து கொடுக்கிறோம்.
வீரமுடனே,
எதிரிப் படைமேல்
எழுந்து பாய்கின்றோம்.
பகை முற்றாய் முடிக்க
தலைவன் வழியில் நாங்கள்
செல்லும் வேளையிலே
உனக்கு வயதெல்லை எதற்கு?

அடிமைத் தளையை
உடைதெறிய
காலிழந்தும் புலிவீரர்
எதிரிமேல் பாய்கிறார்கள்
பார்த்தாயா?
பெண்களுமே
போர்க்களத்தில்
வேங்கைகளாய்ப் பாய்கையிலே
உனக்கு வயதெல்லை எதற்கு?

பத்து வயது
நிரம்பாத வயதினிலே
போர்க்களத்தில் ஆடுகிறான்
புலிவீரக் கொழுந்து அவன்
துவக்கெடுத்துப் போராட
மீசை தாடி வேண்டுமா?
இனியும் வயதெல்லை எதற்கு?

எண்பது வயதினிலும்
மணலாற்றில் எழுந்து நிற்கிறது
எங்கள் துணைப்படை
காவிய நாயகன் வழியிலே
தமிழீழம் மலரும் என்ற
அசையாத உறுதியுடன்
இதன் பின்னும்
உனக்கு வயதெல்லை எதற்கு?
செந்தமிழன் வீரமுடன்
மனைவியிடம் விடைபெற்று
போர்க்களம் சென்றகதை
தெரியவில்லைப் போலும்!
செந்தமிழா உனக்கு
தன்மானம் அற்றுப்
போய்விட்டதா?
இல்லையென்றால்.....
எழுந்துவா போராட!
பழந்தமிழன் எல்லாளன்
இந்த மண்ணில்
எழுபது வயதினிலும்
போரிட்டுமடிந்த வரலாறு
தெரியவில்லைப் போலும்!
தெரிந்திருந்தால் எழுந்துவா-
இதன் பின்னும் உனக்கு
வயதெல்லை எதற்கு?

இளம் மீசை
அரும்பும் முன்னே
கன்னியர்பின் சுற்றுகிறாய்
காதல் உணர்வுனக்கு
அதிகம் போலும்!
சுதந்திர உணர்வுடனே
வீரமதை நெஞ்சிலேற்றி
போராட வா மகனே,
விரைவாக!
தீவகக் காற்றுக்கூட
எமக்குத் தணலாகச்
சுடும் வேளையிலே
கோட்டை முதல்
காக்கை தீவுவரை
மாலைப் பொழுதினிலே
உனக்கென்ன வேலையங்கு?
அசுத்தக் காற்றை
நீ விரும்புவதேன்?
வேண்டாம் எழுந்துவா -
சுதந்திரத்தை
விரைவாக்குவோம்!
வயதெல்லை எதற்கு?

(27-07-95 அன்று மண்டைதீவுப் பகுதியில் வீரச்சாவடைந்த, கப்டன் குமரேசன் எழுதிய கவிதை)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தலைநகரில் இட்ட தீ

சிறீலங்கா இராணுவம் அணியும் சீருடையைப் போன்று உடை அணிந்து, T-56 ரக துப்பாக்கிகளுடனும் வாக்கிடோக்கிகளுடனும், இலகு டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களுடனும் (Light Anti tank Weapons - LAW) எதிரியின் இலக்கு நோக்கிய கம்பீரமான நகர்வு. கண்ணிமைக்கும் நேரத்தில் கொமான்டோ பாணியிலான திடீர்த்தாக்குதல்.

இத் தாக்குதலின் திட்டமிடல், இலக்கின் மீது குறி தவறாத பாய்ச்சல், துணிச்சல், வேகம், விவேகம், என்பன யார் இந்தத் தாக்குதலை நிகழ்த்தியிருப்பார்கள் என்ற ஐயத்தை எழுப்வில்லை.

தாக்குதலை நடாத்தியவர்கள் உரிமை கோரமுன்னர், செய்தித் தணிக்கையையும் மீறி எல்லோரது கவனமும் கொழும்பை நோக்கியே இருந்தது. உலகச் செய்தியாளர்கள் பலருக்கும் 'இலங்கையில் என்ன நடக்கிறது?' எனும் ஆவலைப் புதிதாய் பிறப்பித்திருந்ததைக் காணக் கூடியதாய் இருந்தது. வானொலிகள், தொலைக்காட்சிகள் இத் தாக்குதலை விடுதலைப்புலிகளே நடாத்தினர் என கூறின. அவை அவ்வாறு கூறுவதற்கு அத் தாக்குதலின் வெற்றி, தாக்கு திறன், துணிச்சல் என்பன காரணமாயிருந்திருக்கலாம்.








20-10-95 அதிகாலை சிறீலங்காவின் தலைநகர் தனக்கே உரித்தான வீறாப்புடன் மிகவும் பாதுகாப்பாக உள்ளோம் என்ற பெருமையுடன் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. சிறீலங்கா இராணுவத்தின் தலைமைப்பீடம் யாழ். குடாநாட்டு முற்றுகையில் கண்ணும் கருத்துமாக இருந்தது. கொழும்பின் சுற்றுப்புறத்தில் இடைக்கிடையே வாகனங்களின் உறுமல் சத்தங்கள் அதிகாலையின் அமைதியைக் குலைத்தன. ஒரு லொறியிலும் வானிலும் வந்த தாக்குதல் அணியினர் சுமார் 1.30 மணியளவில் எண்ணெய்க் குதங்கள் உள்ள வலயத்தினுள் நுழைகின்றனர். வந்தவர்கள் இரு குழுவாகப் பிரிந்து தாக்குதலுக்கு தயாராகின்றனர். ஒரு குழுவினர் உறுகொடவத்தை மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்குள்ளும், இன்னொரு குழுவினர் கொலன்னாவை மசகு எண்ணை சுத்திகரிப்பு நிலையத்திற்குள்ளும் நுழைகின்றனர்.

உறுகொடவத்தை இலக்கு மீது இலகு டாங்கி எதிர்ப்பு ஆயுதம் கொண்டு தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இதன் போது அப்பகுதியில் அமைந்திருந்த நான்கு எண்ணெய்க் குதங்களில் மூன்று தீப்பிடித்துக் கொண்டன. உறுகொடவத்தை தாக்குதலை அடுத்து உஷாரடைந்த கொலன்னாவை எண்ணெய்க்குதக் காவல் கடமையில் ஈடுபட்டோர், தாக்குதல் நடாத்துவோர் தம்மை நெருங்கி வருவதை அவதானித்துள்ளனர். தாக்குதல் நடாத்த வந்தவர்கள் திடீரென உந்துகணைகள் (Rockets) மூலம் தாக்குதலை ஆரம்பித்தனர். சில வினாடிகளுக்குள் 2

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





எண்ணெய்க் குதங்கள் பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறின. இதனால் ஏற்பட்ட தீச்சுவாலை பல அடி உயரத்திற்கு எழுந்து ஓங்கி எரிந்தது.

கொலன்னாவை எண்ணெய்க் குதங்கள் அமைந்துள்ள பகுதி 9 வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஒன்பது வலயத்தினுள் 40 குதங்கள் இருந்தன. முதலாம், மூன்றாம், நாலாம், ஆறாம், இலக்க எண்ணெய்க்குதங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இன்னும் நான்கு குதங்கள் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளன. கொலன்னாவையில் மாத்திரம் 12 குதங்கள் நாசமாக்கப்பட்டன. தாக்குதல் நடாத்திய அணியினருக்கும் எண்ணெய்க்குதங்களின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களுக்கும் இடையில் சண்டை மூண்டது. தாக்குதல் அணிவீரர்களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது சிங்களப் படைகளைச் சேர்ந்தவர்கள் பின்வாங்கியும் ஓடியிருக்கிறார்கள். ஒரு மணி நேரமாக நடந்த சண்டையில் பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இலங்கைத் தீவில் நடக்கும் போராட்டத்தில் தாக்குதல் நடவடிக்கைகளை தாம் கண்டது இதுவே முதன் முறையாகும் என வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

தாக்குதல் ஆரம்பமானதும் தாக்குதல் நடத்தவந்தவர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் நிலையை நோக்கி வந்தபோது அங்கிருந்த பொலிஸ்காரர் ஒருவர் அவ்விடத்தை விட்டு ஓட முயல்கையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

இது தவிர எண்ணைக் குதங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் இரு சாராருக்குமிடையே சண்டைகள் தொடர்ந்தன. தாக்குதலை வெற்றிகரமாக ஆரம்பித்தவர்கள் தமது நோக்கம் நிறைவேறும் வரை அப்பகுதிகளிலேயே நின்று சிறீலங்கா படையினரும், தீயணைப்புப் படையினரும் நெருங்காத வண்ணம் தாக்குதலை நடாத்திக் கொண்டிருந்தனர். தாக்குதலின் ஆரம்பத்தில் உந்துகணைகளால் ஒரு சிலர் சிறீலங்கா பாதுகாப்புப்படையினர் மீது தாக்குதல் நடாத்த, தாக்குதல் அணியின் ஒரு பிரிவினர் எண்ணெய்க்குதங்கள் மீது அதி உயர் வெடிமருந்துகளைப் பொருத்தினர். இவ்வாறு பொருத்தப்பட்ட வெடி மருந்துகள் அதிகாலை இரண்டு மணிக்கு வெடித்தன.

தாக்குதல் நடத்த வந்தவர்களிற்கும் எண்ணெய்க்குதங்களைப் பாதுகாக்க நினைத்தவர்களுக்குமிடையே நடை பெற்ற சண்டையில் பத்து விமானப்படையினரும், எட்டு இராணுவத்தினரும், ஐந்து பொலிசாரும், இரண்டு விசேட அதிரடிப்படை வீரர்களும், இரண்டு காவலர்களும் ஆகியோர் கொல்லப்பட்டனர். இந் நடவடிக்கையின் போது தாக்குதல் நடாத்தியவர்களது இழப்புக்கள் இது வரை சரியாக அறியப்படவில்லை. இந்த தாக்குதல் நடவடிக்கையால் 40,000 தொன் டீசல் 15,000 தொன் மண்ணெண்ணெய் 90,000 தொன் எண்ணெய்ப் பொருட்கள் எரிந்து நாசமாகின. சிறீலங்காவிடமிருந்த எரிபொருட்களில் 20 வீதம் நாசமாகியது. எரிந்து நாசமாகிய எரிபொருட்களின் பெறுமதி 100 கோடி ரூபாய்கள் எனவும் நாசமாகிய தாங்கிகள் உபகரணங்களின் பெறுமதி 50 கோடி ரூபாய்கள் எனவும் மதிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காவின் பொருளாதாரத்திற்கு விழுந்த பேரிடியாக இந்த தாக்குதல் நிகழ்ச்சி கருதப்படுகின்றது. சிறீலங்காவின் இராணுவச் செலவு அதிகரித்துக்கொண்டு செல்லும் வேளையில் இந்த இழப்பையும் சிறீலங்கா அரசு எவ்வாறு ஈடுசெய்யப் போகின்றது என்பது அதன் முன் எழுந்து நிற்கும் பூதாகரமான பிரச்சனையாக அமைந்து விட்டிருக்கிறது. அக்டோபர் மாதம் அரசாங்கம் பாராளுமன்றத்தில் மேலதிகமான பாதுகாப்புச் செலவுக்காக 8.6 பில்லியன் ரூபாய்களை ஒதுக்கும்படி கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

சிறீலங்காவின் தலைநகரிலேயே அதன் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பு இதுவாகும். கொழும்பிலேயே பாதுகாப்பு ஸ்திரத்தன்மையை பேண முடியாத சிறீலங்கா அரசினது, யாழ். குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான போர் முயற்சிகள் எத்தகைய தோல்வியைத் தழுவிக் கொள்ளும் என்பதை காலம் நிச்சயம் உணர்த்தும்.

தலைநகரின் அதிஉயர் பாதுகாப்பு வலையத்தினுள் ஊடுருவி பொருளாதார இலக்கை அழிக்க முயன்ற அதேவேளை அதன் பாதுகாப்புக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தினர் அத்தாக்குதல் அணியினர். அவ்வீரர்கள் சிங்கள அரசியல் தளத்தையும் ஆட்டங்காண வைத்துள்ளனர்.

– தர்மு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இருள் பரப்பும் சூரியக் கதிர்

யாழ் குடாநாட்டில் இறுதியாக 16-10-95 அன்று ஆரம்பித்த சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் பெயர் 'சூரியக் கதிர்'. (சூரியப் பிரகாசம் என்றும் அழைக்கப் படுகிறது) இந்தச் சூரியக் கதிர் ஒளியைத் தருவது அல்ல. தமிழர் தம் வாழ்வில் இருளைக் கொண்டு வருவது. இருளுக்குப் பூசப்பட்ட மினுக்கு வண்ணமே தவிர ஒளிப்பாய்ச்சல் அல்ல. 'கைகுலுக்கல் 1', 'கைகுலுக்கல் 11', 'இடிமுழக்கம்' என்ற வரிசையில் இது கடைசியான நடவடிக்கை. இதன் குறிக்கோள், முதலில் யாழ் நகருக்குச் செல்வது. பின்னர் யாழ்ப் பாணக் குடாநாட்டைக் கைப்பற்றுவது. இச் செயற்பாட்டால் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தையும் அழித்து, விடுதலைப் போராட்டத்தையும் நசுக்கி விடலாம் என்ற கனவு. பலாலியில் இருந்த தெற்கு நோக்கி, அச்சுவேலி, புத்தூர், நவகிரி, நீர்வேலி என்ற ரீதியில் யாழ் நகரை நோக்கி முன்னேறுவது இராணுவ தந்திரோபாயமாக உள்ளது. அதே வேளை, தெல்லிப்பளை, அளவெட்டிப் பகுதியிலிருந்து சங்கானை, சண்டிலிப்பாய் நோக்கியும், மாதகலிலிருந்து வட்டுக்கோட்டை, சுளிபுரம் நோக்கியும் முன்னேறும் முயற்சிகளும் இடம்பெற்று முறியடிக்கப் பட்டுள்ளன. அச்செழுப் பகுதியிலேயே கடுமையான சண்டைகள் இடம் பெற்று முறியடிக்கப்பட்டுள்ளன. அச்செழுப் பகுதியிலேயே கடுமையான சண்டைகள் இடம்பெற்று வருகின்றன.

புத்தூர், ஆவரங்கால் பகுதிக்குள் ஆழமாக ஊடுருவி நுழைந்து, விடுதலைப்புலிகள், இராணுவப்படை அணியின் முதுகெலும்பை முறியடிப்பதற்கான ஓர் முயற்சியை 10-10-95 அன்று மேற்கொண்டனர். அது நினைத்த வெற்றியை அளிக்கவில்லை. இரண்டு முக்கிய நடவடிக்கைகள் மூலம் இராணுவம் தப்பிப் பிழைத்துக் கொண்டது. ஒன்று, ஏராளமாக பரா லைற்றுக்கள் மூலம், ஒளி வெள்ளத்தை ஏற்படுத்தி, நீண்ட நேரம் இரவைப் பகலாக்கி வைத்திருந்தனர். மேலும் தங்களிடமிருந்த அநேகமாக அனைத்து வெடிபொருட்களையும் கண்மூடித்தனமாக சுட்டுத் தீர்த்தனர். இதன்மூலம், இராணுவம் தனக்கு வரவிருந்த பேரழிவைத் தடுத்து நிறுத்தியது. மேலும், இத்தாக்குதல் நடைபெறும் என்று இராணுவம் கணக்கிட்டு இருந்ததால் தாக்குதலின் போது இருக்க வேண்டிய அதிர்ச்சி அங்கு இருக்கவில்லை. ஆயினும், இராணுவம், தனது வெடிபொருட்களைக் கணிசமாக இழந்ததால், கொழும்பிலிருந்து அடுத்த நகர்வுக்கு விநியோகங்களை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வெதிர்த் தாக்குதலின் போது, இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டதோடு, விடுதலைப் புலிகள் தரப்பிலும் 150 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இராணுவத்துக்கு ஆகாய வழி விநியோகங்களும், கடல் வழி விநியோகங்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. AN-32 போன்ற விமானங்கள் மூலம், ஆகாயவழி விநியோகங்கள் தொடர்ந்து நடைபெறுகின்ற போதிலும் பாரிய கடல் வழி விநியோகங்களே பொருத்தமாக உள்ளன.

> உங்களுக்கு எவ்வளவு தெரியும் என்பது முக்கியமானதல்ல. உங்களுக்குத் தெரிந்ததைக் கொண்டு எவ்வளவு செய்து முடித்தீர்கள் என்பதே முக்கியமானது.
>
> - ஹேரி மேடாக்ஸ்

எனவே, கடற்படைப் படகுகளை தரையிறங்கு கலங்களை, விநியோகக் கப்பல்களை அழித்தொழிக்கும் செயற்பாட்டில் கடற்புலிகளின் விசேட படை அணிகள் இறங்கின. இத்தகு தாக்குதலில், திருகோண மலைத் துறைமுகத்துள், ஒரே நேரத்தில் மூன்று கப்பல்கள் தாக்கி மூழ் கடிக்கப்பட்டமை உலக சாதனையாக அமைகிறது. உயர் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த திருகோணமலைத் துறைமுகத்துள் 2-10-95 அன்று வேவுப்பிரிவினரும், கடற்புலிகளின் நீரடி நீச்சல் பிரிவினரும் ஊடுருவி, தரையிறங்கு கலம் ஒன்றையும் இராணுவத்தினரைக் காவிச் செல்லும் கப்பல் ஒன்றையும், டோராப் படகொன்றையும் தாக்கி மூழ்கடித்த நிகழ்ச்சியானது இராணுவ விநியோக நிலைமையை மிக மோசமாகப் பாதித்திருக்கும். மேலும் 2-10-95 அன்று முல்லைத்தீவுக் கடலில் வைத்து, 'ரணகஜ' என்ற தரையிறங்கு கலமும், டோராப்படகொன்றும், பாரிய சேதத்துக் உட்படுத்தப்பட்டதும் இராணுவத்துக்கான விநியோகத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் தான். இப்படியான ஒரு நெருக்கடி நிலையில் அரசாங்கம் வடபகுதிக்கான உணவு விநியோகக் கப்பல்களை, இராணுவ விநியோகங்களுக்குப் பயன்படுத்தும் முயற்சியில் இறங்கியது. முன்னர், சர்வதேச செஞ்சிலுவை சங்க பாதுகாப்புடன் இராணுவத்துக்காக விநியோகம் நடைபெற வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்தியதை செஞ்சிலுவைச் சங்கம் மறுத்ததை அடுத்து, வடபகுதி உணவு விநியோகம் என்ற போர்வையில் இராணுவ விநியோகங்களைச் செய்ய அரசாங்கம் முற்பட்டது. இந்த அடிப்படையிலையே உணவு விநியோகத்துக்காக யாழ் அரச அதிபர், ஒழுங்கு செய்த 'கெந்தள' கப்பலை, உணவுப்பற்றாக் குறையால் வாடும் யாழ் குடாநாட்டு மக்களுக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்வதாக பிரச்சாரம் செய்து கொண்டு, அக்கப்பலில், இராணுவத்துக்கான ஆயுத தளபாடங்களையும், வெடிபொருட்களையும் காங்கேசன்துறைக்கு அனுப்பி வைத்தது சந்திரிகா அரசாங்கம்.

ஒக்ரோபர் 22-ம் திகதி, அச்செழுவில் நடைபெற்ற சணடையில், மூன்று டாங்கிகள் அழிக்கப்பட்டு, மூன்று டாங்கிகள் பாரிய சேதத்திற்கு உட்பட்ட நிகழ்ச்சியும் அரசாங்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கத்தின் இராணுவ நடவடிக்கையில் பெரும் பின்னடைவையும் சீர்குலைவையும் ஏற்படுத்தி உள்ளன.

அதேவேளை, கொழும்பில், கேந்திர முக்கியத்துவமும், இறுக்கமான பாதுகாப்பும் கொண்ட கொலன்னாவை, உறுகொடவத்தை எண்ணெய்க் குதங்கள் தாக்கி அழிக்கப்பட்டமை இராணுவத்துக்குப் பெரும் அடியாக அமைந்தது. வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்கு அவசியமான கப்பல்களுக்கு வேண்டிய 'டீசல் எண்ணையும்' விமானங்களுக்குத் தேவையான விமான எரிபொருள்களும் அழிந்து சாம்பராகியமை குடாநாட்டுத் தாக்குதலில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. உள்ளூர், வெளிநாட்டு பயண விமானிகளுக்கே எரிபொருள் வழங்க



முடியாத நிலையில், இராணுவத் தேவைகளுக்கான எரிபொருள் விநியோகம் பெரிதும் மழுங்கடிக்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கால கட்டத்தில் நடைபெற்ற இன்னொரு சம்பவமும் முக்கியம் பெறுகிறது. மட்டக்களப்பு நகருக்கு அண்மையிலான கல்லடி முகாமிலிருந்து *16-10-95* திகதியன்று பெரும் அளவிலான படையெடுப்பொன்றை, விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கரடியானாற்று பகுதிக்கு இராணுவமும், பொலிஸ் அதிரடிப் படையினரும் மேற்கொண்டனர். இப்படை எடுப்பு பெரும் தோல்வியில் முடிவடைந்தது இராணுவத் தரப்பில் *32* பேர் கொல்லப்பட்டு, பவல் கவச வாகனங்களும் அழித்தொழிக்கப்பட்டதை அடுத்து, இராணுவம் மீண்டும் முகாமிற்குள் முடங்கிக் கொண்டது.

மேலும், அம்பாறை, பொலநறுவை அநுராதபுரம், மணலாறு ஆகிய பகுதிகளிலுள்ள, ஆயுதம் தாங்கிய சிங்களக் குடியேற்றங்களும் தாக்கப்பட்டுள்ளன.

இவ்வனைத்துச் சம்பவங்களினதும், ஒட்டு மொத்தத் தொகுப்பை அலசி ஆராயும் போது, கேணல் ரத்வத்தையின் இராணுவ முயற்சிகள் எங்கு முடிவடையும் என்பதை சூசகமாக வெளிப்படுத்தி நிற்கின்றன. கிழக்கு மாகாணத்திலிருந்து அரைவாசி இராணுவம் வடபகுதிக்கு அனுப்பப்பட்டு அப்பகுதியின் இராணுவ சிறுமுகாங்களும் சிங்கள ஆயுதக் குடியேற்றங்களும் தாக்கப்படும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டன. இதன் விளைவாக, சிங்கள குடியேற்றங்களும், இராணுவ முகாம்களும் அகற்றப்பட்டு பெரும் பகுதி நிலங்கள் தென் தமிழீழத்தில் பூரண விடுதலைக்கு வழிவகுக்கும் என்று எதிபார்க்கலாம். தென் தமிழீழம் ஆயுதப் போராட்ட ரீதியில் விடுவிக்கப்படுவது, விடுதலைப்போராட்டம் வெற்றி பெறவும், போர் முடிவுறவும் தவிர்க்கமுடியாத முன் நிபந்தனைகளாக உள்ளன. கிழக்கு மாகாணம், இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து பறிபோகும் ஆபத்தை எதிர்கட்சித் தலைவர்கள் நன்கு உணர்ந்து கொண்டு ரத்வத்தையின் இராணுவத் தந்திரோபாயத்தின் சமயோசிதம் குறித்துக் கேள்வி எழுப்பி உள்ளனர். மேலும், கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பில் அண்மையில் நடந்த சண்டைகள், தாக்குதல்கள், நகர்ப்புறங்களை இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் மட்டும் போரை முடித்து விடலாம் என்ற இராணுவத்தின் போர் உத்தியைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

மேலும், நகர்ப் புறங்களில் விடுதலைப்புலிகளின் ஊடுருவல், அவற்றின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை மட்டுமல்ல, நகரப்புற கெரில்லா நடவடிக்கைகளால், அரசியல், இராணுவ, பொருளாதார கேந்திர நிலைகள் தாக்கப்படும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. இது அரசியல் ஸ்த்திரத்தையே பெரிதும் பலவீனப்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் யாழ் குடாநாட்டைக் கைப்பற்றும் ரத்வத்தையின் முயற்சி எதில் முடிவடையும் என்று ஊகிக்கக் கூடியதாக உள்ளது. *50* ஆயிரம் சிங்கள இராணுவத்தினர் யாழ்குடாநாட்டுக்குள் முடக்கப்பட்டு, அழித்தொழிக்கப்படும் நிலையே ஏற்படும் என்று இராணுவ ஆய்வாளர்கள் ஆருடம் தெரிவித்துள்ளார். பருவ மழையின் வருகையுடன் விநியோகக் குறைபாடுகளுடன் இராணுவம் குடாநாட்டினுள் முடக்கப்பட்டால், பெரும் அழிவைச் சந்திக்க நேரிடும் என்று, முன்னாள் விமானத் தளபதி ஹரி குணதிலக எச்சரித்துள்ளார். கிழக்குப் பகுதியையும், இழந்து, குடாநாட்டினுள்ளும் இராணுவமும் பெரும் அழிவைச் சந்திக்க நேர்ந்தால் சந்திரிகாவின் அரசியல் அடித்தளமும் உடைந்து கொட்டிட்டு விடும் சந்திரிகாவும் தூக்கியெறியப்பட்டால் என்ற கருத்துப் பலமாக நிலவுகிறது. வெளிநாடுகளிலிருந்து கிடைக்கக் கூடிய இராணுவ, நிதி உதவிகள் இவ் ஆபத்தைத் தடுத்து நிறுத்த உதவா என்ற கணிப்பே காணப்படுகிறது. இராணுவ நடவடிக்கையின் போது ஏற்படுகின்ற மக்கள் அழிவு, பொருட் சேத அழிவு, அகதிகள் துன்பம், சிங்கள, தமிழ் தேசங்களை நிரந்தரமாகப பிரித்து விடும் சூழ்நிலையும் அப்போது ஏற்பட்டு விடும்.

**– வளவன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போராட்டமே வாழ்வு

**தமிழீழத்திலிருந்து வெளிவரும் ஈழநாதம் ஆசிரியர் தலையங்கம்**

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வாழ்வா சாவா என்றதொரு பிரச்சினையே இன்று முதன்மையான பிரச்சினை. இந்த நிலையில் போராடினால் வாழ்வு; பயந்தோடினால் சாவு என தமிழீழ அரசியல் துறையினர் போராட்டத்தில் அணி திரளுமாறு தமிழ் மக்களுக்கு விடுத்துள்ள அறைகூவலில் தெரிவித்துள்ளமையானது முற்றிலும் இன்றைய யதார்த்தத்தை பிரதிபலிப்பதாகவே உள்ளது. ஏனெனில் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பதில் சிறீலங்கா அரசாங்கம் உறுதியாகவே உள்ளது. எந்த வகையிலாவது, எவ்வளவாயினும் யாழ்ப்பாணக் குடாநாட்டை கைப்பற்ற வேண்டும் என்ற குறிக்கோளிலேயே சிறீலங்கா அரசு உள்ளது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என அரசு கூறுவது எல்லாம் வெறும் கண்துடைப்பு ஆகும். இதே சமயம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பது அரசாங்கம் கூறிக்கொள்வது போன்று புலிகளை பலவீனப்படுத்துவதோ அல்லது பேச்சுவார்த்தை நோக்கம் கொண்டதாகவோ இல்லை. இராணுவத் தீர்வு என்பது இனப்பிரச்சினைக்காக போராடும் சக்தியை, ஆற்றலை தமிழ் இனத்திற்கு இல்லாது செய்வதே ஆகும். இந்த நிலையில் இராணுவத் தீர்வு என்பது இனப்படுகொலை முதல் தமிழரின் வாழ்வை அவர்களிடமிருந்து அடியோடு பெயர்க்கும் நடவடிக்கையும் ஆகும். அதாவது இனப்படுகொலை மூலம் தமிழினத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கை ஒரு புறம் இருக்க, எஞ்சிய பகுதியினரையும் அவர்களின் வாழ்விடங்கள், கிராமங்கள், ஆகியனவிலும் இருந்து அடியோடு பெயர்த்தெடுக்கும் நோக்கம் கொண்டதாகும். மக்களை அகதி முகாம்களில் ஒதுக்கி அவர்களை இன்னல் உள்ள வாழ்விற்கு உட்படுத்துவதன் மூலம் போராடும் உணர்வை அவர்கள் மத்தியிலிருந்து மழுங்கடிக்கச் செய்வதாகும். உலக வரலாற்றில் பல இடங்களில் இவ்வாறான முயற்சிகள் இல்லாமல் இல்லை. இதே சமயம் இராணுவத்தின் பிரவேசமானது இளம் சமூகத்தை பூண்டோடு அழித்து விடக்கூடியதாகும். கடந்த காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகளில் சிறீலங்கா இராணுவம் ஈடுபட்டு வந்துள்ளது வெளிப்படையானதே. 1990-ல் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் ஒரு தொகை இளைஞர்கள் கிழக்கில் காணாமல் போனது இங்கு சுட்டிக்காட்டக் கூடியதும் ஞாபகத்தில் கொள்ளக் கூடியதும் ஆகும். இவ்வாறாக ஏற்பட்டுள்ள ஆபத்தை போக்குவது என்பது தமிழ் மக்களின் கைகளிலேயே உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் எமது அழிவையும் இழப்பையும் கண்டு உலகம் சிலசமயம் கவலை தெரிவிக்கலாம்; கண்டனம் தெரிவிக்கலாம். உலக வரலாற்றில் ஒரு இனம் அழிந்து விட்டதே என சில சமயம் குறிப்பிடலாம். ஆனால் இவை எவையும் எமது மக்களின் வாழ்விற்கு உதவப் போவதில்லை. இழப்பின் பின் ஏற்படும் கண்டனங்களும், கவலையும் இறந்தபின் செய்யும் அஞ்சலிக்கு ஒப்பானதே ஒழிய, ஒருவரின் வாழ்விற்கோ இன்றி நெருக்கடியிலிருந்து விடுபடவோ உதவப்போவதில்லை. ஆனால் தமிழினத்திற்கு ஏற்பட்டுள்ள இச் சவாலினால், இதற்குள்ள ஒரே மார்க்கம் அழிவது மட்டும் தான் என்பதல்ல. இவர்களது எதிர்காலம் சுதந்திர வாழ்விற்கும், உலகில் வெற்றிகரமான வரலாற்றைப் படைத்தவர்கள் என்ற பெருமையை தேடிக் கொள்ளவும் அதற்கான வாய்ப்பும், வழியும் உண்டு. அதாவது சிங்கள இராணுவத்தினரின் படுகொலைகளில் இருந்து தமிழனைக் காப்பாற்றவும் தமிழ்த் தேசிய இனத்தைக் சிதைய விடாது காக்கவும் விடுதலைப்புலிகள் இயக்கமும், ஆற்றலும் செயற்திறனும் மிக்க தலைமையும் உண்டு. ஆனால் அதில் பற்றாக்குறையாக இருப்பது போரிடுவதற்கான ஆள் பற்றாக்குறையே ஆகும். அதாவது எதிரி படையின் ஆட்பலத்துடன் ஒப்பிடுகையில் பல மடங்கு குறைவான எண்ணிக்கையிலேயே போராளிகளின் எண்ணிக்கை உள்ளது. இது போராட்டத்தை நடாத்தவும் வெற்றியை நோக்கி நகரவும் போதாததாக உள்ளது. ஆனால், விடுதலைப் புலிகளினால் பல எண்ணிக்கையிலான இராணுவ சாதனைகள் ஏற்கனவே நிலைநாட்டப்பட்டுள்ளன. இந்த சாதனைகளும் புலிகளின் போரிடும் ஆற்றலும் உலக இராணுவ ஆய்வாளர்களினாலேயே ஆச்சரியமாக பார்க்கப்படும் ஒன்றாகவே உள்ளது. அத்தோடு அவர்களின் அர்ப்பணிப்பும், மனோதிடமும் உலகில் எங்குமே காணப்படாதவை என வியக்கப்படுகின்றது. இந்த நிலையில் சிறீலங்கா இராணுவ சவால்களைச் சமாளித்து வெற்றிகொள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு தேவையாக இருப்பது அதிகரித்த போராளிகளின் எண்ணிக்கையே ஆகும். போராட்டத்தில் எவ்வளவு விரைவில் எவ்வளவு அதிகரித்த தொகையில் இளைஞர்கள், யுவதிகள் சேருகினறார்களோ அதற்கேற்ப தமிழ் மண்ணும், மக்களும், பாதுகாக்கப்படுவது உறுதி ஆகும். காலம் தாழ்த்துதல் என்பதும், பின்னடித்தல் என்பதும் தற்போதைய வாழ்க்கை தொடர்பாக எழுந்துள்ள கேள்வியை நிரந்தரமான கேள்வியாகவே மாற்றிவிடும். ஆகையினால் தமிழீழ அரசியல் துறையினரின் கோரிக்கையை ஏற்று வீட்டுக்கு ஒருவராவது போராட்டத்தில் இறங்குவது அவசியமானதாகும். ♦



**நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும்.**

**-தியாகி திலீபன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போருள் நானும் என்னுள் போரும்



- சிவஞானம் ஜெயசங்கர்

மகா நாமரே!
புத்தபகவானின் பெயரினால் யுத்த சன்னத்தராக உலா
வருவோரே!
போர்வெறியர்கள் போதிசத்துவர்களாக
உலா வரும் நாட்டின்
ஆதிக்கத்துள் கிளரும் தமிழ்க்கவிஞன் நான்.

மகா நாமரே!
நிராயுதபாணியான ஒரு சமூகத்தின் மீது
"போரா? சமாதானமா?" சூழுரை செய்தோரே!

யதார்த்தம்
என் முகத்தில் அறைந்து சொல்லிற்று,
நீயொரு மனிதனாகு!
மனிதனின் கவிஞனாகு!
மனிதத்தை உன் பாடுபொருளாக்கு!!! என்று.

வல்லமை கொண்டன
என் கவிதையின் வரிகள்.
புல்லிதழ்களாலும் பூவிதழ்களாலுமான எனது சொற்கள்
உலோகத்தகடுகளாலும் வெடிமருந்துகளாலும் மாற்றீடு
செய்யப்பட்டு விட்டன.

வல்லமை கொண்டன
என் கவிதையின் வரிகள்.
இருட்டினில் அலையவிடப்பட்டுள்ள எனது மக்களின்
வாயிலும் வயிற்றிலும் அடிக்கப்பட்டுள்ள
எனது மக்களின் குரல்வளையில்
உம் கொடுங்கரங்கள் இறுகப் பதியினும்
வீறுகொண்டெழும் எனது மக்களின்
விடுதலைக் குரல் போல்
வீரியம் கொண்டன என் கவிதையின் வரிகள்.

சமாதானத்தின் குரலுக்கு
செவிடாகிப் போன உமது செவிகளுக்கு
வெடிகுண்டுச் சத்தங்களையே கேட்க முடிவதை
எம்மால் நன்றாகவே உணர முடிகிறது.
ஆதலினால் வார்த்தைகளும் சன்னங்களாகின.
மரணம்
உங்களது முற்றங்களிலும் உதிர்க்கும் பொழுதிலையே
அதன் வாசனையை உங்களால் நுகர முடிவதை
எங்களால் நன்றாகவே உணர முடிகிறது.

எங்கள் முற்றங்களில்
மரணத்தை வளர்ப்போரே!
துயரம்
எங்களை வீரர்களாக்கிற்று!

போருக்கும் சமாதானத்திற்கும்
தயாரான சமூகத்தின் கவிஞனாய்
உம்முன் வந்தேன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மக்களின் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தவுள்ள மணக்கொடைத் தடைச்சட்டம்

நாட்டின் ஒழுங்கைப் பேணும் முகமாக காலத்துக்குக் காலம் அக் காலத்துக்கேற்றவையாகச் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. நம் நாட்டில் வாழும் மக்களின் பிரச்சினைகளுள் ஒன்றாக 'மணக்கொடை' எனப்படும் சீதனம் இருக்கின்றது. இம் மணக்கொடை கொடுக்கப்படும் வழக்கு ஆரம்பத்தில் எந்த நோக்கில் உருவாக்கப்பட்டிருந்தாலும், இன்று எம் மக்களின் இயல்பான வாழ்நிலையைக் குழப்பும் பிரமாண்டமான சிக்கலாக வடிவமெடுத்துள்ளது. இதனால் ஏராளமான பெண்கள், பெண்ணின் பெற்றோர்கள், வாலிபர்கள் என்று அனைவருமே பாதிப்படைந்துள்ளனர்.

தமிழீழப் பெண்கள் எதிர்நோக்கி வரும் பாரிய பிரச்சினைகளுள் ஒன்றான மணக்கொடையைத் தடை செய்ய வேண்டும் என்ற தீர்மானம் 1992-ல் தமிழீழப் பெண்களால் எடுக்கப்பட்டது. அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு 1992-03-07, 1992-03-08-ம் திகதிகளில் தமிழீழப் பெண்கள் மாநாட்டை விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. கிளிநொச்சியில் நடாத்தப்பட்ட இம்மாநாட்டில் தமிழீழத்தின் பல பாகங்களிலிருந்தும் பெண் பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டனர். அவர்கள் ஒரே குரலாக மாநாட்டில் விடுத்த வேண்டுகோள் 'சீதனம் ஒழிக்கப்பட வேண்டும்' என்பதே.

நாட்டின் ஒழுங்கை, நாட்டு மக்களின் நல்வாழ்வைப் பேணும் கடமை அந்நாட்டின் நிர்வாகிகளுக்குரியது என்ற வகையில், நாம் இப் பிரச்சினையைக் கையாள முனைந்தோம். மணக்கொடைத் தடைச்சட்டம் ஆக்கப்பட்டது.

மணக்கொடைத் தடைச்சட்டமானது,

அ) தமிழீழத்தில் இதுவரை காலமும் நிலவி வந்த மணக்கொடை கொடுத்தல், வாங்கல்களைத் தடைசெய்தல்.

ஆ) உடைமைகளைப் பகிர்வதை ஒழுங்கு செய்தல்.

இ) இவ் ஒழுங்கு ஏற்பாடுகளை மீறுவோரை ஒறுத்தல்.

ஈ) குமுக ஒழுங்கில் முற்போக்கான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துதல்.

உ) இதனால் பெறப்படும் குற்றக் காசுகளையும், பறிமுதல் உடைமைகளையும் பெண்கள் மறுவாழ்வுக்குப் பயன்படுத்தல்.

என்பவற்றை நோக்காகக் கொண்டே ஆக்கப்பட்டுள்ளது.

இச் சட்டம் எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் ஒப்புதலின் அடிப்படையிலேயே சட்டமாக்கப்படுகிறது. இது 1995-09-01 இலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

மணக்கொடை பற்றி இதுவரையில் இங்கு நிலவி வந்த சட்டங்கள் யாவும் 1995-08-31 உடன் வழக்கில்லாமல் போய்விட்டன.

மணக்கொடை பற்றி மக்களுக்கு விளக்கும் முகமாக காலத்துக்கு காலம் நாம் கட்டுரைகளை வெளியிட்டிருந்தோம். இம் முறை, சட்டம் என்ன சொல்கின்றது என்பது பற்றி பார்ப்போம்.

இச் சட்டம் 'மணக்கொடை' என்றால் என்ன என்பதற்கு பின் வருமாறு இலக்கணம் கூறுகின்றது.

'மணக்கொடை எனப்படுவது, திருமணத்தைப் பொருட்டாக் கொண்டு ஒரு பெண்ணுக்குத் திருமணத்தின் முன்போ, திருமணத்தின் பொழுதோ, திருமணத்தின் பின்போ அவரது பெற்றோர் அல்லது பேணுநர்களால் அவருக்குச் சீதனம் என உணரக்கூடியதாகக் கொடுக்கப்படும் அசையும், அசையா உடைமையாகும்' எனக் கூறுகிறது.

ஒருவர் தனது உடைமைகளைக் கைமாற்றுவதற்கு இச் சட்டம் இடமளிக்கிறது. தன்னுடைய உடைமைகளை யாருக்கேனும் கைமாற்ற விரும்பின் ஏற்புடைய மாவட்ட முறைமன்று ஒன்றுக்கு இச் சட்டத்துக்கு இணங்கும் வகையிலே தெரியப்படுத்த வேண்டும். முறைமன்று இவர்களின் வேண்டுகையை ஏற்புடைய காவல் நிலையத்துக்கு அறிவித்து உடைமைகளின் உண்மை நிலை பற்றிய ஓர் உறுதிப்படுத்தலை அதனிடமிருந்து பெற்றுக்கொண்ட பின்பு, அவ்வாறான உடைமைகள், இச்சட்டத்துக்கு ஏற்புடையவாறு நன்கொடையாக வழங்கப்படுவதற்கு ஒப்புகையளிக்கலாம். ஆனால் இவ் உடைமை மாற்றம் உண்மையாகவே எந்த வற்புறுத்தலுமின்றி அவரவர் விருப்புடன் கையளிக்கும்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நிலையில் மட்டுமே முறைமன்றினால் அனுமதிக்கப்படும். பெண் வீட்டாரிடம் வற்புறுத்திப் பெற முனைந்தால் முறைமன்று உடைமை மாற்றத்துக்கு ஒப்புகை கொடுக்காது.

மணக்கொடை வாங்கும், கொடுக்கும் குற்றத்தில் ஈடுபடுவோர் தண்டனைக்குரியவர்களாவர். எந்தெந்தச் சமயங்களில் இச் சட்டம் தண்டனை வழங்கும் என்பது சட்டப் புத்தகத்தில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

1) மணக்கொடை வழங்குதல்.
2) மணக்கொடை வேண்டுதல்.
3) தமிழீழக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளியே மணக்கொடை கொடுத்தல், வாங்கல்.
4) மணக்கொடையை வேறு பெயர் கொண்டு கைமாற்றுதல்.
5) திருமண வாக்குறுதியில் ஒரு பகுதியாக மணக்கொடை அமைதல்.
6) திருமணம் முடிக்க முனைகையில் மணக்கொடை கொடுக்க முனைதல்.
7) திருமண வாக்குறுதியின் ஒரு பகுதியாக மணக்கொடை அமைந்தால் மணக்கொடை கொடுப்பது.
8) திருமணத்தின் பின் ஆண் பகுதியினர் பெண் பகுதியினரிடம் மணக்கொடை கேட்டுப் பெறல்.
9) பெண் வீட்டார் திருமணத்தின் பின் மணக்கொடை கொடுத்தல்.
10) நன்கொடை, இனாம் என்ற பெயர்களில் பெண் வீட்டாரிடமிருந்து ஆண் வீட்டார் உடைமைகள், காசு என்பவற்றைக் கேட்டுப் பெறல்.
11) பெண் வீட்டார் தாமாக வலிந்து ஆண் வீட்டாருக்கு நன்கொடை, இனாம் கொடுத்தல்.

> **"மணக்கொடைத் தடைச்சட்டம் யாருடைய சுதந்திரத்தையும் பறிப்பதாகவோ, பொருளாதாரத்தை ஈட்ட விரும்புகின்றவர்களின் உரிமைகளை மறுப்பதாகவோ அமையவில்லை"**

12) தமிழீழ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அப்பால் நன்கொடை, இனாம் கொடுத்தல், வாங்குதல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களில் ஈடுபடுவோர் தண்டனைக் குரியவர்கள்.

சட்டத்துக்கு அமைவாகத் திருமணம் செய்து வாழ்க்கையில் ஈடுபடும்பொழுது மணத் துணைவருள் ஒருவரான பெண்ணை அல்லது பெண்ணைச் சார்ந்தவர்களை மணக்கொடை கோரியோ, கோராமலோ துன்புறுத்தல் தண்டனைக் குரிய குற்றமாகும்.

திருமணத்தின் முன்போ, திருமணத்தின் போதோ, திருமணத்தின் பின்போ திருமணத்தைப் பொருட்டாகக் கொள்ளாமல் இச் சட்டத்துக்கு அமைவாக பெண் வீட்டார் பெண்ணுக்கும், ஆண் வீட்டார் ஆணுக்கும் தமது விருப்பின் பேரில் உடைமைகளை நன்கொடையாகக் கொடுப்பதை சட்டம் தடை செய்யாது.

இச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாள் முதல் தமிழீழத்தின் சான்றாவணர்கள் (பதிவாளர்கள்) மணக்கொடை உறுதி எழுதுவது தடை செய்யப்படுவதோடு, அதனை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாக அமையும்.

பெண்ணுக்கு என அவரது பெற்றாராலோ, பேணுநராலோ, திருமணத்துக்கு முன்னரான அவரது உழைப்பாலோ, ஏனைய வழிகளினாலோ வந்தடைந்த உடைமைகள் யாவும் பெண்ணினது தனிப்பட்ட உடைமையாகக் கொள்ளப்படும். எந்தச் சந்தர்ப்பத்திலாவது தனது தனிப்பட்ட உடைமைகளை முற்றகவையான எந்தப் பெண்ணும் தன் விருப்பாக எவரினது கட்டுப்பாடுமின்றிச் சட்ட இசைவான வழிகளில் கையாளலாம்.

காசு பெறும் அல்லது உடைமை யீட்டும் எண்ணத்துடன் திருமணப் பேச்சில் ஈடுபட்டு பெண், ஆண், இரு பகுதிக்குமிடையே திருமணத் தொடர்பை ஏற்படுத்தும் நோக்குடன் தற்காலிகமாகச் செயற்படுபவரோ, நிலையான தொழிலாகக் கொண்டு செயற்படுபவரோ (திருமணத் தரகர்கள்) இச் சட்டத்தின் படி தண்டனைக்குரியவர்.

மணக்கொடைத் தடைச்சட்டத்துக்கு முரணாகச் செயற்பட்டு இப்படியான குற்றம் இழைப்பவர்களை விசாரணை செய்வதற்கு உரிய முறைமன்றில் இச் சட்டப்படியான பிணக்குத் தொடர்பான வழக்குகளில் வழக்குத் தொடுநராகச் செயற்பட, காவற்துறையும், மகளிர் மேம்பாட்டு அவை எனும் அமைப்பும் தகுதியுடையனவாகும்.

இச் சட்ட ஏற்பாடுகளுக்கமைவாகப் பறிமுதலாக்கப்படும் உடைமைகளும், குற்றக்காசுகளும், "பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு" வழங்கப்படும்.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மணக்கொடைத் தடைச்சட்டம் யாருடைய சுதந்திரத்தையும் பறிப்பதாகவோ, பொருளாதாரத்தை ஈட்ட விரும்புகின்றவர்களின் உரிமைகளை மறுப்பதாகவோ அமையவில்லை என்பது இங்கு முக்கியமான விடயம். இதற்கு முன்னர் இங்கிருந்த சட்டங்களை விட மணக்கொடைத் தடைச்சட்டம் பெண்களின் சொத்துரிமையைப் பாதுகாக்கின்றது என்பதும் கவனிக்கப்பட வேண்டியது.

இச் சட்டம் நடைமுறைக்கு வர முன் மக்களில் பலருக்கு பல குழப்பங்கள் இருந்தன.

எங்கள் பிள்ளைகளுக்கு நாங்கள் சொத்துக்களைக் கொடுக்க முடியாதா, உழைத்துச் சேர்த்து வைத்ததெல்லாம் வீண்தானா என்பது போன்ற கேள்விகள் பரவலாக எல்லோரிடமும் இருந்தன. இக் கேள்விகளுக்கெல்லாம் சட்டப்புத்தகம் பதிலளிக்கிறது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கோ, அல்லது வேறு யாருக்குமோ பெறுமதி எதையும் எதிரபாராது தம் விருப்பின் பேரில் முறைமன்றின் அனுமதி பெற்று சொத்துக்களைக் கைமாற்றலாம் என்று சட்டம் கூறுகின்றது. இது செத்துக்களைப் பரிமாற்றுவதை ஓர் ஒழுங்குக்குள் கொண்டு வருகின்றது.

உண்மையில் பெண்களிலும் ஆண்களிலும் ஏற்படும் மன மாற்றம்தான் சட்டத்துக்கு வெற்றியைத் தேடித் தரும். இச்சட்டத்தினால் ஏற்படப்போகும் நன்மைகளைப் பெண்கள் புரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு பெண்ணினது உரிமையையும் கௌரவத்தையும் இச் சட்டம் பேணுகின்றது. ஒரு பெண் 'பெண்'ணாக மதிக்கப்படாது, அவளது மனிதம் இனங்காணப்படாது காசும், நகையும், சொத்துக்களுமே பெரிதாக நினைக்கப்பட்டதால் அவளின் பெண்மை அவமானப் படுத்தப்பட்ட சம்பவங்கள் இனியும் தொடராமல் விடுவது பெண்களின் மன உறுதியிலேயே தங்கியிருக்கிறது.

★★★

## முட்கம்பி வேலி



முட்கம்பி வேலிக்கு
மட்டும் எங்கள்
முகவரி தெரியும்.

இருளின் துணையோடு
பகைவர் இடம் தேடி
சைகைகளோடு
நகர்வுகளும் தொடரும்.
மீண்டும்
முட்கம்பி வேலியை
மூச்சுக்கள் எட்டும்.

முட்கம்பி கிழித்து
செங்குருதி சிந்திய மேனியை
உள்ளம் மறக்குமா?

கண்ணாச் செடிப் பற்றைக் காட்டில்
கிடப்பார்கள் வேவு பார்ப்பார்கள்
பகைவன் கண்டுவிட்டால்
முட்கம்பி வேலிக்குள்
உயிரை அர்ப்பணித்த

வேவுப் புலியை
உள்ளம் மறப்பதில்லை!
இப்போ உங்கள் முகவரி
முட்கம்பி வேலிக்கே தெரியும்!

- ஆனந்தராசா

## மாவீரர் துயிலும் இல்லம்



எங்களின் மண்ணுக்காக...
மாசற்ற உள்ளங்கள்
மானத்தோடு களம் வென்று
கல்லறைக்குச் சென்ற இடம்

எட்டுத் திக்கிலும்
எதிரியை அழித்து
விடுதலைக் குயில்கள்
விதையாகப் புதைந்த இடம்

சொர்க்கத்தின் கோயில்கள்
ஒன்றாகச் சேர்ந்து - நாளைய
சந்ததியின் ஆலயங்களாய்
காட்சி அமைக்கும் இடம்

விடிவுக்கு முடிதரிக்கச் சென்று
வீணர்களின் அம்புபட்டுச் சரிந்த
விசித்திரக் குயில்கள்
உறங்கும் இடம்

ஈன்றவளின் வயிற்றில் கருவாக இருந்து
தலைவன் அணியில் புலியாக மாறி
எதிரி முன் புயலாக எழுந்து
எங்கள் முன் நிலைத்துவிட்ட
செல்வங்களின் இல்லம்!

- கலைவண்ணன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தேசத்திற்கு உரமானோர்



தங்கநகர் கிளிவெட்டி எனும் இடத்தில் அருளானந்தம், ஜானகி தம்பதிக்குப் பத்தாவது குழந்தையாக அவதரித்தான் இந்த ஈஸ்வரன் (விபுலானந்தராஜா) இவனைப் பெற்றோர் குமார் என்றே செல்லமாக அழைத்தனர். சிறுவயதிலேயே துடுக்குத்தனமும் கெட்டித்தனமும் கொண்ட குமாரை, அவனது பெரிய தாயாரான தங்கம்மா வளர்க்க ஆசைப்பட்டாள். பெரிய தாயாரின் விருப்பமும் நிறைவேறியது. குமார் திருக்கோணமலையில் பிறந்தும் வடமராட்சியில் பெரியம்மாவின் வீட்டிலேயே வளர்ந்தான்.

தனது ஆரம்பக்கல்வியை தொண்டமனாறில் பயின்றான். ஒரு காரியத்தைச் செய்யாதே என்று யாரும் கூறினால், அந்தக் காரியத்தை செய்துவிட்டுத்தான் அடுத்த வேலை பார்ப்பான்.

1985-ல் இவனது குடும்பம் திருக்கோணமலையில் இராணுவக் கெடுபிடிக்குள் அகப்பட்டு, அகதியாக யாழ்ப்பாணம் வடமராட்சி வந்தடைந்தது. பெற்றோரைக் கண்ட குமார் அவர்களுடனேயே வந்து தங்கி விட்டான்.

1987-ல் மீண்டும் குமாரின் குடும்பம் திருக்கோணமலையில் குடியேறியது. அப்போதும் இராணுவக் கெடுபிடிகள் அடங்கவில்லை. இராணுவத்துடன் தேசத்துரோகிகளும் இணைந்து மக்களைக் கொடுமைப் படுத்திய நேரம் குமார் இயக்கத்துக்கு ஆதரவு என்றதை அறிந்த தேசத்துரோகிகள், சல்லடை போட்டுத் தேடத் தொடங்கினர்.

ஒரு நாள் குமார் வீட்டில் நின்ற போது இராணுவத்தினரும் தேசத்துரோகிகளும் இவனது வீட்டைச் சுற்றி வளைத்து விட்டனர். இதனை அறிந்த தாயார் இவனை பின் வாய்க்கால் வழியாக ஓடும்படி அனுப்பினார். அந்தப்பக்கத்தில் இராணுவம் நிற்கவில்லத்தான். அந்த வாய்க்காலில் இவன் இறங்க முற்பட்ட போது, ஒரு பாம்பு இவனது கழுத்தில் சுற்றி விட்டது. இருப்பினும் தெய்வாதீனமாகத் தப்பித்துக் கொண்டான்.

இவனைத் தேடி இராணுவம் இவனது வீட்டிற்கு வந்தால், இவன் வயலில் நிற்பான். இவனது வயலுக்குச் சென்றால் வீட்டில் நிற்பான். இவன் ஒளித்துத் திரிந்தமையால் இவனது குடும்பம் பயங்கர சித்திரவதைக்கு உள்ளானது. நிலாவெளியில் உள்ள ஒரு அண்ணனை பிடித்து, “உடனே தம்பி வந்தால் தான் நீ தப்புவாய், இல்லை நீ சரி” என்று விரட்டினார்கள். அவரோ, “தம்பி இப்போ என்ன செய்கிறான், எப்படியிருக்கிறான் என்றே எனக்குத் தெரியாது” என்று சொல்லி விட்டார். பின், பல சித்திரவதைகள் செய்து, கடைசியாக பத்தாயிரம் ரூபா வாங்கிக் கொண்டு இராணுவம் அவரை வெளியில் விட்டது. இது மட்டுமோ? தொடர்ந்து இவனது மூன்று அண்ணன்மார்களையும் ஒரு அத்தானையும் சுட்டுக்கொன்றது. இப்படி பற்பல இன்னல்களை அனுபவித்தது அக் குடும்பம்.

1990-ம் ஆண்டு, இவற்றையெல்லாம் இனியும் சகிக்க முடியாது என்று எண்ணிய குமார், தான் இயக்கத்தில் இணைய தாயாரிடம் அனுமதி கேட்டான். மூன்று மகன்களையும் ஒரு மருமகனையும் இழந்த தாயாருக்கு இவனையும் இழக்க மனம் வருமா? எவ்வளவோ சொல்லி மறித்தாள். ஆனால் அவன் கேட்கவே இல்லை. இறுதியாக அவன் 1990-ம் ஆண்டு தை மாதம் இயக்கத்தில் இணைந்தான்.

தம்பலகாமப் பயிற்சிப் பாசறையில் ஈஸ்வரன் என்னும் பெயருடன் பயிற்சியை முடித்தான். பயிற்சியிலே சிறந்து விளங்கிய இவன் பயிற்சி முடிந்தவுடனேயே ஜி. பி. எம். ஜி. இயக்குனராக தெரிவு செய்யப் பட்டு அதற்கான பயிற்சியையும் எடுத்தான்.

1990-ம் ஆண்டு ஆறாம் மாதம் கிண்ணியா காவலரண் ஒன்றில் நின்றபோது முதன் முதலாக வீட்டுக் காரரைச் சந்தித்தான். பின் திருகோணமலை சண்டைகளிலும் பெரும் பங்கினை வகித்தான். இவன் ஒரு திறமைசாலி. அதே நேரத்தில் மக்களோடும் அன்பாக பழகி அவர்களைக் கவருவதிலும் கெட்டிக்காரனாக விளங்கினான்.

பன்குளம் என்னும் இடத்தில் இவனுடைய சொந்தக்காரர் ஒருவருடைய வீடு இருந்தது. ஆனால் அந்த வீட்டுக்காரருக்கு இவன் சொந்தம் என்று தெரியாது. ஆனால் அவர்கள் அவனுடன் நன்றாகப் பழகினர். அவர்கள் வீட்டில் நிறைய மாடுகள் உண்டு. அதனால் அவர்கள் வெயிலில் போவோருக்கு, இதமாக இருக்க தயிர்தான் சாப்பிடக் குடுப்பார்கள். இவனுக்கும் தயிர் என்றால் கொள்ளை விருப்பம். அங்கு தாகம் தீரும் மட்டும் தயிர் அருந்தி விட்டு, இறுதியில் போகும் போது, “வீட்டிற்கும் ஒரு மாடு அனுப்பி விடுங்கள்” என்று கூறினான். விலாசத்தைக் கூறிய ஈஸ்வரனைக் கட்டியணைத்து முத்தமிட்ட அந்த வீட்டுக்காரர், “நீ முதலில சொல்லியிருக்கலாமே” என்று கூத்தாடினார்.

இதன் பின் 1992-இலேயே இவன் வீட்டிற்கு விடுமுறையில் சென்றான். அப்போது அவனது ஒரு அண்ணனும், ஒரு அக்காவும் இயக்கத்தில் இணைந்து விட்டனர். தாயாரிடம் அவர்களைச் சென்று பார்த்ததா என்று கேட்டு, தாய் பார்க்கவில்லை என்றவுடன் இருவரையும் விசாரிக்கப் புறப்பட்டு விட்டான். எப்படியோ தமையனின் இடத்தை அறிந்த ஈஸ்வரன், தமையன் மூலமே தமக்கையின் இடத்தையும் அறிந்தான். இருவரின் இடத்தையும் அறிந்த ஈஸ்வரன் அவர்கள் இருவரையும் நேரில் சந்தித்தான். பிரிந்தவர்கள் சேர்ந்தால் கூறவும் வேண்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டுமோ? ஆனால் அவன், அக்காவை வீடு சென்று விதவைகளாக இருக்கும் அக்கா அண்ணிமாரைப் பார்த்துக்கொண்டிருக்கும்படி கூறினான்; ஆனால், அவள் மறுத்துவிட்டாள்.

1992-ம் ஆண்டு, தனது வீட்டிற்கும் சென்றான். அப்போது இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்து, இவனது குடும்பம் வாழமுடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. இவளது ஒரு அண்ணா மட்டும் தான் அப்போது வீட்டிலிருந்தார். அவனது தாய், வீட்டிலிருந்த மகனை எப்படியாவது யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கும்படி கெஞ்சினாள். இவனும் தான் மணலாறு செல்ல போட் ஏற்றி விடுவதாகவும், அங்கிருந்து அவர் போவார்தானே என்று கூறி, தமையனையும் கூட்டிக் கொண்டு முகாம் சென்றான்.

ஆனால் அவன் முகாம் சென்ற போது, ஒரு அதிரடித் தாக்குதலுக்குத் திட்டம் தீட்டப்பட்டரிருந்தது. என்னவென்றால், 'சூரங்கித்தின மலை' எனும் இடத்திற்கு இராணுவத்தினரின் வாகனங்கள் வரும் என்றும், அதை வழிமறித்துத் தாக்குவது என்பதும் தான்.

ஈஸ்வரன் உடனே தனது குழுவை அந்த வேலைக்கு அனுப்பும்படி நின்று கெஞ்சினான். அதற்கு அந்தப் பொறுப்பாளர், "நீ அண்ணனை மணலாற்றுக்கு அனுப்பிவிட்டு வா. இந்தமுறை மற்றக் குழு போகட்டும். அடுத்த முறை நீ போகலாம்" என்றார். சண்டைக்குப் புலிகள் தயங்குவது உண்டா? ஈஸ்வரன் விடவில்லை. விடாப்பிடியாக கெஞ்சினான். கவசவாகனத்தை அழித்துவிட்டு வந்து அண்ணனை அனுப்புவதாகக் கூறினான்.

இறுதியில் ஈஸ்வரன் வெற்றியும் பெற்றான். 'சூரங்கித்தின மலை' எனும் இடத்திற்கு ஈஸ்வரனின் அணி அனுப்பப்பட்டது. வெற்றிகரமாகத் தாக்குதலும் நடந்து முடிந்தது. கவசவாகனம் முற்றாக அழிக்கப்பட்டது. சில இராணுவத்தினர் தப்பி ஓடி விட்டனர். மிகுதி இராணுவ உடல்களையும் எடுக்கப்பட்ட ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு முகாம் திரும்பிச் செல்ல முற்பட்ட வேளையில், எங்கயோ இருந்து வந்த ரவைகள் ஈஸ்வரனைச் சல்லடை போட்டன. இறக்கும் போது, "ஒரு எதிரி தப்பிவிட்டான். அவனைக் கலைத்துச் சுடுங்கள்" என்று கட்டளை இட்டபடியேதான், அவன் இந்த மண்ணை முத்தமிட்டான். இவனைச் சுட்ட இராணுவத்தை இவனது அணி கலைத்துப் பிடித்துவிட்டது.

சண்டைக்குப் போன தம்பி திரும்பி வருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த அண்ணன் முன், தம்பியின் வித்துடலையே கொண்டு வந்து சேர்த்தனர். தன்னை யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பான் என்ற நம்பிக்கையில் வந்த அண்ணன், இறுதியில் இவனது உடலுக்கு மண் போட்டான்.

தனது உடலுக்கு மண்போட என்றுதான் அழைத்து வந்தானோ என்னவோ? ஆனால், அதுதான் இறுதியில் நடந்தது.

# உறவை அணைத்த விழிகள்



(உண்மைக் கதை)

வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த இராணுவம், கட்டைக்காட்டுத் தேவாலயத்துக்கருகில் தரித்து நின்றது. இராணுவத்தை இடைமறித்து எமது போராளிகள் நிலைகளை அமைத்து கண்விழித்துக் காத்திருந்தினர். எமது கண்மட்டும் விழித்திருக்கவில்லை; எமது துப்பாக்கிகளும் விழித்திருந்தன.

உண்ண உணவும், குடிக்க நீரும் இருந்தும் நேரம் இல்லாத நிலையில் எம்மவர், வரும் எதிரிக்கு அவ்விடத்தில் வைத்தே சமாதி கட்டுவோம் என்று மிக உறுதியாக நின்றனர்.

01-07-91 அன்று, நித்திரை இல்லாததால் சிவந்த கண்களுடன் இருந்த போராளிகள் மீது எதிரியானவன் கொடூரத் தாக்குதலைத் தொடுத்து, முன்னேறிக் கொண்டிருந்தான். எமது போராளிகளின் துப்பாக்கிகளும் சீறத்தொடங்கின. இரு தரப்பினருக்கும் இடையில் கடும் மோதல் நடந்து கொண்டிருந்தது.

இந்த நேரத்தில் "அக்கா!" ஒரு குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தேன். ஒரு ஆண் போராளி. நான் 'என்ன?' என்று கேட்க முதல் எனக்கருகில் இருந்த கோகிலாக்கா உற்று நோக்கிவிட்டு, 'தம்பி!' என்று அழைத்தார். இருவரும் கலங்கிய கண்களுடன் ஏதோ கதையைப் பரிமாறும் ஏக்கத்துடன், ஒருவரை ஒருவர் பார்த்தனர். ஆனால் அந்த அரக்கர்களின் அசுரக் குண்டுகளும் 'பொம்மர்' தாக்குதலும் விடவில்லை. கோகிலாக்கா ஏமாற்றத்துடன் தன்னுடைய ஆர். பி. ஜி எல். எம். ஜியை அரக்கர்களுக்கு எதிராகப் பாவித்தாள்.

மீண்டும் அதே குரல், 'அக்கா'. எதிரி முன்னேறிக்கொண்டிருந்ததனால் அவள் தன்னுடைய ஆர். பி. ஜி. எல். எம். ஜியின் 'ரிகரில்' இருந்து கைவிடாது, 'தம்பி' என்று கூப்பிட்டுவிட்டு, மீண்டும் எதிரியை வீழ்த்தும் முடிவில் இருந்தாள். ஒருகணம் 'அக்கா' என்றவன் ஏங்கி நிற்க அவளின் நெஞ்சைத் துளைத்துச் சென்றது ஒரு குண்டு. ஓடிவந்து தூக்கி, 'அக்கா' என்றான். அவளும் ஏதோ சொல்ல முனைந்தாள். என்னவென்று அறிய முதல் அவன் கால்களில் சாய்ந்து தமிழ் அன்னையின் மடியை முத்தமிட்டாள்.

அவள் வேறுயாருமல்ல, அந்த ஆண் போராளியின் அக்காவே தான். அவளை அவன் கண்டு நான்கு வருடங்கள் ஆகின்றன. அவள் இயக்கத்தில் இணைந்து 4வது பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்தவள். அவளின் அன்பு வார்த்தை கேட்க வந்து 'அக்கா' என்றவன் அவள் தனக்கு முன்னே மடிந்ததைக் கண்டு அவளுக்காகச் சில நிமிடம் தலை குனிந்து, மீண்டும் நிமிர்ந்து தனது துப்பாக்கியை இறுகப் பற்றிக்கொண்டான்!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சந்திரிகாவும் மூன்று அமைச்சர்களும்

ஜி. எல். பீரிஸ், அனுருத்த றத்வத்த, லக்ஸ்மன் கதிர்காமர் என, சந்திரிகாவிற்கு மூன்று அமைச்சர்கள் பிரபல்யம் வாய்ந்தவர்கள்.

*ஜி. எல். பீரிஸ்* - கரையோரச் சிங்களவர். ஐ. தே. க. யைச் சார்ந்தவர். ஐ.தே.க வின் ஆட்சிக்காலத்தில், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கட்சி மாறியவர்.

**அனுருத்த றத்வத்த** - கண்டிச் சிங்களவர். றதுல குடும்பத்தவர். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இரத்த உரித்தாளி. கட்சிக்காக உழைத்திருக்காதவர். கட்சியில் ஒப்பீட்டளவில் கனிஸ்டர். இரத்த உரித்தைத் தகைமையாகக் கொண்டு, கட்சிக்குள் உயர் நிலை அடைந்தவர்.

**லக்ஸ்மன் கதிர்காமர்** - பெயரளவில் தமிழர். தமிழ் மக்கள் ஒருபோதும் அறிந்திருக்காத ஓர் 'அரசியல்வாதி'. சந்திரிகாவிற்கு ஒரு தமிழ் அரசியல்வாதி அளித்த ஆலோசனைக்கும் பரிந்துரைக்கும் ஏற்ப, சந்திரிகாவால் அமைச்சராய் நியமிக்கப்பட்ட ஒருவர். (இத்தகவலை, லக்ஸ்மன் கதிர்காமர் தன்னைச் சந்தித்த யாழ்ப்பாணப் பிரமுகர் ஒருவரிடம் கூறியிருந்தாராம்.)



தனது கணவனுடன் இணைந்து, சு. க. விற்கு எதிராகக் கட்சிகட்டிப் போர்க்கொடி தூக்கிய சந்திரிகா, சு.க. விற்குள் நுழைந்தமை எப்படி விசித்திரம் இல்லையோ, அப்படி ஐ. தே. க. விலிருந்து அப்போது தான் கட்சி தாவிய ஜி. எல். பீரிஸை சந்திரிகா தனது முக்கிய முன்னணி அமைச்சராக்கிக் கொண்டதும் விசித்திரம் இல்லை. இனம், இனத்தை நாடியது அவ்வளவுதான். ஆனால், இங்கு விசித்திரம் என்னவெனில், ஐ. தே. க. வின் கறைகளில் எல்லாம் பங்கெடுத்த ஜி. எல். பீரிஸை பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வரைய சந்திரிகா நியமித்த பின்பும், அதே ஜி. எல். பீரிஸை சந்திரிகா முக்கிய முன்னணி அமைச்சராக்கிய பின்பும், சந்திரிகாவை ஒரு நீதிமானாகச் சிலர் நம்பினர் என்பதுதான்.

சு. க. வின் சிரேஷ்ட உறுப்பினர்களும், கட்சிக்காகப் பெரிதும் பாடுபட்டவர்களும் பலர் இருக்க, ஒன்றுக்கு மேற்பட்ட முக்கிய அமைச்சுக்களை, இரத்த உரித்தின் பெயரால் அனுருத்த றத்வத்தவிற்கு சந்திரிகா கொடுத்தார். இந்த நியமனத்தில், ஜனநாயக மரபு மீறல்களில் அநுருத்த றத்வத்தவிற்கும் சந்திரிகாவிற்கும் நிறைந்த ஐக்கியம் இருந்தது.

லக்ஸ்மன் கதிர்காமர் அரசியற் களமற்றவர்; மக்கள் தளமற்றவர். ஒருபோதும் இப்படி ஓர் அமைச்சர் பதவியை அவரால் கனவிலும் கூட, பார்த்திருக்கமுடியாது. யானை மாலை போட்டதால் ராணியான பெண்ணைப் போல, ஒருவரின் பரிந்துரையால் அமைச்சரானவர். இப்போது சந்திரிகாவின் மிக நம்பிக்கைக்குரிய ஒருவராகிவிட்டார். தன்னைப் பரிந்துரைத்தவரின் பெயரைப் பாதுகாக்கவும், சந்திரிகாவுக்குத் தனது விசுவாசத்தை நிரூபிக்கவும், தமிழினத்தைச் சர்வதேச அரங்கில் விலைகூறி விற்பவராய் உள்ளார்.

இந்த மூவரும் தான் சந்திரிகாவின் முதன்மை அமைச்சர்கள் என்றால், அரசு எப்படி இருக்கும்? சந்திரிகா எப்படி இருப்பார்? இதற்கான பதில், சந்திரிகாவிற்கு ஏற்ற மூன்று அமைச்சர்கள் என்பதுதான். அதாவது, சந்திரிகாவும் மூன்று அமைச்சர்களும்.

- சாரணன்




தமிழீழத்தில் நிகழ்ந்த பேரணி ஒன்றில் சந்திரிகாவின் தற்போதைய நிலையைச் சித்தரிக்கும் ஊர்தி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஐ. நா. சபையின் 50-வது ஆண்டு நிறைவு

ஐக்கிய நாடுகள் சபையின் 50-வது ஆண்டு நிறைவு நாளை யொட்டி இத்தாலி பெரூட்சா (Perugia) என்னும் இடத்தில் திறந்த வெளி பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடத்தில், செப்டெம்பர் 22, 23, 24-ம் திகதிகளில் உலக சமாதானம் வேண்டி ஐ. நா. சபை மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் 140 நாடுகள் கலந்து கொண்டிருந்தன. ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் அமெரிக்காவிலிருந்து 1976-ல் சமாதான நோபல் பரிசு பெற்றவரும் ஐரிஸ் நாட்டை சேர்ந்தவருமான Paul Richards Betty Williams என்னும் பெண்மணியும், அவரின் உதவியாளரும் கலந்துகொண்டனர். தென் ஆசியப் பிராந்தியத்திலிருந்து மலேசியா, சிங்கப்பூர், பர்மா, நேபாளம், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மாலைதீவு போன்ற நாடுகளிலிருந்து அரச, அரசசார்பற்ற முறையில் கலந்து கொண்டனர். இவ் மாநாட்டில் தமிழீழம் சார்பில் கலந்து கொள்ள இத்தாலியில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரை, பலெர்மோ மாநகர முதல்வர் மதிப்புக்குரிய திரு. லியோலூக்கா (Leo Lucca Orlano) ஓர்லாந்தோ அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். தமிழர் ஒருங்கிணைப்பு பிரதிநிதி திரு. து. மேத்தா, திரு. க. பாக்கியராஜா, திரு. சோ. சூரியகுமார் அவர்களும், இத்தாலிக் கிளையில் கடந்த இரண்டு வருடங்களாக பிரச்சாரத்திற்குப் பெரும் உறுதுணையாக இருந்து வரும் இத்தாலிய பெண்மணி செல்வி. பிறன்செஸ்கா வெனசா (Frencisca Venza) அவர்களும் பலெர்மோ மாநகர பிரதிநிதி திரு. தொன்னி கொஸ்துமாத்தி (Tonny Costumati) அவர்களும் கலந்துகொண்டனர். 22-ம் திகதி முதலாம் நாள், ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதி தம்மை அறிமுகம் செய்துகொண்டனர்.

Betty Williams அவர்கள் பேசும் போது, உலகம் அழகானது. ஒவ்வொரு உயிர்களும் பெறுமதியானவை. எல்லோரும் ஒற்றுமையாக சமாதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். போரினால், வன்முறையினால் எத்தனை பெரியோர்களை (உ-ம்: மகாத்மாகாந்தி) இழந்துள்ளோம். எதிர்கால சந்ததிகள் சமாதானமாக வாழ வழி வகுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். இதன் பின் ஒவ்வொரு நாடுகளும் 5 நிமிடத்திற்கு தமது பிரச்சினைகளை கூறுமாறு கேட்கப்பட்டனர். சோமாலியா, குரோசியா, பொஸ்னியா ஹெஸிகோவினா போன்ற நாட்டிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் உரையாற்றினர். முதலாம் நாள் மாலை, மாநாடு முடிவுறும் வேளை, தமிழர் பிரதிநிதிகள் betty william அவர்களிடம் சிறீலங்கா அரசின் இனப்படுகொலையினை, புகைப்படங்கள் மூலமாகவும் கடித வாயிலாகவும் காண்பித்தனர். இதன் பொருட்டு தான் மிகவும் வேதனையடைவதாகவும், ஐ. நா. சபையில் தான் பேசப்போவதாகவும், எமது தமிழீழத்திற்கு விஜயம் செய்யப் போவதாகவும் கூறினார். மீண்டும் 23-ம் திகதி 2-ம் நாள் மாநாட்டில் ஒவ்வொரு நாடுகளும் தமது பிரச்சினையை தெரியப்படுத்தினர். மாலை 5.30 மணியளவில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பிரதிநிதிகள் தமிழீழ தேசம் சார்பில் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தனர். வணக்கத்தையும், நன்றியையும் தமிழில் கூறி எமக்கு உதவி வரும் இத்தாலிய பெண்மணியை அறிமுகம் செய்து அவரின் ஊடாக எமது இனப்பிரச்சினையையும், சிறீலங்கா அரசின் இராணுவ அட்டூழியங்களையும், இன அழிப்பையும் கூறினோம். எமது தேசம் மீட்க போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளை அங்கீகரிக்க வேண்டும் எனவும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும் எனவும் உலகமெங்கும் சமாதானம் அடைய வேண்டும் என்றும் கூறி அறிக்கையொன்றையும் சமர்ப்பித்திருந்தோம். மிகுந்த கரகோசத்திற்கு மத்தியில் 12 நிமிடங்கள் உரையாற்றினார். முடிவில் பெருந்தொகையான வெளிநாட்டு பிரதிநிதிகள் அப் பெண்மணியையும், தமிழர் பிரதிநிதிகளையும் கை கொடுத்து வாழ்த்தினர். அப் பெண்மணி கண்ணீர் சிந்தியபடியும் உணர்ச்சிவயப்பட்ட நிலையிலும் ஆற்றிய உரை எல்லோர் உள்ளங்களையும் கரையச் செய்திருந்தது. தனது இருக்கையில் அழுது கொண்டே இருக்கக் காணப்பட்டார். இதானால் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவரினால் எமது பிரச்சினையின் உண்மைத் தன்மையை, சத்தியத்தை உணரக் கூடியதாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. எமது பிரச்சினை வெளி உலகிற்கு தெரியப்படுத்தப் படும் எனவும் கூறியிருந்தார். 24-ம் திகதி காலை 9 மணிக்கு இத்தாலியில் பிரசித்திபெற்ற இடமான Assisi (பாப்பாண்டவர்களின் கோடை கால வாசல் தலமாகவும் விளங்கும் இடம். பெரூட்சா (Perugia) என்னும் இடத்தில் இருந்து 29 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள Assisi) வரை ஊர்வலம் நடைபெற்றது. இதில் 140 ஆயிரம் மக்கள் கலந்து கொண்டதாக கணிக்கப்பட்டுள்ளது. இதில் பல்கலைக்கழக மாணவர்கள், பெரியோர்கள், குழந்தைகள், பெண்கள், சாரணர்கள் என இத்தாலிய மக்கள் பலர் கலந்து கொண்டனர். தமிழர் பிரதிநிதிகளும் Firenze என்னும் இடத்து தமிழ் மக்களும் கலந்து கொண்டனர். எமது இனப்பிரச்சினை சம்பந்தமான துண்டு பிரசுரங்களும், கடந்த நாகர்கோயில் பாடசாலை மீதான குண்டு வீச்சு, சென்பீற்றர் தேவாலய குண்டு வீச்சு சம்பந்தமான பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

## தமிழீழம் சார்பில் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

இம் மாநாட்டில் தமிழீழ நாடு சார்பாக கலந்து கொண்டமையை பார்க்கும் போது எமது தேசம் விரைவில் உலக மக்களால், நாடுகளால் அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை தோன்றியது. இத்தாலி நாட்டில் தமிழர்களின் வரலாற்றில் முதன் முதலில் நடைபெற்ற இந் நிகழ்வு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# கைவிடப்பட்ட கிராமம் பற்றிய பாடல்



பா. அகிலன்

இங்கே தான்
கசப்பானதும், உல்லாசமானதுமான
என் பாலியகாலத்து நினைவுகள் கலந்துள்ளன.
இதோ
இந்த வரிகளை எழுதும் நடு இரவில்
சனங்களற்ற உன்னுடைய வீடுகளை
தெருக்களை நினைத்து நான் பார்க்கின்றேன்
சொல்ல முடியாப் பிரிவின் துயரால்
மனம் சஞ்சலப்படுகிறது.

போற்றுதற்குரிய
முன்னோர்களின் சிறிய கிராமமே!
மாயக்கனவுகளை ஊதி எழுப்பும்
உன்னுடைய வயற்கரைகளை
வைக்கோற் போர்கள் நிறைந்த முற்றங்களை
நினைத்துப் பார்க்கிறேன்.

பனங்கூடல்களின் அருகே
தியானத்துள் அமர்ந்த
பாட்டனின் பழம் பெரும் வீடே
உன்னோடு கழித்த விடுமுறை நாட்கள்
நினைவுத் தெருவில் நடுகல்லாய் அமர்ந்து இருக்கிறது.

ஒரு முதிய பெண் பெருங்குரலில்
பழங்கதை சொல்லி அழுகிறாள்

தூர்ந்து போய், ஐதீகங்கள் மண்டிக்கிடக்கும்
உன்னுடைய கேணிகளில்
நினைவின் ஆழ அடுக்குகளுள் இழுத்துச்செல்கிற
பூர்வீகத் தெருக்களில்
பித்தாய் மனம் பற்றி அலைகிறது.

எங்கே நீ....?
தெய்வங்கள் உள்ளுறைந்த உன்னுடைய முதுமரங்கள்
எங்கே....?
நொந்த நிலா முகில்களுள் முகம் புதைத்து விம்முகிறது

ஆதியான கிராமமே
விழி திறந்து
இரவுக்கடலில் எரிகிற சூள் விளக்குகளை
காற்றைப்பிடித்துலுப்பி எழுகிற
முதாதையரின் பாடல்களை
விழாநாட் தெருக்களில் ஓயாது முழங்குகின்ற
பறைகளின் ஒலிகளை வாள் முனையில் உயிர்துடிக்க
இழந்து தான் போனோமா.....!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கடலை வென்றெழும் கடற்புலி வீரர்



## காங்கேசன்துறை துறைமுகத்தில் நிகழ்ந்த கடற்சமர்

கடலில் சூரியன் இறங்கிக் கொண்டிருந்தான். திசைகள் அதிர கடல் அலைகளைத் கிழித்த படி கடற் புலிகளின் படகுகள் விரைந்து கொண்டிருந்தன. வெண் ணிறப்பூக்களைச் சொரிவது போல படகுகள் விரைந்து கொண்டு வரு கையில் எதிரியின் படகுகளும் எதிர்ப் பட்டன. கடற்சமர் மூண்டது. கடற் புலிகள் மும்முனைகளில் நின்று தாக் குதலைத் தொடர்ந்தனர். சிறிலங் காவின் கடற்படையின் அதிவேக 'டோறா' பீரங்கிப்படகுகளும், பீரங் கிக்கப்பல் ஒன்றும் கடற்புலிகளுக் கெதிரான தாக்குதலில் இறங்கின.

கடற்புலிகளின் அபார வளர்ச்சி, தாக்கும் திறன், இலக்கை அடைந்து தாக்கி அழிக்கும் அவர்களின் குறிதவறாத பாய்ச்சல் என்பன பற்றி இன்னும் எதிரி புரிந்துகொள் வதாய் இல்லை.

16-07-1995 அன்று காங்கேசன்துறை துறைமுகத்துள் பகைவனின் பலத்த கடற்கல வியூகத்தை உடைத்துப் போர்க்கப்பலைத் தகர்த்த நிகழ்வை யும் அவர்கள் அக்கணத்தில் நினைத் திருக்கக்கூடும்.

கடற்புலி பாய்ந்த கடல், கடற் புலிபாய்கின்ற கடல் என இருந்த நிலைமாறி இன்று கடற்புலிகள் ஆழ் கின்ற கடற்பரப்பாக எமது கடல் மீட்கப்பட்டு வருகிறது.

கடற்சமர் நிகழ்ந்து கொண்டிருக் கையில் எதிரியின் அதி வேக டோறாக்கள் பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டிருந்தன. தாக்குதல் தொடங்கி அரைமணி நேரத்துக்குள் மும்முனைத் தாக்கு தல் எல்லைக்குள் நின்ற எதிரியின் 'டோறா' படகை நோக்கி கடற் கரும் புலிகளின் படகொன்று அதிவேகப் பீரங்கிப்படகைத் தாக்கியது. இதைத் தொடர்ந்து 'டோறா' பீரங்கிப்படகு வெடித்துச் சிதறி தீப்பற்றி எரியத் தொடங்கியது. அதில் இருந்த கடற் படையினர் பலர் கொல்லப்பட்ட னர். தீப்பற்றிய 'டோறா' படகு கடலில் முற்றாக மூழ்கியது.

அச்சமரின் போது ஏற்கனவே காங்கேசன்துறைக் கடற் சமரில் கடற்படையிடமிருந்து முன்னர் கைப்பற்றப்பட்ட 'இருபது எம். எம். ஓலிகன் பீரங்கி'களைக் கடற்புலிகள் பயன்படுத்தி தாக்குதல் நடாத்தினர்.

கடற்புலிகளின் 'வோட்டர் ஜெற்' அதி வேகப் படகுகளில் இந்த ஓலிகன் பீரங்கிகளைக் கொண்டு கடற்படையினருடன் கடற்புலிகள் கடற்சமரில் ஈடுபட்டதையடுத்து, கடற்படைப் படகுகள் கடற்புலி களை நெருங்க முடியாது விலகிச் சென்றன.

இக் கடற் சமரில் கடற்புலிகளின் மூன்று படையணிகள் இணைந்து செயற்பட்டிருந்தன. கடற்கரும்புலி கள் படையணி, சாள்ஸ் கடல் தாக் குதல் படையணி, நளாயினி கடல் தாக்குதல் படையணி ஆகிய படை யணிகளே அவையாகும்.

கடற்சமர்களில் பங்கு கொண்ட கடற்புலிகளின் கடல் தாக்குதல் படைத்தளபதியாக இருந்த லெப். கேணல் சாள்ஸ், கிளாலிக் கடலில் மக்களைக் காக்கும் பணியில் வீரச் சாவைத் தழுவிக் கொண்டதும், கடற்புலிகளின் மகளிர் படையணி யின் சிறப்புத்தளபதியாக இருந்த லெப். கேணல் நளாயினி, சாகர வர்த்தனா மீதான கரும்புலித்தாக்கு தலில் வீரச்சாவைத் தழுவிக்கொண் டதும் தெரிந்ததே. இவர்களின் பெயர்களிலேயே சாள்ஸ் கடல் தாக்குதல் படையணியும், நளாயினி கடல் தாக்குதல் படையணியும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

மாதகல் கடற்பரப்பில் வைத்து 'லங்கா முடித' மீது தாக்குதல் நிகழ்த்தப்படுவதற்கு முன் இக் கப் பல், காங்கேசன்துறை துறைமுகத் தில் வைத்து பொருட்களை இறக்கி யது. மூன்று 'அதி வேக டோறா' படகுகளும் ஒரு பீரங்கிப் படகும் காவலுக்கு நின்று கொண்டிருந்தன. சிறீலங்கா கப்பல் கூட்டுத் தாபனத் திற்குச் சொந்தமான இக்கப்பல் 1959-ம் ஆண்டில் கொள்வனவு செய் யப்பட்டது. சுமார் 2600 மெற்றிக் தொன் எடையுள்ள பொருட்களை ஏற்றக் கூடிய வசதிகள் இருந்தன. இக் கப்பலின் கப்டன் நிசாம். இதில் சிங்களவர்களான மாலுமிக ளும் பணிபுரிகின்றனர். யாழ். குடா நாட்டு மக்களுக்கான உணவுப் பொருள் விநியோகத்திற்கு இக் கப்பல் சென்ற பெப்ரவரி 27 முதல் ஜூன் 20 வரை பயன்படுத்தப்பட்டு வந்தது. பின்னர் இராணுவத்தினருக் கான ஆயுதத்தளபாடங்கள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றை ஏற்றி வந்ததை அடுத்து யாழ். குடாநாட்டு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மக்களுக்கான உணவு விநியோகப் பணியினைக் கைவிட்டது.

இராணுவத்துக்கு பொருட்களை இறக்கி விட்டு 20-09-95 மாலை 5.40 மணியளவில் காரைநகர் நோக்கி புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது. காங்கேசன்துறை துறைமுகத்தில் கடற்புலிகளின் சண்டை நடந்து கொண்டிருந்த அதேவேளையில் இக் கப்பல் மீது மாதகல் கடற்பரப்பில் வைத்து கடற் கரும்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் 'லங்கா முடித' விநியோகக் கப்பலுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டது.

இவ்விரு தாக்குதலின் போதும் 'மேஜர் அன்பு' - முல்லை மாவட்ட கடற்புலிகள் அரசியற் பொறுப்பாளர், மேஜர் கீர்த்தி - புலோப்பளை, கப்டன் சிவா - அரியாலை, கப்டன் செவ்வானம் ஆகியோர் வீரச் சாவடைந்தோர் ஆவர்.

கப்டன் செவ்வானம் ஒரு பெண் கடற்புலி. அவள், 16-07-95 அன்று 'எடித்தாரா'க் கப்பல் மீதான தாக்குதலுக்குச் சென்று சமரில் ஈடுபட்டு தப்பி வந்தவள். எதிரிகளின் கண்ணில் படாமல் சுழியோடி பல கடல் மைல்கள் கடலில் நீந்தி, கடற்புலித் தளம் வந்து சேர்ந்தவள். தனது மரண நிகழ்வை அன்று ஒத்திகை பார்த்தாள் என்று கூறலாம். அதன் பின்னர் மீண்டும் செவ்வானம் 20-09-95 அன்று அதே கடற்பரப்பில் எதிரியை தாக்கி அழிக்கச் சென்றாள்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கில் தென் தமிழீழத்திலிருந்தும், சிறீலங்காவிலிருந்தும் படையினரை ஏற்றி யாழ்ப்பாணத்தில் குவிக்க முனையும் அரசுக்கு மீண்டும் விழுந்த அடியாக இது விளங்குகிறது. பகைவன் நிலை கொண்டிருக்கும் காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து அவனின் ஆக்கிரமிப்பு எண்ணத்துக்கும் அவனது மேலாதிக்கக் கனவுக்கும் விழுந்த பலமான அடியாகவும் இது இருக்கிறது. ◻



# முல்லைத்தீவுக் கடற் போரில் பெண் கடற்புலிகளின் முக்கிய பங்கு

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையினருடன் நடந்த கடற் சமரில் கடற்புலிகள் மகளிர் படையணியினர் முக்கிய பங்காற்றினர்.

கடந்த மாதம் முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து கடற்புலிகள் மகளிர் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்ட 'ஐரிஸ் மோனா' கப்பல் விவகாரம் உலகசெய்தி நிறுவனங்களால் பரபரப்பாக பேசப்பட்ட விடயம். இக் கப்பலைத் தடுத்து நிறுத்தியதில் முக்கிய பங்காற்றியவர்கள் கடற்புலிகள் மகளிர் படையணியினர் என்பதும் அறிந்த விடயம்.

சிறீலங்கா கடற்படையினரின் முன்னை நாள் மாலுமிகள் உட்பட நூற்றியிருபத்தெட்டுப் பயணிகளைக் கொண்ட இக் கப்பல் முல்லைத்தீவு வட்டுவாகல் கடற்பரப்பில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டது.

இக் கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டதை அடுத்து 'ஐரிஸ்மோனாவின்' மாலுமிகளுக்காக, காங்கேசன்துறை துறைமுகத்தினுள் எடித்தாரா கப்பல் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது சிறீலங்கா கடற்படையாற் கைதுசெய்யப்பட்ட இரண்டு பெண் கடற்புலிகளைப் பரிமாறிக்கொள்ள விடுதலைப்புலிகள் இயக்கம் முன் வந்தது தெரிந்ததே.

'ஐரிஸ் மோனா' கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டதும் அதனைத்தொடர்ந்து இரு டோராப் படகுகள் அழிக்கப்பட்டதுமான இந்த தாக்குதலை கடற்புலிகளும் கடற்புலிகள் மகளிர் படையணியினரும் இணைந்து வெற்றிகரமாக மேற்கொண்டனர். அதாவது 'ஐரிஸ் மோனா'வைத் தேடி வந்த சிங்கள கடற்படையினரின் சுப்பர் டோராப் படகுகள் இரண்டும் **29-8-95** அன்று முல்லைத்தீவுக் கடலில் வைத்து மூழ்கடிக்கப்பட்டன. இதில் இருபது சிறீலங்கா கடற்படையினரைக் காணவில்லை என சிறீலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டதாக பி. பி. சி செய்தி நிறுவனம் தெரிவித்தது. சிறீலங்கா கடற்படை வட்டாரங்களில் பெரிதும் நம்பிக்கைக்குரியதாக இருந்த போர்க்கலமான சுப்பர் டோரா படகுகள் மூழ்கடிக்கப்பட்டமை சிறீலங்கா இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அது மட்டுமன்றி இந்நிகழ்வானது வடபகுதி மீது பாரிய எடுப்பிலான தாக்குதல் நடாத்துவதற்குத் திட்டமிட்ட சிறீலங்கா படையினருக்குப் பின்னடைவு ஒன்றையும் ஏற்படுத்தியிருப்பதாக செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

இதுவரை காலமும் நடந்த கடற்புலிகளின் கடற்சண்டைகளை விட பெருந்தொகையான நவீன ஆயுதங்கள் இச் சண்டையின் போது கைப்பற்றப்பட்டன. நவீன ராடர் கருவிகளும்



நவீனரக பீரங்கிகளும் இதன்போது கைப்பற்றப்பட்டன.

எமது கடற் சண்டைகளில் தனித்த முத்திரையைப் பதித்துக் கொண்ட கடற் புலிகளின் மகளிர் படையினருக்கும் இது குறிப்பிடத்தக்க பெரும் சண்டையாக அமைந்தது. இவர்களாற் தடுத்து நிறுத்தப்பட்ட 'ஐரிஸ் மோனா' கப்பல் தடுத்து நிறுத்தப்பட்ட நிகழ்விலும் டோராப் படகுகள் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவங்களிலும் கடற் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி கல்யாணி முக்கிய பங்காற்றினார்.

முல்லைத்தீவுக் கடற்கரையோரத்திலிருந்து பதினைந்து கடல்மைல் தொலைவில் வைத்து 'ஐரிஸ் மோனா' கப்பலை கடற்புலிகள் மகளிர் படையணியே கைப்பற்றியதாக கலயாணி குறிப்பிட்டார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




### ஐரோப்பிய பாராளுமன்ற முன்றலில்

## தாயக அங்கீகாரம் கோரி

# ஒன்று திரண்டு ஒலித்த குரல்கள்

அக்டோபர் 23, திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியிலிருந்து, பிரான்ஸ் நாட்டில் ஸ்ராஸ்பூர்க் நகரிலிருக்கும் ஐரோப்பிய பாராளுமன்ற முன்றலில், புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்தும் வந்து கூடினர். தம் உறவுகள் மண்ணில் எதிரியின் மூர்க்கமான இராணுவ நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட துயர நிகழ்வு அவர்களை வாட்டியது. அந்நினைவுகளைச் சுமந்தபடி அவர்கள் உணர்வோடு கலந்து கொண்டிருந்த நிகழ்வு நெஞ்சை உலுக்குவதாகவே இருந்தது. பலமைல் தொலைவுகளில் இருந்தும் பஸ் வண்டிகள், கார்கள், வான்கள் மூலம் அவ்விடத்திற்கு வருகை தந்திருந்த மக்கள் பல கஸ்ட துன்பங்களை அனுபவித்திருப்பார்கள் என்பதும் சிரமங்களை அடைந்திருப்பார்கள் என்பதும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பலவித இடர்கள், நெருக்கடிகள், துன்பங்கள் என அடுக்கிக்கொண்டே போகலாம். திங்கட்கிழமை வேலை நாளாக வேறு இருந்தது. லீவு எடுப்பது என்பதும் கடினமாக இருந்திருக்கக் கூடும். அவர்கள் தங்கள் மண்ணில் தமது இனிய உறவுகளின் துயர நிலைகளை தொழில் அதிபர்களுக்கும், வேலைத்தள நிர்வாகிகளுக்கும் எடுத்து விளக்க முயன்றார்கள்.

தாங்கள் பேரணியில் கலந்து கொள்ள அனுமதி அளிக்குமாறு கேட்டார்கள். அப்போது சிறீலங்கா அரசாங்கத்தின் "முன்னோக்கிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட மக்களின் புகைப்படங்களுடன் வெளிவந்த சிறுகைநூலினை அவர்களிடம் காண்பித்தார்கள். அப்போது, பிரெஞ்சுத் தொழிலதிபரான ஒரு பெண் 'இவை சாதாரணமான நிகழ்வுகளல்ல. நாங்கள் லீவு தருகிறோம்' என்று சொல்லியிருந்தார். இந்த நிலையை ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் வேலை செய்யும் வேலைத்தளங்களில் ஏற்படுத்தினார்கள். அதுவும் அவர்கள் மேற்கொண்ட மிகப்பெரிய பிரச்சார நிகழ்வாக அமைந்திருந்தது.

ஒரு திட்டமிட்ட இனப்படுகொலை சமாதான முகமூடி அணிந்த சந்திரிகாவினால் மேற்கொள்ளப்படுகிறது. பாடசாலைகள், தேவாலயங்களில் எமது மக்கள் கொல்லப்படுகிறார்கள். பாடசாலையில் மாணவர்கள் மீது குண்டுவீச்சை நிகழ்தியமை எந்த மனிதனும் ஏற்றுக் கொள்ளமுடியாத ஒரு இனப்படுகொலை. UNESCO இயக்குனர் நாயகம் பிரெடரிக்கோ மேயர் நாகர்கோயில் பாடசாலை மீதான குண்டுவீச்சுப் பற்றிக் கூறுகையில், "அப்பாவி மாணவர்கள் கொல்லப்பட்ட பாடசாலை மீதான குண்டுவீச்சை நான் கடுமையாகக் கண்டனம் செய்கிறேன். நாட்டில், எந்த விதமான அரசியல் சூழ்நிலை இருந்த

- வாசன் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






## தமிழீழமே எமது தாயகம்!

போதும், நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் நியாயப்படுத்த முடியாதவை" என்று தெரிவித்தார். இந்த நிகழ்வுகள் புலம் பெயர்ந்த தமிழீழ மக்களின் இதயத்தில் ஆறாத, தீராத சோகத்தை எழுதியிருக்கும். மண்ணில் நிகழ்கின்ற நிகழ்வுகள் அவர்களை ஆட்டி அசைத்திருந்தது.

துன்பங்களாலும், துயரங்களாலும் தமிழீழ மக்கள் அல்லலுறும் போது வெளிநாட்டில் வாழும் உடன்பிறப்புகள் துடிக்கிறார்கள். துடிப்போடும், உணர்வோடும், எழுச்சியோடும் புலம் பெயர்ந்த தமிழீழ மக்கள் தத்தமது உளத்தில் தாங்கிய துயரச் செய்திகளோடும் ஐரோப்பிய முன்றலில் நின்று கொண்டிருந்தார்கள். பிரான்ஸ், ஜெர்மன், சுவிஸ், சுவீடன், ஹொலன்ட், இங்கிலாந்து, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளில் இருந்தும் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

அனேகமானோர் தங்கள் கைகளில் தேசியக் கொடியை சுமந்தவண்ணம் இருந்தார்கள். சந்திரிகாவின் இரட்டை வேடத்தைக் காண்பிக்கும் ஓவியங்கள், தமிழினப் படுகொலைகளைச் சித்தரிக்கும் புகைப்படங்கள், சுலோகங்கள் தாங்கிய பதாகைகள் என்பவற்றையும் மக்கள் தாங்கிய வண்ணம் இருந்தார்கள்.

ஈரலிப்பான பிரதேசத்தில் மக்கள் நெடுநேரம் அமைதியாக நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் கைகளில் தேசியத் தலைவரின் உருவப் படங்கள் இருந்தன. எமது இனத்தின் துயரை வென்று எமது மண்ணில் சூரியனாகத் திகழ்கின்ற எமது தலைவரை மக்கள் தங்கள் நெஞ்சங்களிலும் சுமப்பவர்கள்.

அவரின் காலத்தில் எமது தேசம் விடுதலையை அடைந்துவிட வேண்டும் என்ற ஆவேசம் அவர்களுக்குள் எழத் தொடங்கி விட்டது.

புலம் பெயர்ந்த மண்ணில் எமது மக்கள் எத்துணை துயரமான வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்பதை எப்படிச் சொல்வது? அவர்கள் ஒரு காகக்கூட்டில் வாழ்கின்ற குயிலுக்கு ஒப்பானவர்களாக இருக்கின்றார்கள் என்பதா? முகமிழந்தவர்கள் என்பதா? கூத்தில் வேஷமிட்டு நிற்கும் ஒரு நடிகனைப் போல பொய்யாய் சிரித்து, மெய்யாய் அழுகின்ற துயர் மட்டும் தான் எஞ்சி இருக்கிறது. அவர்களுக்கு விடுதலை வேண்டும். அவர்களைத் தேற்றிட வழிகாட்டிட தலைவன் வேண்டும். அவர்களை போற்றிக் காக்க தாய், தாய் மண் வேண்டும். இது அவர்களை தாய்த்தேசம் நோக்கி எழ வைக்கிறது.

அவர்களுக்கு பாதுகாப்பான, நிரந்தரமான, சுதந்திரமான நல் வாழ்வு தாய்த் தேசத்தில் தான் உண்டு என்பதை அவர்கள் உணரத் தலைப்படுகிறார்கள். இந்தப் புத்தெழுச்சி இன்று புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் எழத் தொடங்கி விட்டது என்றே கூறலாம். மக்கள் தயாராகிவிட்டார்கள். அவர்கள் வீதிக்கு வருகிறார்கள். 'குழந்தைகளைக் கொல்லாதே!', 'ஐரோப்பிய சமூகமே இனப்படுகொலையை தடுத்து நிறுத்து!', 'சர்வதேச சமூகமே எங்களது தாயகத்தை அங்கீகரி!', 'எங்கள் தலைவர் பிரபாகரன்!', 'எங்களின் தாகம் தமிழீழத் தாயகம்!', இந்த கோஷங்களை அவர்கள் எழுச்சியுடனும், உணர்ச்சியுடனும் எழுப்பிய நிகழ்வானது உள்ளத்திலிருந்து புறப்பட்டு வந்து ஒலித்தன.

உலக முகடுகளை அசைக்கின்ற உயிர் நாதத்தை அவை கொண்டிருந்தன.

ஈரலிப்பான புற்தரையில் குளிரையும் பொருட்படுத்தாது நின்று கொண்டு எமது மக்கள் ஒலித்த குரல்கள் என்றோ ஒரு நாள் நிச்சயம் சர்வதேச மக்கள் இதயங்களை வெல்லுமாறு செய்யும் எமது தாயகத்தை எமது போராட்டத்தை நிச்சயம் அங்கீகரிக்க வைக்கும்.

சந்திரிகா அரசு ஏவிவிட்ட இனவாத அரக்கனை புலம் பெயர்ந்த தமிழீழ மக்கள் ஐரோப்பிய முன்றலில் அடித்துக் கொல்லத் துடித்தார்கள். சந்திரிகா அணிந்திருந்த முகத்திரையை அவர்கள் கிழித்தெறிந்த போது இரத்தம் சிந்தும் கோரப் பற்களுடன் சந்திரிகா காட்சி தந்ததை ஐரோப்பிய சமூகம் கண்டிருக்கும். அது காணும்.

சந்திரிகாவின் பொய்பிரச்சார யுத்தத்திற்கு எதிராக புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் நடாத்திய அரசியல் தாக்குதலின் ஆரம்பம் இது. இது போன்ற அரசியல் தாக்குதல்கள் எமது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளுமட்டும் தொடரும்.

இன்று புலம்பெயர்ந்துள்ள தமிழீழ மக்களிடம் காலம் சுமத்தியுள்ள இந்த புனிதமான வரலாற்றுக் கடமையை நிறைவேற்றிவிட வேண்டும் என்ற அவர்களது போராட்டம் நோக்கிய ஆகர்சிப்பை அந்தப் பேரணியை கண்டவர்கள் கண்டிருப்பார்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# மாலதிநினைவுநாள்

## அக்டோபர் 10

புலம் பெயர்ந்த நிலங்களில் மாலதி நினைவு எழுச்சிநாள் நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன. இந்திய ஆக்கிரமிப்பாளரை எதிர்த்துப் போராடி வீரச்சாவடைந்த முதற் பெண் புலியாகத் திகழும் 2-ம் லெப் மாலதி, மண்ணில் விழுந்த முதலாவது எழுச்சி விதையாகவும் கொள்ளப்படுகிறாள். சமூக அடக்குமுறைக்குள்ளும், இராணுவ ஒடுக்கமுறைக்குள்ளும் சிக்கி நசிந்த பெண்கள் சமூகத்தில் மூத்தவளாக எழுந்த அவளது சுவடுகளைப் பற்றி பெண்கள் சமூகம் இன்று மகத்தான போராட்ட சாதனைகளை நிகழ்த்தி வருகிறது. முன்னெப்போதும் இல்லாத எழுச்சி, உத்வேகம், புத்துயிர்ப்பு, செழுமை, வீரம், ஆற்றல் அவர்களிடம் எழுந்திருக்கிறது.

அவர்களைப் பிணைத்த தடைகளையெல்லாம் தகர்த்து எறிந்து வரும் தமிழீழப் பெண்கள், புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழீழப் பெண்களிடத்திலும் புதிய வாழ்வுக்கான, எழுச்சிக்கான எண்ணங்களை விதைத்திருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணமே அவ் உண்மையை உணர்ந்து கொள்ள போதுமானது.

இந்த வகையில் நிகழ்ந்த மாலதி நினைவு எழுச்சி நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கன.

டென்மார்க், இத்தாலி, சுவிஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில், அதிலும் சிறப்பாக டென்மார்க் கேர்ணிங் நகரில் நடைபெற்ற மாலதி நினைவு நிகழ்வு நாள் முழுக்க முழுக்க பெண்களாலேயே நடாத்தப்பட்டிருக்கிறது.

லெப். பிரியங்காவின் சகோதரியார் ஈகைச்சுடரேற்றி வைக்க நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. பேச்சுக்களைத் தொடர்ந்து கவிதா நிகழ்வு இடம் பெற்றது. கலைபண்பாட்டுக்கழகம் தயாரித்து வழங்கிய "வீராய்ச்சி அம்மன்" நாடகம் மிகவும் சிறப்பாக இருந்தது. இறுதியாக "புயல்கால ராகங்கள்" இசைநிகழ்ச்சி நடைபெற்றது. இந் நிகழ்வுகள் யாவும் புலம் பெயர்ந்த பெண்கள் மத்தியில் ஏற்படவிருக்கும் எழுச்சிக்கு கட்டியம் கூறுவதாக அமைந்திருந்தன. □





வீராய்ச்சியம்மன் நாடகக் காட்சிகள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ‘உலகத்துக்கு ஓர் கடிதம்....’

க. ஜெயவீரசிங்கம்

அணிசேரா தொடக்கம்
ஐரோப்பியம் வரைக்கும்
அனைவருக்கும்
வணக்கம் - இது
தாயக மண்ணில் இருந்து
தமிழன் வரையும் மடல் - உங்கள்
கண்டனங்கள் கொஞ்சம்
கடுமையாய் இருக்கிறது
சந்திரிகா என்றால் ஏன்
சந்தோஸம் கொள்ளுகிறீர்?
தகப்பன் ‘தனிச்சிங்களம்’
தாய் ‘தரப்படுத்தல்’
மகள் மட்டும்
மாறுபட முடியுமா என்ன?
புறுபுறுத்தல் கேட்கிறது
பொறும் கொஞ்சம்!
பொருளாதாரத்தடை, பூநகரிப்பாதை
போர்க் கருவிக் கொள்வனவு
இவற்றுக்கு என்ன பதில்?
மண்ணெண்ணெய் அனுப்புதற்கே
மாதக் கணக்கென்றால்
மண் எல்லை பற்றி - உந்த
மனிசியுடன் என்ன கதை?
நவாலியில் சிலுவையின் கீழ்
நரபலி எடுத்த பின்னும்
சந்திரிகா என்ன
‘சங்கமித்தை’ என நினைப்பா?
சரியாகப் புரிந்து கொள்ளும் - எங்கள்
தலைவன் மட்டும் தான் தமிழ் மண்ணின்
உயிர் மூச்சு!

அது, நாவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம். அங்கு கட்டிடக் குவியல்களும் மனித சதைக்குவியல்களும் எங்கும் பரவி சிதறிக் காணப்பட்டன. ஒப்பாரியும் அழுகைக் குரலும் காதை அடைத்தது. எங்கும் அழுகுரலும், வேதனைக்குரல்களும். ஆண், பெண், பெரியவர்கள், குழந்தைகள் என்று எதுவித வேறுபாடும் இன்றி நரவெறிபிடித்த பேயொன்று வெறியாட்டம் போட்டிருந்தது. .

இப்படியொரு கோரக்காட்சியினை அவன் என்றுமே கண்டதில்லை. சந்திரிகா அரசு பதவிக்கு வந்த போது மகிழ்ச்சி அடைந்தவர்களில் அவனும் ஒருவன். இனியென்ன, மின்சாரம் வந்துவிடும். படிப்பதற்குப் பிரச்சினையில்லை என்று தான் யோசித்தான். விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினரும், விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும் பாடசாலைகளில் கூட்டம் வைக்கும்போது, ‘சந்திரிகா சமாதான வேடம் தாங்கிய இனவாதி’ என்று கூறியபோதெல்லாம் அவன் அதனை நம்பவில்லை. இவர்கள் இயக்கத்திற்கு ஆட்கள் சேர்ப்பதற்காகத்தான் இப்படி சொல்லுகிறார்கள் என்றுதான் நினைத்திருந்தான் ‘பெடியள் சொன்னது சரிதான். சந்திரிகாவின் முகமூடி இங்குதான் எங்கோ விழுந்து தொங்குகிறது’ என்று செல்வராஜாவுக்கு இப்போது தோன்றியது.

“ஐயோ இப்படி யாரும் செய்வாங்களோ? என்ர ஐயோ! தமிழனாக பிறந்ததே பாவம்தான்” என்று யாரோ கதறியழும் சத்தம் கேட்டது. இப்படிப் பல குரல்கள். பல அழுகைச் சத்தங்கள். கோபமிகுதியில் யாரோ சாபமிடுவதும் இவனுக்குக் கேட்டது. இவனுக்குள் யாரோ ஆணி அறைவது போலிருந்தது.....

வீ. மணிவண்ணன் எழுதிய
**போகும் இடம் தெரியும்** சிறுகதையில் இருந்து.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சர்ப்பமரணம்

இரவு பெய்த மழையில் மரம் எல்லாம் சொட்டச் சொட்ட நனைந்து பூ வெல்லாம் குளித்திருந்தது. இன்னும் சரியாக விடியவில்லை என்பதுடன் மழை இருட்டும் இருந்தது. மழை இருட்டில் அந்தப் பாம்பின் கருமை நிறம். மேகத்தின் வடிவத்தில் அதன் தோல் வரி அலை. இருளா ஒளியா மரணத்தை தழுவுகிறது?

அழுதே கழியும் ஊமை இரவுகளின் பின் பல்லு விளக்காத முகத்துடன் பவனி வருகின்ற சூரியன் இன்று புதிய உலகொன்றைக் கண்டு வழிதவறிப் போவோமா என்று மலங்க மலங்க விழித்து வெளியே வராது ஒளிந்து நின்றான். நான் கதவைத் திறந்து முன்புறத் தோட்டத்தில் கால் வைத்தேன்.

அப்போதுதான் அந்தப் பாம்பு மறைவில் ஒளிந்திருந்து விட்டு என்னைக் கண்டு மிரண்டு, கண்ணை மூடிக்கொண்டு ஓடி.... கண்ணை மூடிக்கொண்டு என்பது பிழை. பாம்புக்குக் கண் மடல்கள் இல்லை. பிறகு எப்படிக் கண்ணை மூடுமாம்? கடதாசிப் பூ மரத்தில் ஏறி அதன் கிளைகளில் மறைந்தது.

"ஐயோ!" காலுக்கு மிக அருகில்.... ஒரு சென்ரிமீற்றர் தூரத்தில் பாம்பு ஓடியதால் அதிர்ச்சியும் பயமும் அடைந்து, நான் போட்ட கத்தல் குறைந்தது நூறு மீற்றருக்குக் கேட்டிருக்கும்.

☯☯☯

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் கோபுரத்துக்கு அருகில் நின்றிருந்த நான் - எனது தலைக்கு நூறு மீற்றர் தூரத்தில் அந்தக் குண்டு வருவதைக் கண்டு அதிர்ச்சியும் பயமும் அடைந்து, போட்ட குழறல் குறைந்தது ஐநாறு மீற்றருக்குத் தெளிவாகக் கேட்டிருக்கும்:

"ஐயோ.... போட்டிட்டான். அம்மாளாச்சீ!...." மனிதர்கள் எல்லாம் வேகமாய் ஓடுகிறார்கள் எங்கே என்று தெரியாமல்! நான் இன்னும் பலருடன் கோபுரத்தின் கீழ் பதுங்கிக்கொண்டேன். எங்கும் புகை, இருள்... செவிச் சவ்வு பிளந்துவிடும் ஒலிகள்!

இருளைப் பிளந்துகொண்டு ஒற்றையாய் ஒரு அழுகை ஓலம்! என்னுடையதுதான்!

"ஐயோ... என்ரை பிள்ளை!" 'சீனச் சகடை' மீண்டும் சுற்றுகிறது..... எனது தலையும் கூடவே! உடல் மிக நன்றாக.... குளித்தது போல வியர்த்து விட்டது. இதயத் துடிப்பு.... கதவு காற்றுக்கு அடிப்பது போல் படார்... படார் என்று கேட்கிறது.

வெளியே வந்து பிள்ளையைத் தேடவும் முடியாமல்.... உள்ளே நின்று தேடாமல் நிற்கவும் முடியாமல்.... என்ன வேதனை இது?

"ஐயோ, எனக்குப் பிள்ளை இல்லாமலே இருந்திருக்கலாமே!"

"இந்த நேரம் பாத்துக் கடலை ஆச்சிட்டைக் கடலை வாங்க வெண்டு ஓடினானே!"

"எனக்கு மேலை விழுந்தா விழட்டும். பிள்ளையைத் தேடிப் பிடிக்காம என்னாலை நிக்க ஏலாது...."

எனது சொந்தப் பாதுகாப்பு உணர்வு இடிந்து தகர்ந்து போயிற்று. சனத்தைப் பிளந்துகொண்டு வெளியே ஓடுகிறேன். அப்போது....

இரண்டாவது குண்டு எனது தலைக்கு இருநூறு மீற்றர் தொலைவில்....

ஓடுகிறேன்... ஓடுகிறேன்... மனதுக்குள் பல கறுப்புக் குரல்கள்!

☯☯☯

ஆசியாவின் பைத்தோன் போன்ற பாம்புகள் - தனது தலையை விட மிகப் பெரிய இரையை - சில சமயம் மான்களைக்கூட விழுங்கி விடுமாம்.

இந்தப் பாம்பு எனது ஒரு வயதுக் குழந்தையை விழுங்கி விடுமோ?

எச்சிலை விழுங்கினேன். புண் மீது மருந்து தடவியது போல் எரிந்தது.

உள்ளே பாய்ந்து சென்று குழந்தையைப் பார்த்தேன். குழந்தை புற்பாயில் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தது.

இது உறக்கந்தானா....? அல்லது...? மேலே ஏறிய பாம்பு கூரைவளை மூலம் உள்ளே இறங்கி...?

**கோகிலா மகேந்திரன்**

இது ஒரு வேளை "ஆபிரிக்கன் மம்பா"வாக இருந்தால்..? கடித்த ஒரு நிமிடத்துக்கிடையில் மரணம் நிகழ்ந்து விடுமாமே...?

"கடவுளே....!" கடவுளிடம் நம்பிக்கை குறைகிற போதும்.... (இவ்வளவு அக்கிரமும் நடக்கும் போது, தனது வாழிடமாகிய கோயிலிலேயே குண்டு விழுகிற போதும் ஒன்றும் பேசாமல் கல்லாய் இருக்கிற கடவுள்....?) ஏன் என்று தெரியாமலே கடவுளைக் கூப்பிட்டுக் கொண்டு குழந்தையின் மூக்கின் கீழே புறங்கையை வைத்துப் பார்க்கிறேன்.

"அப்பாடா!" குழந்தை மூச்சு விட்டு உறங்கியது!

☯☯☯

"அப்பாடா!"

கடலை ஆச்சியைக் கட்டிக் கொண்டு தலையைக் கடலைச் சுளுக்குக் கீழே போட்டுக்கொண்டு - இந்தா -படுத்திருக்கிறான்!

தலைக்கு வரும் குண்டைச் சுளகு காப்பாற்றிவிடும் என்பது போல!....

என்னைக் கண்டதும் எழுந்து ஓடி என் முந்தானைச் சேலையைப் பிடித்து சிரிக்கிறான்.

"அம்மா காசு விழுந்தோச்சு... கடலை இல்லை..." மூன்று வயதுக்குள் அடங்காத துடியாட்டம்.

கோயில் வாசலில் இரத்தக் குவியல்! காயப்பட்டவர்களையும் மரண வாசலுக்குச் சென்றவர்களையும் காவிக்கொண்டு அம்புலன்ஸ் வண்டி ஒன்று பறந்து போகிறது.

கோயில் சூழலை அசுத்தமாக்கி விட்ட திருப்தியில் சகடை மறைந்து போகிறது.

"ஐயோ! சகடையே! உனக்கு மரணம் இல்லையா?" மூன்று வயதை இடுப்பில் சுமந்துகொண்டு - நிறையவே ஆழ்மனதில் பயத்தையும் நிரப்பிக்கொண்டு - வீட்டுக்கு வருகிறேன்.

எனது நிலா முற்றம் கூட ஏதோ ஒரு அச்சத்தில் உறைந்து போய்க்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


கிடக்கிறது. மரம், செடி, கொடி, எதுவும் அசையவில்லையே!

☯☯☯

நான் பாம்புக்குப் பயம். பாம்பு எனக்குப் பயம். நல்ல வேடிக்கை இது! பாம்புக்கான பயம் மறைந்து விட்டதென்று யார் சொன்னது? நேற்றிரவுக் கனவிலும் இதே பாம்பு வந்ததே! கனவில் வரும் பாம்பு வேறு ஏதோ ஒன்றின் "சிம்பல்" என்று உளவியலாளர்கள் சொன்னால் சொல்லட்டும்! எனக்கு வந்தது அசல் பாம்புதான்!



வானத்தில் வேட்டு முழக்கங்களுடன் தோன்றுகிற சீ - பிளேன்!

கொறித்த விழிகளுடன் திசைகளை அளந்து விட்டு.... சீ - பிளேன் தலைக்கு மேல் வட்டமிடுவதை உணர்ந்து.... குழந்தையின் நித்திரையைக் குழப்பித் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு..... பங்கரை நோக்கி ஓடுகிறேன்.

"குழந்தை கவனம்... பக்கத்திலை குண்டு விழுந்தால் காதுச் சவ்வு வெடிச்சிடும்......"

கணவரின் குரல் செவிகளிலும் புலன்களிலும் அடிக்கடி மோதிச் சிலிர்த்து ரீங்கரித்த வண்ணம் இருக்கிறது.

குழந்தைகள் ஒரு சாட்டுத்தான்! முட்டை மாதிரி முடங்கிக்கொண்டு, வீடே அதிருகிற மாதிரி இருமுகிற பாட்டிகுச் சீ - பிளேன் என்றால் பயமில்லையா? அல்லது இளரத்தம் ஓடுகிற என் கணவருக்குத்தான் இல்லையா?

மூட்டைக்குள்ளிருந்து எலும்பும் நாருமான குச்சுக்கையை வெளியே நீட்டி, "தம்பி, சகடை எதாலை போகுது மோனை?" என்று கேட்கும் போது, நடுங்கும் பாட்டியின் குரல் வயதினால் மட்டும் வந்ததென்று சொல்லமுடியாது.

பங்கர் வாசலில்.... பனை மரங்களின் நடுவில் ஒரு பாம்புச் செட்டை. இதற்குள்ளே நுழைந்த பாம்பு வளர்ந்திருக்கிறது. வளர்ச்சிக்கு இடம் கொடாத தோலைக் கழற்றிவிட்டது.

"முந்தநாளும் உதுக்குள்ளை ஒரு செட்டை கிடந்தது மேனை...."

பாட்டியின் குரல் நடுக்கத்துடன் கேட்டது. ஆறு வாரங்களுக்கு ஒரு முறைதானே பாம்பு தோல் கழற்றுமாம்? அப்படியானால்....... இந்த பங்கருக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட பாம்புகள் வாழுகின்றனவா?

பங்கருக்குள் போனால் தலைக்கு மேலே பாம்பு!

வெளியே நின்றால்... தலைக்கு மேலே சீ - பிளேன்!

கண்ணை மூடினால் பாம்பு..... திறந்தால் சீ - பிளேன்! இல்லை திறந்தால் பாம்பு .... மூடினால் சகடை! ஓ... கனவுதானா?

☯☯☯

அந்தச் சத்தம்.... அவ்ரோதான்! மனம் சரியாகவே பாகுபடுத்தி அறிந்துகொள்கிறது. ஆனால் எதுவாக இருந்தால் என்ன? அவ்ரோ.... சீ - பிளேன், சகடை, பொம்பர், ஹெலி. எதுவாக இருந்தாலும் அந்தச் சத்தம் கேட்டவுடன் எனக்குள் பல பாம்புகள் ஓடுவது போலத் திடீரென்று ஒரு பயம் மனதை இறுக்குகிறது.

எந்தப் பெரிய வியாதி வந்தாலும் இப்படி ஒரு வேதனை இருக்கும் போலத் தெரியவில்லை. அந்த வேதனையை எப்படி விபரிப்பது என்றும் புரியவில்லை. எங்கோ வேகமாக ஓடவேண்டும் போல ஒரு அந்தரம்..... ஆனால் அசைய முடியாத ஒரு விறைப்பு.

"ஒரு நாள் அனுபவம் எப்போதும் நடக்கப் போவதில்லை, இது அநேகமாகக் குண்டுபோடப் போவதில்லை" என்று எவ்வளவுதான் அறிவு மனம் நனவு மனம் -சொல்லிக்கொண்டாலும்.... தன்னாட்சி நரம்புத் தொகுதி எல்லாம் தனக்கே தெரியும் என்பது போல் நடந்து கொள்கிறது. பாத்றூமுக்குப் போக வேண்டும் போல இருக்கிறது. உள்ளே நுழைந்தேன்.

☯☯☯

பாம்பு இனங்களில் பத்தில் ஒன்பது பகுதி தீமை அற்றவை. சீ - பிளேன், அவ்ரோ வகைகளில் பத்தில் பத்தும் தீமையானவை!

ஆகவே பங்கருக்குள் நுழைந்தேன். புகையும் புழுக்கமும் இறுக்க எங்கோ ஒரு இருட்குகையில் பாறையின் இடிபாடுகளில் அமுக்குவது போல், யாரோ கழுத்தை நெரிப்பது போல், மூச்சு அடைத்தது.

மனம் என்பது பெரிய பள்ளத் தாக்குத்தான்!

ஆழம், இருட்டு, அடர்த்தி!

அன்று கனவில் தோன்றிய அந்தப் பாம்புக்கு மஞ்சள் நிறமான கண்வில்லை. இந்த மஞ்சள் கண்கள் ஊதாக் கடந்த கதிர்களைப் பிரித்துப் பார்வையைக் கூர்மை அடையச் செய்யும் என்று எனக்குக் கனவிலும் நினைவு வருகிறது பாருங்கள்!

"நீ என் மனைவியைக் கொலை செய்தாய். நான் உனக்குச் சாபம் போட்டிருக்கிறேன்..." பாம்பு பேசுகிறது.

"பாம்பு சாபம் போடுவதை நம்ப நான் ஆயத்தமில்லை. நான் புத்தி ஜீவி"

- என்பது நான் சொல்லாத பதில்.

பயங்கரமாக நாக்கை நீட்டிக் கொண்டு அது என்னைத் துரத்துகிறது. இது "தீமையற்றதாக இருக்கலாம்" என்று எனக்குத் தோன்றவில்லை. நான் ஓட்டமாய் ஓடுகின்றேன்.

"என்னை ஒன்றும் செய்யாதே" என்று கெஞ்சுகிறேன். பாம்பு 'செவிடு' என்பது என் மனதில் உறைக்கவில்லை.

☯☯☯

அவ்ரோவின் சத்தம் என்னை நோக்கி வருகிறது.

☯☯☯

இரவு நேரம்! அமாவாசை! இப்போது பாம்பு எனக்கு மிக

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அண்மையில் வந்து விட்டது. அதன் கண்கள் பூனையின் கண்கள் போலப் பிரகாசமாய்! என்னை நுணுக்குக் காட்டியில் பார்ப்பது போல் தெளிவாகப் பார்த்திருக்கும்.

நாக்கை நீட்டி என்னைத் தொட்டுப் பார்க்கிறது. எனது உடல் மணத்தை அச்சொட்டாக அறிந்திருக்கும். இனிமேல் தப்புவது சாத்தியமில்லையோ?

"உட்பக்கம் வளைந்து, ஊசி போலக் கூர்மையான உன் பற்களால் என்னுடலில் நீ நஞ்சு செலுத்த நான் விடப் போவதில்லை....."

நான் திடீரத் துணிவுகொண்டேன். வேகமாய் ஓடி, வேலியில் கிழுவங் கதியாலை முறித்தேன். விசையுடன் ஓங்கி தலையில் ஒரு போடு போட்டேன்.

"டும்..."

☯☯☯

என்னை நோக்கி வந்து கொண்டிருந்த அவ்ரோவின் சத்தத்தின் மத்தியில் அந்த "டும்..." சத்தம் மிகத் தெளிவாகவே கேட்டது.

"நீ என்னிடம் தப்பி விட்டாய். ஓ...... என்னை..... என்னை ஓ..... ஆ..... ஆ..... முடித்து விட்டாயா?"

முனகிக் கொண்ட உயிரை விட்டது பாம்பு.

கண் விழித்தேன்.

பூமியில் பாதம் பரவாத பரவசம் மனதில் இருந்தது.

☯☯☯

தெருவெல்லாம் ஒரே களபுளா! இவர்கள் எல்லாம் எங்கே ஓடுகிறார்கள் வலு உற்சாகமாய்?

"டேய்..... பிளேன்...."

"ஙிங் ஙிங் ஙிங்...."

"மச்சான் அவ்ரோ...."

"பீப்... பீப்.... சரியடா...."

"இண்டைக்கு இரண்டாவது ஆளும் முடிஞ்சார். இனிமேல் இந்தப் பக்கம் தலையும் வைக்கமாட்டார்!"

எல்லாரும் சிரித்துக் கொண்டே ஓடுகிறார்கள் - பார்க்க!

மேதினக் கூட்டத்தை விட..... அதிகளவு சனம்! நான் இப்போது பாம்புக்குப் பயமில்லை!

ஓ..... பிளேனுக்குந்தான்! □



மாணவர் படும் கஷ்டத்தை, துன்பத்தை விளக்கும் படம்


ரோம ராச்சியத்தை விளக்கும் படம்


10500 ஆண்டுகளுக்கு முன் மனிதன் வாழ்ந்த நிலையை விளக்கும் காட்சி


ஈழ வரலாறு அந்நியர் வருகையினால் அழிந்தததை சித்தரிக்கும் படம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கணணியில் தமிழ்

## தமிழ் விசைப்பலகை எவ்வாறு அமைய வேண்டும்?

தட்டச்சு இயந்திரங்களிலும் கணணிகளிலும் காணப்படும் விசைப்பலகையின் (Keyboard) அமைப்பு மிகுந்த சிரத்தையுடன் வடிவமைக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தட்டச்சு வினைஞர்கள் விரைவாக எழுதுவதற்கு ஏற்ற வகையில் மட்டுமன்றி கைவிரல்களின் இயல்பான அசைவுகளுக்கு ஏற்ப இலகுவாக எழுத்துக்கள் அணுகப்படுவதற்கேற்றவாறு விசைப்பலகை அமைக்கப்பட வேண்டும். இவ்வாறான விசைப்பலகை ஒன்றிலேயே விரல்களின் தேவையற்ற அசைவுகளைத் தவிர்த்து, களைப்படையாமல் இலகுவாகவும் விரைவாகவும் தட்டச்சுச் செய்யமுடியும்.

இவ்வாறு விரைவுத்தன்மைக்கும் இலகுத்தன்மைக்கும் ஏற்ற முறையில் தமிழ் விசைப்பலகைகள் உள்ளனவா என்ற கேள்வி இங்கு எழுகின்றது. கணணியில் தமிழ் எழுத்துக்களை அறிமுகப்படுத்தி வரும் பலரும் பலவிதமான தட்டச்சு முறைகளையும் அறிமுகப்படுத்தி வருகிறார்கள். அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அனைத்து விசைப்பலகைகளும் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளவையாகவே தென்படுகின்றன. இது குறித்து ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

தமிழில் அமைக்கப்பட்டுள்ள விசைப்பலகைகள் பற்றி ஆராய்வதற்கு முன்னதாக ஆங்கில, ஐரோப்பிய மொழிகளில் பயன்பட்டு வரும் விசைப்பலகையின் வரலாறு தரும் அனுபவத்தை நோக்குவோம்.

ஐரோப்பிய மொழிகளில் தற்போது வழங்கிவரும் தொடுகை (touch) முறையிலான தட்டச்சியற்றலில் 'qwerty' விசைப்பலகை அமைப்பு பயன்படுத்தப்படுகிறது:

இரண்டாவது வரிசையில் இடது பக்கத்தில் அமைந்துள்ள q, w, e, r, t, y என்ற எழுத்துக்களைச் சேர்த்து `qwerty' என்று இவ் விசைப்பலகை பெயரிட்டு அழைக்கப்படுகிறது. இந்த முறையானது C.L. Sholes என்பவரால் *1870-களில்* வடிவமைக்கப்பட்டதாகும். [1]

இவர் வடிவமைத்த தட்டச்சு இயந்திரத்தில் எழுத்துகளின் அச்சுமுகப்புக்களைத் தாங்கிய பகுதிகள் சுருள் கம்பிகளின் (springs) இழுவை விசையினால் இயங்கின. அச்சுமுகப்புகள் எழுத்தச்சுக் கூடையில் அரைவட்ட வடிவில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். ஓர் அச்சுமுகப்பானது தட்டச்சுவினைஞர் உரிய விசையை அழுத்தியதும் எழுந்து தட்டச்சு நாடாவில் மோதித் திரும்பும். இம்மோதலின் போது நாடாவினூடாக அதன் கீழுள்ள கடதாசியில் உரிய எழுத்துப் பதியும். இந்த வகையான பொறிமுறைத் தட்டச்சு இயந்திரங்களே தமிழீழத்திலும் தமிழகத்திலும் இன்றும் பெருமளவில் வழக்கில் உள்ளன.

ஆரம்பத்தில் ஆங்கில எழுத்துக்களை qwerty முறையில் அன்றி a b c d e என்ற அகர வரிசையில் விசைபலகையில் ஒழுங்குபடுத்தினர். பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் காரணமாக ஒரு பிரச்சினை இருந்தது. ஒரு எழுத்துக்கான விசையை அழுத்தியதிலிருந்து குறித்த அச்சுமுகப்பு நாடாவில் மோதித் திரும்ப எடுக்கும் நேர இடைவெளிக்குள் அடுத்த விசை அழுத்தப்படுமானால் நாடாவில் மோதித் திரும்புகின்ற அச்சுமுகப்பும் அடுத்ததாக மோதச் செல்லுகின்ற அச்சுமுகப்பும் தமக்குள் மோதிச் சிக்கிக்கொண்டன. அந் நிலையில் அச்சுமுகப்புகள் ஒன்றில் ஒன்று மோதிச் சிக்குண்டுவிடும் நிலை அடிக்கடி தோன்றியது. இது அச்சுவினைஞரின் வேகத்தையும் பொறுமையையும் சோதனை செய்வதாக அமைந்தது. இவ்வாறு நிகழ்வதை முற்றாகத் தடுக்கவேண்டுமாயின் தொழில்நுட்பத்தையே மாற்றவேண்டும். மாற்றுத் தொழில்நுட்பம் இன்மையினால் விசைப்பலகையில் எழுத்துக்களின் அமைவை ஏதோ ஒரு முறையில் மாற்றியமைத்து இச்சிக்கல் ஏற்படும் நிகழ்தகவைக் குறைக்கும் வகையில் ஒரு விசைப்பலகையை ஒழுங்கமைத்துக் கொள்வதே ஒரே வழியாக இருந்தது. இந்நோக்கில் உருவாக்கம் கொண்டதே qwerty எனும் மேற்குறித்த விசைப்பலகை அமைப்பாகும். தட்டச்சுவினைஞர் தட்டச்சு இயந்திரத்திலிருந்து தனது கையை எடுத்து சிக்கிக்கொண்டுவிட்ட அச்சுமுகப்புக்களை விலக்கி மீண்டும் விசைப்பலகையில் தட்டச்சு செய்ய வேண்டிய நிகழ்வுகளைக் குறைக்க வேண்டுமாயின் தட்டச்சுவினைஞர் ஒரு விசையை அழுத்தி மீண்டும் அடுத்த ஒரு விசையை அழுத்துவதற்கிடையிலான கால இடைவெளியைக் கூட்டவேண்டும்; அதாவது விசைப்பலகையின் அமைப்பு தட்டச்சுவினைஞரை மிகவிரைவாகத் தட்டச்சுச் செய்யமுடியாதவாறு தடுக்கவேண்டும். இந் நோக்கிலேயே இந்த qwerty விசைப்பலகை அமைக்கப்பட்டுள்ளது.




**C.L. Sholes என்பவரால் *1870-களில்* வடிவமைக்கப்பட்ட விசைப்பலகை**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தற்போது தொழில்நுட்பம் மாறி விட்டது. பெருமளவு வழக்கிலுள்ள மின்சாரத் தட்டச்சு இயந்திரங்களில் (electric keyboard) அச்சுமுகப்புகள் பொறியியல் விசைமூலம் எழுந்து சென்று மோதவேண்டிய தேவையோ, அவ்வாறு செல்லும்போது மோதித் திரும்பும் வேறொரு அச்சுமுகப்பைச் சந்திக்கவேண்டிய தேவையோ இல்லை. எனவே தற்காலத் தட்டச்சு இயந்திரங்களில் qwerty முறை பின்னடைவான முறையாகக் காணப்படுகிறது. தட்டச்சுவினை ஞரை முழுமையான தட்டச்சுச் செய்யாதவாறு தடுப்பதாக இது அமைந்திருக்கிறது.

விசைப்பலகை பற்றிய சர்ச்சைகள் பிற்காலத்தில் எழுந்தபோதெல்லாம் qwerty விசைப்பலகை அமைப்புக்கு எதிராக வாதிட்டவர்கள் இக் குறைபாட்டைப் பற்றி பலவிதமாக வாதிட்டார்கள். கண்ணை மூடிக் கொண்டு ஒருவர் ஒழுங்குபடுத்தும் விசைப்பலகை ஒன்று கூட qwerty அமைப்பைக் கொண்ட விசைப் பலகையை விட விரைவானதாக அமையும் என்று சிலர் வாதிட்டார் கள். ஆனாலும் qwerty விசைப் பலகை அமைப்பு ஏற்கனவே பல இடங்களில் அறிமுகமாகிவிட்டதனா லும் பலர் அதைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டமையினாலும் திடீர் மாற்றங்களைச் செய்ய பல நிறுவனங்கள் முன்வரவில்லை.

இவ்வாறாக நவீன தட்டச்சு இயந்திர, கணணி தொழில்நுட்பங்க ளில் முன்னாளைய தட்டச்சு இயந் திரங்களில் காணப்பட்ட தொழில் நுட்பச் சிக்கல் மறைந்துவிட்டாலும் பழைய விசைப்பலகை அமைப்பே பயன்படுத்தப்படுகிறது. ஆகவே தற் போது ஆங்கில, ஐரோப்பிய மொழி களில் காணப்படும் விசைப்பலகை பின்னடைவான ஒன்றாகும்.

கணணி நிறுவனங்களும் புதிய தட்டச்சு இயந்திரங்களைத் தயாரித்த நிறுவனங்களும் விசைப்பலகையை மாற்றி அமைத்தால் தமது தயாரிப் புக்களைச் சந்தைப்படுத்துவதில் சிர மம் ஏற்படும் என்ற காரணத்தி னால், அதாவது பழைய விசைப் பலகை முறைக்குப் பழக்கப்பட்டு விட்ட பாவனையாளர் புதிய விசைப் பலகையை விரும்பமாட்டார்கள் என்பதால், பழைய விசைப்பலகை முறையையே தமது தயாரிப்புக்க ளிலும் அறிமுகப்படுத்தினர்.

வெற்றி நிலவன்

qwerty விசைப்பலகை ஒழுங்கு படுத்தப்பட்ட காலத்தில் தொடுகை முறை (touch method) தட்டச்சு செய் யும் முறைமை கண்டுபிடிக்கப்பட்டி ருக்கவில்லை.[2] இம்முறை பின்னரே அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை qwerty விசைப்பலகையின் வேகத் தைக் கூட்டுவதற்கு ஒரு காரணியாக அமைந்தது என்று கொள்ளலாம். இன்றுவரை இவ்விசைப்பலகை அமைப்பு நிலைத்து நிற்பதற்கு தொடுகை முறையைப் பலர் பழகி விட்டமையும் ஒரு காரணமாகும்.

விசைப்பலகையை இலகுவாக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டன. பலமுறைகள் அறிமுகப்படுத் தப்பட்டன. ஆரம்பத்திலேயே, 1890-ம் ஆண்டுகளில் Ideal என்ற விசைப் பலகை [3] ஆங்கிலத்தில் 70 வீதமாக உபயோகிக்கப்படும் எழுத்துக்க ளான D, H. I, A, T, E, N, S, O, R ஆகியவற்றை விசைப்பலகையின் ஒரே வரிசையில் அமைத்து கைவிரல் கள் அசையவேண்டிய தேவையைக் குறைத்தது. ஆனால், திறமையான முறையில் சந்தைப்படுத்தப்படாமை யினாலோ, தொழில்நுட்பத்தினாலோ, அல்லது வேறு ஏதோ காரணத் தினாலோ சந்தைப்படுத்தலில் அவ் விசைப்பலகை வெற்றிபெறவில்லை.

பின்னர் 1932-ம் ஆண்டில் Dr. A. Dvorak (Professor of Education and Director of Research at the University of Washington in Seattle) என்பவர் ஒரு விசைப்பலகையை அமைத்தார். இவரது விசைப்பலகை மிகவும் முக் கியமானதாக விளங்குகிறது. இது இலகுவாக்கப்பபட்ட Dvorak விசைப் பலகை (Dvorak Simplified Keyboard, DSK) [4] என அழைக்கப்படுகிறது. அது பின்வருமாறு அமைகிறது:

மேற்படி விசைப்பலகை அமைப்பு qwerty விசைப்பலகை அமைப்பை விட 35 வீதம் வேகமானது என Dvorak தெரிவித்தார். பல ஆங்கில நூல்களின் உள்ளடக்கம் பரிசோதிக் கப்பட்டு, எழுத்துக்கள் ஒவ்வொன் றும் எத்தனை முறை பயன்படுத் தப்பட்டுள்ளன என்று கணிப்பிட்டுக் கூடுதலாக ஆங்கிலத்தில் பயன்படுத் தப்படும் எழுத்துக்களை வரிசைப் படி ஒழுங்குபடுத்தினர். (e t a o n r i s h d l f c u m u g y p w b v k x j q z என்பதே ஐரோப்பிய மொழிகளி லான ஒழுங்கு என்பதே பொதுவான கருத்தாகும்) அதன்பின் அடிக்கடி அருகருகே வந்து பொருந்துகின்ற எழுத்துச் சோடிகளின் நிகழ்தகவை யும் கணிப்பிட்டு ஒழுங்கமைத்தார். இரண்டு எழுத்துக்கள் மாத்திர மின்றி அடிக்கடி அருகருகே வரு கின்ற மூன்று, நான்கு எழுத்துத் தொடர்களையும் கணிப்பிட்டார். பின்னர் இலகுவான முறையிலான ஒழுங்கில் எழுத்துக்களின் நிகழ் தகவுக்கேற்ப விசைப்பலகையை வடிவமைத்தார்.

இன்று Dvorak International Federation என்ற நிறுவனம் இந்த விசைப்பலகை முறையின் பயன்பாட் டைப் பெருக்குவதற்கு பெருமுயற்சி செய்துவருகின்றது. பலர் இந்தப் புதிய விசைப்பலகை முறையை இன்று அறிந்திருந்த போதும் இதன் பிரயோகம் குறைவாகவே இருக்கி றது. Dvorak விசைப்பலகை தயாரிப் பதற்கு மேலகதிக செலவு எதுவும் ஏற்படாது. காரணம் ஒரேவிதமான முறையிலான விசை எண்ணிக்கை யையும் ஒழுங்கையும் கொண்ட விசைப்பலகையே பயன்படுத்தப்பட் டுள்ளது. எழுத்துக்கள் மட்டுமே இடம் மாறியுள்ளன. சாதாரண கணணிகள் அனைத்திற்கும் இலவச மாக Dvoark விசைப்பலகைக்கான




**Dr. A. Dvorak** என்பவரால் 1832-ல் வடிவமைக்கப்பட்ட விசைப்பலகை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கணணி நிகழ்ச்சித் தொகுப்புக்கள் உள்ளன. அப்படியிருந்த போதும் இந்த விசைப்பலகை முறையைப் பயன்படுத்தத் தயங்குவதற்குக் காரணம் இது பெருமளவு வழக்கில் இல்லை என்ற காரணமேயாகும். அமெரிக்க கடற்படையினால் ஆதரிக்கப்பட்டு சீர்மானம் செய்யப்படவிருந்த நிலையில் திரு. A. Dvorak இற்கும் இன்னுமொரு ஆய்வாளருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக சீர்மானம் செய்யப்படவில்லை என்றும், அவ்வாறு சீர்மானம் செய்யப்பட்டிருந்தால் இன்று பெருமளவில் உபயோகிக்கப்படும் விசைப்பலகையாக இருந்திருக்கக் கூடும் என்றும் சிலர் தெரிவிக்கின்றனர்[5]. உலகின் அதி விரைவான தட்டச்சுவினைஞர் ஒரு Dvorak தட்டச்சுவினைஞர் (Barbara Blackburn, நிமிடத்திற்கு 170 சொற்கள்) என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது[6]. Dvorak விசைப்பலகையானது வரலாற்றில் மறக்கப்படமுடியாததாக அமையும் என்பது திண்ணம். ஆனால், எதிர்காலத்திலாவது சந்தையில் முழுமையான வெற்றியைக் காணுமா என்பது ஐயமே.

இந்த ஆங்கில விசைப்பலகை அனுபவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்னவெனில் தமிழ் மொழிக்கான விசைப்பலகையைத் திறம்பட வடிவமைத்துக் கொள்வதற்குக் காலந் தாழ்த்தக்கூடாது என்பதே.

தமிழ்த் தட்டச்சு இயந்திரத்தில் காணப்படும் விசைப்பலகையும் சுருட்கம்பிகளின் இழுவிசையினைப் பயன்படுத்தித் தொழிற்படும் பழைய தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. இதன் விசைப்பலகை அமைப்பு, வருமாறு அமைந்துள்ளது:




தமிழ் விசைப்பலகை ஆங்கிலத்தைப் போலன்றி எண்ணிக்கையில் கூடிய எழுத்துக்களைக் கொண்டிருக்க வேண்டியதான நிலை காணப்படுகிறது. எனவே ஒன்றுக்கு மேற்பட்ட விசைகளைப் பயன்படுத்தி சில எழுத்துக்களை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அசையா விசைகள் (dead keys) பயன்படுத்தப்படுகின்றன. அசையா விசையில் மெய்யெழுத்துக்களுக்கான மேற்புள்ளியும் (˙) இகர, ஈகாரங்ளுக்கான மேல்விலங்குகளும் (ி, ீ) சில உகர, ஊகாரங்களுக்கான கீழ்விலங்குகளும் வைக்கப்பட்டுள்ளன. சில அகலத்தால் கூடிய எழுத்துக்களை இரண்டாகப் பிரித்து இரண்டு விசைகளில் வைத்துள்ள பரிதாப நிலைமையும் உண்டு.

அச்சகத்தில் உள்ள எழுத்துப் பெட்டிகளை (Type cases) நோக்கினால் அங்கே சகல எழுத்துக்களும் தனித்தனி எழுத்துக்களாக வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். (க், க, கி, கீ....). இதனால்தான் அச்சிடப்பட்ட செய்தித் தாளிலோ அல்லது நூலிலோ நாம் தரமான எழுத்துக்களைக் காணக்கூடியதாக உள்ளது.

கணணியில் தமிழ் எழுத்துக்களைக் கையாளும் முறைமை தமிழ்த் தட்டச்சு முறையை விட தமிழ் அச்சக முறையை ஒத்ததாகவே இருக்க வேண்டும். காரணம், கணணிகள் சாதாரண அலுவலக வேலைகளுக்கு மாத்திரமின்றி பதிப்புத்துறையிலும் பயன்படுத்தப்பட வேண்டியனவாகும்.

தட்டச்சு இயந்திரத்தில் எழுத்துக்களைக் கையாளும் போது நாம் எழுத்துக்களை குறித்த அளவில் உடனடியாக கடதாசியில் உருவாக்கிவிடுகிறோம். இதனால் மேல், கீழ் விலங்குகள் வந்து பொருந்தி விடுகின்றன. ஆனால் கணணியில் இவ்வாறல்ல. ஒருமுறை உருவாக்கப்பட்ட செய்தி பல வேறுபட்ட அளவுகளிலும் புனைவுகளிலும் கையாளப்படவேண்டியதாக உள்ளது. எனவே தமிழ் எழுத்துக்களின் தரத்தை அச்சகத்தின் தமிழ் எழுத்துக்களின் தரத்துக்கு நிகரானதாக கணணியில் அமைக்கவேண்டும்.

கணணியிலும் தட்டச்சியந்திரங்களிலும் காணப்படுவதைப் போல எழுத்துக்களை அடிப்படை எழுத்துக்கள், மேல்விலங்கு, கீழ்விலங்கு, மேற்புள்ளி என்று பிரித்து வைத்தால் அச்சியல் மரபுக்கேற்ற தரத்தில் எழுத்துக்களை கடதாசியிலோ அல்லது கணணித் திரையிலோ உருவாக்கமுடியாது. காரணம் எழுத்துக்களின் அசைவுகள் மாறுபடுகின்ற போதோ அல்லது எழுதப்பட்ட வரிகளுக்கு சில புனைவியல் அம்சங்களைச் சேர்க்கும் போதோ (வெளிக்கோடுகளைச் சேர்த்தல், வரிகளை வளைவாக்குதல் போன்ற புனைவுகளில்) மேற்புள்ளி, மேல், கீழ் விலங்குகள் அடிப்படை எழுத்துக்களில் இருந்து விலகி நின்று திருப்தியற்ற தோற்றத்தைக் கொடுக்கும். இதனை கணணிகளில் தயாரிக்கப்பட்டு வெளிவரும் சில தமிழ்ச் சஞ்சிகைகளில் அவதானிக்க முடிகிறது. இது தவறான அணுகு முறையின் விளைவு ஆகும்.

தரமான அச்சிடலுக்கு தனித்தனியே மேற்புள்ளி, மேல், கீழ் விலங்குகளைக் கையாளுவதை விடுத்து அனைத்து எழுத்துக்களையும் அச்சகங்களில் காணப்படும் எழுத்துக்களைப் போல கையாள வேண்டிய தேவை உள்ளது. விசைப் பலகையில் விசைகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு மேற்புள்ளிக்கும், பக்க, மேல், கீழ் விலங்குகளுக்கென தனித்தனி விசைகளை வைத்திருந்தாலும் கணணி அச்சிடும் போதோ, திரையில் எழுத்துக்களை எழுதுகின்றபோதோ உரிய பகுதிகளை ஒன்றிணைத்து தனியான எழுத்துக்களால் அவற்றைப் பிரதியீடு செய்து எழுதக்கூடியதாக இருக்கும். இதனை கணணி நிகழ்ச்சித் தொகுப்புக்களின் மூலம் திறம்படச்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

செய்யலாம். விசைப்பலகையில் மேற்புள்ளி, மேல், கீழ் விலங்குகளைத் தனித்தனியாகவே வைத்துக் கொண்டு கணிணி நிகழ்ச்சியானது உரிய எழுத்துக்கள் அருகருகே வருகின்ற போது தானகவே உரிய தனி எழுத்துக்களைப் பிரதியீடு செய்யக் கூடியதாக அமைக்கமுடியும். இதற்காக கணணிக்கான விசேட அசையா விசை முறைகளும் (Dead keys), QuickDraw GX போன்ற நவீன முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கணணியின் விசைப்பலகையில் காணப்படும் அசையாவிசையின் தொழிற்பாடும் சாதாரண தட்டச்சு இயந்திரத்தில் காணப்படும் அசையா விசையின் தொழிற்பாடும் வேறு பாடானவை. உதாரணமாக தட்டச்சு இயந்திரத்தில் 'க்' என்ற எழுத்தை உருவாக்குவதற்கு முதலில் மேற்புள்ளியைக் (˙) கொண்ட அசையா விசையை அழுத்தி அதனை கடதாசியில் தட்டச்சுச் செய்துவிட்டு பின்னர் 'க' என்ற எழுத்தைத் தட்டச்சுச் செய்து 'க்' இனைப் பெற்றுக்கொள்கின்றோம். இதே விடயத்தை கணணியில் செய்யும்போது முதலில் நாம் அழுத்தும் மேற்புள்ளிக்கான அசையாவிசை அழுத்தப்பட்டதும் மேற்புள்ளி உருவாக்கப்படுவதில்லை. மாறாக அச்செயற்பாடானது கணணி நிகழ்ச்சித் தொகுப்புக்கு ஒரு அறிவித்தலைக் கொடுக்கும். அதாவது அடுத்ததாக அழுத்தப்படும் விசையைப் பொறுத்து உரிய எழுத்தைத் தனி எழுத்தாக கணணியில் பிரதியீடு செய்துகொள்ள வேண்டும் என்ற அறிவித்தலே அது. தொடர்ந்து 'க' என்ற எழுத்துக்குரிய விசை அழுத்தப்பட்டதன் பின்பு கணணியானது 'க்' என்ற எழுத்தை தனி எழுத்தாக எழுதுகின்றது. 'ச' எழுதப்பட்டால் 'ச்' என்ற எழுத்தை எழுதுகின்றது. இவ்வாறே கணணியில் அசையா விசை தொழிற்படுகின்றது. அசையா விசையினைப் பயன்படுத்தும் விசைப் பலகை முறை தமிழ்க் கணணி உலகில் தற்போது ஓரளவு பிரசித்தமாகி வருகின்றது. அசையாவிசை ஆங்கிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதற்குக் காரணம் ë, ä, ö, â, ê, ñ போன்ற எழுத்துக்களாகும். எம்மில் பலர் நினைப்பதைப் போல இரண்டு எழுத்துப் பகுதிகளைப் பொருத்துவதன் மூலம் இவ்வெழுத்துக்கள் கணணியில் தயாரிக்கப்படுவதில்லை (சில கணணிகள் விதி விலக்காகும்). அவ்வாறு தயாரிப்பதை அச்சியற்துறை சார்ந்தோர் விரும்புவதில்லை. காரணம் Kerningpair (எழுத்து நெருக்கச் சோடி) போன்ற நுணுக்கமான அச்சியற் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தடையாக அமைவதாகும்.

அடுத்ததாக QuickDraw GX[7] போன்ற விவேக முறைகள் ஆங்கிலத்தில் ஏன் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன என்ற கேள்வி சிலருக்கு எழலாம். ஆங்கிலத்திலே அருகருகே fi, fl போன்ற எழுத்துக்கள் வரும் போது அவற்றை மரபு அச்சியலில் தனியான அச்சாக உள்ள ஒரு எழுத்துச் சோடியினால் பிரதியீடு செய்வார்கள். இதைக் கூட்டெழுத்து (ligature) என்று அழைப்பார்கள். இதன் உபயோகம் வாசிக்கும் திறனுக்கும் தரமான அச்சியலுக்கும்

| | |
|---|---|
| fifty | fifty |
| flight | flight |

கூட்டெழுத்துக்கள் இன்றியும் கூட்டெழுத்துக்களுடனும் எழுதப்பட்டுள்ள சொற்கள்

தேவை என்ற கருத்து பல அச்சியல் வல்லுனர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது. தவிர, சில எழுத்துக்கள், சொற்களில் அமையும் இடங்களுக்குத் தக்கவகையில் நுணுக்கமான தோற்ற மாற்றப்பாடுகளோடு அமைந்தால் வசனங்களின் வாசிக்கப்படுந் திறனைக் கூட்டுவதோடு அச்சியலும் மெருகூட்டப்படும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலக் கணணிகள் அனைத்திலும் இவ்வாறான வாய்ப்புகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. இதற்கான ஒரு முன்னோடிதான் QuickDraw GX என்னும் முறையாகும். இம்முறையில் பயன்படும் எழுத்துவடிவத் தொகுதியை (font) திறமையான எழுதுத்தொகுதி (intelligent font) என்று அழைக்கலாம். அச்சுவினைஞர் கணணியில் அச்சிட்டுச் செல்லும்போதே கணணியானது உரிய எழுத்துக்கள் அருகருகே வந்து அமைகின்ற தருணத்தில் அவற்றை அகற்றி அவற்றுக்கான கூட்டெழுத்துக்களை இட்டுவிடும். இவ்வாறான நுணுக்கங்கள் தற்போதைய கணணிக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் தொகுதிகளில் (operating system) சேர்க்கப் பட்டு வருவது தமிழ் எழுத்தைக் கணணியில் திறமையாகப் பயன் படுத்துவதற்குச் சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

எஞ்சியிருப்பதெல்லாம் நாம் செய்யவேண்டியவை மட்டுமே! திறமையாக தமிழ் விசைப்பலகையை எவ்வாறு வடிவமைக்கலாம் என்பது பற்றிய விடயங்களை ஆராய்ந்து அவ்வாறான முறை ஒன்றுக்கான முன்மொழிவை மேற்கொள்வதே ஆகும். இதையும் எமக்காக மேலை நாட்டவர்களோ, அல்லது கணணி நிறுவனங்களோ செய்யும் என்று எதிர்பார்த்து நிற்பதில் பயனில்லை.

தமிழில் Dvorak முறையைத் தழுவி அமைக்கப்பட்ட மாதிரி விசைப்பலகை ஒன்று இக் கட்டுரைத் தொடரில் எதிர்வரும் பாகங்களில் தரப்படும். அவ்வாறான விசைப்பலகையின் மாதிரியை நோக்குவதற்கு முன்னர் தமிழ் விசைப் பலகைகளில் உள்ள ஏனைய பிரச்சனைகள் பற்றியும் தமிழ் விசைப்பலகைச் சீர்மானம் ஒன்றை அமுல்படுத்துவதில் எதிர்நோக்கக் கூடிய சிரமங்கள் பற்றியும் எதிர் வரும் பாகத்தில் நோக்குவோம்.

**அடிகுறிப்பு:**


1. THE IBM PC, Keyboard and Video Display (Chapter 8), Addisson Wesley 1990.
2. A short history of the Keyboard, Phil Lemmons, West Cost Editor, BYTE, November 1982.
3. Wilfred A. Beeching: Century of the Typewriter, Heinemann: London 1974
4. D. Allan Drummond, Princeton University, Mechanical Engineering Department:

(WWW:http://www.princeton.edu/drum mon d/dvorak/dvorak.html)

5. Guinnes book of World Records.
6. Donald R. Gentner and Donald A. Norman, The Typist's Touch, PSYCHOLOGY TODAY: MARCH 1984
7. WWW Page: http://www.info.ap ple.com/gx/gx.htm l, Apple Compu ter Inc.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# படைப்பும் பார்வையாளரும்

**நாம் பார்க்கும், படிக்கும் அனைத்தும் எமக்குப் புரிய வேண்டும் என்பது மிக மிக இன்றியமையாத ஒன்றே. விளக்கமாகப் புரிந்து கொள்வதே தொடர்பாடலின் பயன். இருப்பினும் எல்லாம் புரிந்த நிலையில்தான் நாம் கலை, இலக்கியங்களை நயக்கிறோமா?**

கலை இலக்கியம் பற்றிய சிந்தனைகள் எப்பொழுதும், எக்காலத்திலும் சில பிரச்சினைகளை எதிர்நோக்கிய வண்ணமே இருக்கும். கலை இலக்கியங்கள் எப்பொழுதும் இரு வேறு தளங்களிலேயே இருந்து வந்துள்ளன. ஒன்று, ஜனரஞ்சக அல்லது மக்கள் நயப்புத் தளம்; மற்றையது செந்நெறித்தளம். இன்று, இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் நிற்கும் மூன்றாவது தளமொன்றும் கலை, இலக்கியங்களில் இருப்பதைக் காணலாம்.



"செந்நெறி" என்ற பதத்தினை, பழையனவற்றை அல்லது குறித்த ஒரு காலத்து கலை, இலக்கியங்களை மட்டும் குறிப்பதாகவோ அல்லது "உயர்ந்தவை", "சீர்மை" பெற்றவை எனக் கருதப்படுபவற்றை மட்டும் குறிப்பதாகவோ கொள்ளாது அனைத்துக் காலத்திலும் காணக் கூடியதாகவுள்ள கலை இலக்கிய வகைகளுள் ஒன்றினைக் குறிப்பதாகவும் கொள்வது நல்லது.

"ஜனரஞ்சகம்" என்ற பதம் கொச்சைப் படுத்தப்பட்டதொரு பதமாக இன்று இழிந்து விட்டிருப்பதால் "மக்கள் நயக்கும்" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படக் கூடும். பெரும்பாலான மக்களால் நயக்கப் படுவனவற்றை இவை குறித்து நிற்கும்.

இன்று எம்மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடக, அரங்க நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், "புரிதல்", "புரியாமை" என்றதொரு பிரச்சினை மேற்கிளம்பியுள்ளது. இப்பிரச்சினை பற்றி உரத்துச் சிந்திப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

எந்தவொரு கலை, இலக்கியப் படைப்பும் "இலக்குப்" பார்வையாளர்/வாசகரைக் கருத்திற் கொண்டே படைக்கப்படும். அவர்களைக் குறியாக வைத்தே அவை படைக்கப் படும். இந்த நிலை சரியாகச் செயற்படும் பட்சத்தில் "புரியாமை" என்ற பிரச்சினை தோன்றுவதற்கு வாய்ப்பிருக்காது.

நாடகத்தைப் பொறுத்தவரையில், இலக்குப் பார்வையாளர் என்ற வட்டத்தை அமைத்துக் கொள்வது மிகவும் கடினமானதொன்றாக இருக்கும். குறிப்பாக, குறுகியதொரு நிலப்பரப்பையும் செறிவான மக்கள் பரம்பலையும் கொண்ட யாழ்ப்பாணக் குடா நாட்டில் இந்த இலக்கை வரையறை செய்துகொள்வதில் சிரமம் உள்ளது. மேலும் ஒரே இடத்தில் வாழும் மக்கள் மத்தியிலும் ரசனை, தரம், எதிர்பார்ப்பு, அனுபவம், அறிவெல்லை, பரிச்சயம் என்பவற்றில் பல்வகைப்பட்ட நிலையில் மனிதர் வாழ்வதை அவதானிக்க முடியும். பல்கலைக்கழகத்தைத் தானும் தனியொரு இலக்கு வட்டமாக எடுப்பதில் சிரமம் உண்டு. மாணவர் நிலையில், மட்டுமல்லாது ஆசிரியர் நிலையிலும் பல்வகைத் தன்மை நிலவுவதை அவதானிக்க முடியும். இந்த நிலையில் பல்கலைக் கழகத்துக்கு வெளியேயான சமூக மட்டத்தில் நிலவும் பல்வகைத் தன்மை பற்றிப் பேசவேண்டியதில்லை. நாடகம் மட்டுமன்றி, ஆற்றுகைக்கலைகள் அனைத்தும் இப் பிரச்சினையை எதிர்நோக்கியே உள்ளன.

பார்வையாளர் மட்டத்தில் மட்டுந்தான் இத்தகைய பல்வகைத்தன்மை நிலவுகிறது என்று கூறிவிடமுடியாது; ஆற்றுகைகளில் ஈடுபடும் கலைஞர்கள் மட்டத்திலும் இத்தகைய வேறுபாடு நிலவுவதைக் காணலாம். இதனைக் குறையென்று பார்ப்பது நோக்கமல்ல; இதுவே யதார்த்த நிலை. இந்த யதார்த்த நிலையை எவ்வாறு கையாளுவது என்பதே சிந்திக்கப்பட வேண்டிய பிரச்சினையாக உள்ளது.

இலக்கியங்களைப் பொறுத்தவரையில் இப் பிரச்சினை பாரியதானதாக இல்லை. வாசகன் தான் விரும்பியதைத் தெரிவுசெய்து படிப்பான். மற்றையதைப்பற்றி அவன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அதிகம் அக்கறைகொள்ளமாட்டான்.

ஆற்றுகைக் கலைகளுக்குச் செல்லும் பார்வையாளருக்கு இலக்கிய வாசகர்களுக்குரிய தெரிவு வாய்ப்பு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. ஆற்றுகைகளின் தயாரிப்பாளர்களைப் பொறுத்தவரையிலும், இலக்குப் பார்வையாளரைத் தெரிதல் என்பது கடினமான ஒன்றே. மக்கள் கலை எனக் கருதிக் கொள்ளப்படும் நாடகம், இந்த விசயத்தைப் பொறுத்தவரையில் மிகவும் இக்கட்டானதொரு நிலையிலேயே உள்ளது.

பரதம் பயின்ற ஒரு பிள்ளையின் அரங்கேற்றம் என்றால், அல்லது நடனக்கல்லூரியொன்றில் பயிலும் மாணவர்களது நிகழ்ச்சியொன்று என்றால் எந்தப் பெரிய மண்டபமும் நிரம்பி விடுகிறது. அங்கு கூடியிருக்கும் பார்வையாளரில் தொண்ணூறு சதவீதத்தினருக்கு பரதத்தின் அரிச்சுவடி கூடத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஆயினும் அவர்கள் அமைதியாக இருந்து அந்த ஆற்றலைப் பார்க்கின்றனர். நடன அரங்கேற்றத்திலோ நடன நிகழ்ச்சிகளிலோ புதியதொன்று அதிகம் இடம் பெறுவதில்லை. பார்வையாளரும் தமக்கு எல்லாம் புரிய வேண்டுமென்று எதிர்பார்ப்பதில்லை.

ஆலயங்களில் நடக்கும் நாதஸ்வரக் கச்சேரிகளின் போதும் மக்கள் கூடி நின்று கேட்பதை நாம் பார்க்கின்றோம். அவர்களில் எத்தனை பேருக்கு கர்நாடக இசையின் இராகங்கள் தெரியும்? தாளபேதங்கள் தெரியும்? ஆயினும் மணிக்கணக்கில் இருந்து கேட்கிறார்கள். இங்கும் எவருக்கும் புரியவேண்டுமென்று பிரச்சினை எழுவதில்லை. இசைக்கு மொழி அவசியமில்லை என நாம் கூறிக்கொள்ளலாம். நல்லதொரு நாடகத்துக்கும் மொழி என்பது தடையாக அமையாது என்றதொரு உண்மையும் உள்ளது. இவ்வுண்மை உண்மையாக இருப்பினும், "புரியவில்லை" என்ற பிரச்சினை நாடகத் துறையிலேயே இன்று எழுந்துள்ளது. எனவே, அதனை அமைதியாக இருந்து சம்பந்தப்பட்ட அனைவரும் சிந்தித்து ஆவன செய்யமுற்படுவது அவசியமாகிறது.

அனைவருக்கும் எல்லாம் புரியக் கூடிய முறையில் எழுத வேண்டும்; படைப்புக்களைத் தயாரிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது முற்றிலும் சரியான ஒன்றா என்றதொரு வினாவும் எழத்தான் செய்கிறது. அது முற்றிலும் சரியான ஒன்றுதான் என நாம் கூறமுற்பட்டால் படைப்பாளியின் படைப்பாக்கச் சுதந்திரத்தில் நாம் தலையிடுவதாக அமையாதா? வாசகனொருவனுக்குத் தான் படிப்பதைத் தெரிவுசெய்யும் சுதந்திரம் இருப்பது போன்று, படைப்பாளிகளுக்குத் தான் விரும்பியதை தான் விரும்பும் முறையில் தான் நிற்க விரும்பும் தளத்தில் நின்று படைக்கச் சுதந்திரம் இருக்கக் கூடாதா? "சுதந்திரம்" என்பது வாசகன் / பார்வையாளன், படைப்பாளி ஆகிய இருசாராரும் எதுவித கட்டுப்பாடும் இன்றி, சமூகப் பொறுப்போ, ஒழுக்கப் பண்புப் பொறுப்போ அற்ற நிலையில் நின்று, தான்தோன்றித் தனமாகச் செயற்படுவதை எந்த வகையிலும் கருத்தில் கொள்வதாக அமையாது. சுயகட்டுப்பாட்டோடு கூடிய பொறுப்புணர்ச்சியின் அடியாக எழும் சுதந்திரத்தையே நாம்

நாகர்கோயில் மகாவித்தியாலயத்தின் மீது நடாத்திய குண்டு வீச்சு நிகழ்வை கண்டித்து தமிழீழ மாணவர்கள் 28-09-95 அன்று நடாத்திய எழுச்சிப்பேரணி. தனிச்சிங்களச் சட்டம், தரப்படுத்தல் என்று தொடர்ந்த ஒடுக்குமுறையாளர்கள், இப்போது தமிழீழ மாணவர்களை அழித்தொழிப்பதில் குறியாக இருக்கிறார்கள். எதிர்காலச் சந்ததியின் வாழ்வை இருண்டதாக்கி விடும் எதிரியின் தந்திரோபாயத்தை கண்டித்தும், மாணவர்கள் மீதான குண்டு வீச்சைக் கண்டித்தும் உலக அரங்கில் நீதி கேட்டும் நிற்கின்ற தமிழீழ மாணவ சமுதாயத்தின் எழுச்சிப்பேரணி.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இங்கு "சுதந்திரம்" எனக் கொள்வது அவசியம். எனவே பொறுப்புணர்ச்சியோடு கூடிய சுதந்திரம் படைப்பை வழங்குபவனுக்கும் நுகர்பவனுக்கும் இருக்க வேண்டும் எனக் கொள்வதில் தவறு இருக்க முடியுமோ?

"ரசனை", "நயப்பு" என்பவற்றை அடிப்படையாக வைத்து படைப்புக்களையும் அவற்றை நயப்பவர்களையும் நாம் தரம் பிரிக்கமுற்படும் போது ஒரு சிக்கல் வந்து விடுகிறது. நிலைக்குத்துக் கோட்டு முறையில் ரசனை, நயப்பு என்பவற்றை நிறுத்தி, உயர்ரசனை, மத்திமரசனை, அடிமட்டரசனை எனப் பாகுபடுத்த முற்படும்போது பிரச்சினை வந்து விடுகிறது. பொருளாதார நிலையில் வைத்து சமூகத்தை உயர் வர்க்கம், மத்தியதரவர்க்கம், அடிநிலைவர்க்கம் என நோக்கியதன் அடியாக வந்த வர்க்க மனோபாவமே, எம்மைக் கலை இலக்கியங்களையும் இவ்வாறு தரம் பிரித்துப்பார்க்க வைத்தது எனக் கொள்ள இடமுண்டு.

"நல்லது", "கெட்டது" என்பது ஒழுக்கப் பண்பின் அடியாக எழும் சிந்தனையாகும். இதனை நாம் நிராகரிக்க முடியாது. எதிலும் நல்லதும் கெட்டதும் இருக்கத்தான் செய்யும். நல்லதை ஏற்றுக் கெட்டதை நிராகரிப்பது அவசியம். இசை, நடனம் என்பவற்றிலும் நல்ல இசை, கெட்ட இசை, நல்ல நடனம், கெட்ட நடனம் என்பன புராதன காலம் முதல் இன்று வரை இருந்து வருகிறது. இங்கு நல்லது என்னும் போது நல்ல உணர்வுகளைத் தூண்டுவனவற்றையும், கெட்டது என்னுமிடத்து, மனிதனில் குடிகொண்டுள்ள தீய குணங்களையும், தீய உணர்ச்சிகளையும், சிந்தனைகளையும் தூண்டவல்லனவற்றையுமே கருத்திற் கொள்கிறோம். எனவே, நல்ல பண்புகளைத் தூண்டுவனவற்றை உயர்ந்தன என்றும் தீய எண்ணங்களைத் தூண்டுவனவற்றைத் தாழ்ந்தவை என்றும் தரம் பிரிக்கிறோம். இவ்வாறு பிரிப்பது பிழையானதொன்றல்ல. மிகச் சரியானதே.

இங்கு நாம் கருத்திற் கொள்ள வேண்டி உள்ளது வேறு ஒரு வகையான தரம் பிரித்தலையாகும். ரசனையை உயர்ந்தது, மத்திமமானது, அடிமட்டமானது எனப் பிரித்துப் பார்ப்பது நியாயமானதொன்றா என நோக்குவது அவசியம்.

**ஒடுக்கப்படும் எமது மக்களின் சுபீட்சத்திற்காக போராடி வரும் எமது தேசிய விடுதலை இயக்கத்திற்கு, சர்வதேசத் தமிழ்ச்சமூகம் தொடர்ந்தும் தனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குமென உறுதியாக நம்புகின்றேன்.**

**- தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்.**

ரசனை, நயப்பு என்பன பரிச்சயத்தால், பழக்கத்தால், சூழலால் ஏற்படுபவை. நாம் வாழும் சூழல் எம்மைச் சிலவற்றுக்குத் திறந்து விடுகிறது. அவற்றின் மத்தியில் வாழும் நாம் அவற்றுக்குப் பழக்கப்பட்டு விடுகிறோம். பழக்கப்பட்டவை என்பதால் அவை எம்மைத் தொடர்ந்து கவர்கின்றன. அவற்றையே நாம் நயக்கின்றோம். தாயின் உணவுதான் பிள்ளைக்கு என்றைக்கும் சுவை மிக்கது. பின்னர் படிப்படியாகவே தாரத்தின் பாகத்தைச் சுவைக்கப் பழகிக் கொள்கிறோம். இதில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்பதல்ல பிரச்சினை; இரண்டும் இரு வேறு வகையினவே அன்றித் தரத்தினவல்ல.

கலை இலக்கிய ரசனையும் இவ்வாறே. எனவேதான் ரசனையை நிலைக்குத்துக் கோட்டுமுறையில் வைத்து உயர்ந்தது, மத்திமம், தாழ்ந்தது என நோக்காது, அதனைக் கிடைக் கோட்டு நிலையில் வைத்து - அதாவது ஒன்றின் பக்கத்தில் மற்றையதை சமநிலையில் வைத்து, நோக்குவது பிரச்சினையைத் தவிர்க்க உதவக் கூடும். ஒவ்வொரு ரசனையும் ஒவ்வொரு வகையினது எனக் கொள்வதே மேலானது. ஒவ்வொரு வகையும் அவை அவற்றை நயப்பவர்தம் தேவைகளை நிறைவு செய்து கொண்டே உள்ளன. இது கலை இலக்கியங்களுக்கு மட்டும் பிரத்தியேகமாக அணையும் ஒன்றல்ல. மனிதனது அனைத்து நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தி நிற்கும். நட்பு, உறவு என மனித வாழ்வின் சகல துறைகளையும் இது உள்ளடக்கி நிற்கும்.

**ஓவியக்கலை ஒன்று தான் பிரபஞ்ச மொழி. அதன் உச்ச வரம்பு என்று ஏதேனும் இருக்குமாகில், அது மனித பௌதீக மற்றும் ஆத்மார்த்த அனுபவங்களின் உச்சவரம்பாகத்தான் இருக்க வேண்டும். அது தன்னுள்ளே இயற்கையின் எல்லா உருவங்களையும் சேர்த்துக் கொள்ளவும் அவற்றின் அடையாளமான பெயர்களை நீக்கிக் கொள்ளவும் இயல்புடையதாயிருக்கிறது.**

**- விட்டல் ராவ்**

மேற்கண்டவற்றை அடித்தளமாக வைத்தே நாம் எமது நாடகங்களையும் நோக்க வேண்டியுள்ளது. "புரியாமை" என்பது இன்று நேற்றுத் தோன்றிய ஒரு புதுமை அல்ல; எமக்கு மட்டும் தோன்றியுள்ளதொரு பிரச்சினையும் அல்ல; இது ஆதியும் அந்தமும் இல்லாதொரு பெரும் பிரச்சினை. இதனைப் போக்கிப் புரிதலை ஏற்படுத்துவதற்காக எல்லாக் காலங்களிலும் எல்லா மக்கள் கூட்டத்தினரும் பலவாறு முயன்று வந்துள்ளனர். அவ்வாறு முயன்ற விடத்தும் "நூற்றுக்கு நூறு" என அனைவரும் புரிந்து கொண்டார்களா என்பது ஐயத்துக்குரிய ஒன்றே.

கிரேக்கத்தின் புராதன நாடகங்கள் முதல், சீன, ஐப்பானிய, இந்திய நாடகங்கள் என்பனவும், புரியாமையைப் போக்கப் பலவாறு முனைந்து வந்துள்ளன. இரண்டொரு உதாரணங்களை நோக்குவோமாயின்;

1. ஐதிகங்கள், புராணங்கள் என்பனவே நாடகங்களின் கதையாகத் தெரிவு செய்யப்பட்டன. இவை மக்களுக்கு நன்கு பரிச்சயமான கதைகளாக இருந்தன. 2. பாத்திரங்கள் தம்மைத் தாம் தன்மையில் அல்லது படர்க்கையில் அறிமுகம் செய்தல். சீன, ஐப்பானிய நாடகங்களில் இந்த அறிமுகம் விரிவான ஒன்றாகவும், பாத்திரம் மேடைக்கு வரும் ஒவ்வொரு வேளையும் திரும்பத் திரும்பக் கூறப்படுவதாகவும் இருந்தது. 3. விதூஷகன், கோமாளி, கட்டியக்காரன் போன்ற பாத்திரங்கள் மூலமும் மக்கள் புரியும் மொழியில் பேசுவதன் மூலமும் திரும்பத் திரும்ப கூறுவதன் மூலமும் விளக்கம் ஏற்படுத்தப்பட்டது. 4. கூட்டுப்பாடல், பின்பாட்டுக்காரர் என்பன மூலம் நடந்ததையும், நடப்பதையும் பாடல் மூலம் விளக்குதல். 5. பாடல் மூலம் சொன்னவற்றைச் சுருக்கமாக உரைநடைப் பாங்கிலமைந்த எளிமையான மொழியில் ஓதல் பாங்கில் மொழிதல்.

இன்று எமது சமகால நாடகங்கள் பல மேற்கண்ட உத்திகளில் சிலவற்றைக் கையாளுவதைக் காணலாம். இருப்பினும் புரியாமை என்பது பூதாகரமானதாகப் பேசப்படுகிறது. புரியாமைக்குக் காரணம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இன்று உள்ள நாடகங்கள் கூறும் கதைகள் புதியனவாக இருப்பது எனக் கொள்ள வாய்ப்புண்டு. அத்தோடு பல நாடகங்கள் நேர்கோட்டு முறைமையில் அமைந்ததொரு கதையைக் கொண்டிருப்பதில்லை.

மேலும், சில நாடகங்கள் உடல் "மொழியை"யும், காண்பியங்களூடு வெளிப்படுத்தப்படும் "மொழியையும்"யும், காட்சிப்படிமங்களையும், கருத்து நிலைப்பட்ட கோலங்களையும் அதிக அளவில் பயன்படுத்தி, செவிப்புலன் சார்ந்த மொழியைச் சிறிதளவு குறைந்துள்ளன. வேறு சில நாடகங்கள் பேச்சு மொழியைப் போதியளவு பயன்படுத்துகின்றன. எனினும் அவை கூற முற்படும் "கதைகள்" எமக்குப் பரிச்சயமற்றவையாக இருப்பதால் அவையும் புரியாமைப் பிரச்சினையுள் அகப்பட்டு விடுகின்றன.

நாம் பார்க்கும், படிக்கும் அனைத்தும் எமக்குப் புரிய வேண்டும் என்பது மிக மிக இன்றியமையாத ஒன்றே. விளக்கமாகப் புரிந்து கொள்வதே தொடர்பாடலின் பயன். இருப்பினும் எல்லாம் புரிந்த நிலையில்தான் நாம் கலை, இலக்கியங்களை நயக்கிறோமா? வெள்ளத்தனைய மலர் நீட்டம் போன்று எமது அறிவு, அனுபவம், ஆர்வம், பரிச்சயம் என்பவற்றுக்கு ஏற்ற வகையிலேயே நாம் ஒன்றை நயக்க முடியும். எமக்குப் புரிந்து விட்டது என்று நாம் நினைத்துக் கொள்ளும் அனைத்தும் எமக்கு உண்மையில் புரிந்துதான் உள்ளதா? புரிதலுக்கும் விளக்கத்துக்கும் எல்லை இருக்கிறதா? நல்லதொரு படைப்பு, ஆழ அகலம் அறிய முடியாத பிரபஞ்சத்தைப் போன்றதாக இருந்து கொண்டு அதனை நாடுந்தோறும் நவநவமான பொருளையும் அழகையும் தந்து நிற்கும் என்பார்களே; நவில் தொறும் நூல் நயம் என்பார்களே; பயில் தொறும் பண்புடையாளர் நட்பு என்பார்களே.

மேலும், அனைவரும் ஒரு படைப்பினூடே ஒன்றைத்தான் புரிந்து கொள்கிறார்களா? "நன்றாக இருக்கிறது" என்று நாலுபேர் சொன்னால், அவர்கள் ஒவ்வொருத்தரும் ஒரே அளவில்தான் புரிந்து கொண்டிருக்கிறார்கள் எனக் கொள்ள முடியுமா?

அத்தோடு, படைப்பாளி சொல்ல நினைத்ததனைத்தையும் நுகர்வோர் புரிந்து கொண்டு விடுகிறார்களா? படைப்பாளி நினைத்தவை கூட நுகரவோர் தம் முன் வந்து நிற்பினும் நிற்கும் என்பது, சிறந்த படைப்புக்கள் விளைவிக்கும் மாயவித்தைகளில் ஒன்றல்லவா? நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைப்பது போன்று, படைப்பாளிகள் ஒன்றை நினைக்க நுகர்வோர் வேறொன்றை நினைப்பதில்லையா? கலை இலக்கியத் தொடர்பாடலில் இத்தனையும் இருப்பது வியப்புக்குரிய ஒன்றல்ல. இவை அத்தனையும் இருப்பினும், தனது படைப்பு, படைக்கப்படும் மக்கள் கூட்டத்தால் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதையே எந்தவொரு படைப்பாளியும் விரும்புவான். தமது படைப்பு புரிந்து கொள்ளலுக்கு அப்பாற்பட்ட தளத்தில் நிற்க வேண்டும் என்று எந்தவொரு கலைஞனும் கருதமாட்டான்.

எனவே, "புரியாமல் படைக்கிறார்கள்" என்று கூறும் போது "புரியாது இருக்கவேண்டும்" என்ற எண்ணத்தோடு படைக்கிறார்கள் என்ற பொருள்பட நாம் கூறி விடக் கூடாது. அவ்வாறு கூறுவது, கூறுவோருக்கும் கூறப்படுவோருக்கும் கூடாது. கலை உலகில் நிலவ வேண்டிய சுவாத்தியத்தை, சூழலை அது கெடுத்து விடும். பகைமைப் புழுதியை அள்ளி இறைத்து விடும். உயர்மூச்சை அடைத்து விடும். படைப்பாளருக்கு இருக்க வேண்டியது போன்று பொறுப்பு, நுகர்வோருக்கும், 'விமர்சகர்களுக்கும்' கூட உண்டு.

கீழைத்தேய நாடகம் ஆடலையும் பாடலையும் 'கதை' கூறும் பாங்கையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் கட்புலனுக்கான கவர்ச்சிகள் அதிகம். யதார்த்தமுறைமையோடு, மேலைத்தேய நாடகம் உரைநடையில் அமைந்த வார்த்தைகள் மேலாதிக்கம் செலுத்தும் பண்பினைக் கொண்டு வளர்ந்தது. பின்னர் அங்கு யதார்த்த விரோதப் பாங்குகள் தோற்றம் பெற்று வளர்ந்த போதிலும் வார்த்தையின் ஆதிக்கம் அவற்றில் பெருமளவில் குறையவில்லை. மேலைத்தேயக் கல்வி, பண்பாடு என்பவற்றுடன் எமக்கு ஏற்பட்டுவிட்ட நீண்ட, நெருக்கமான பயில்வும் பரிச்சயமும் காரணமாக நாம், எம்மையறியாமலேயே அவற்றின் அதிகமான செல்வாக்குக்கு ஆளாகி விட்டோம்.

## பிரிவும் துயரும்!

**- எஸ். உமாஜிப்ரான்**

இதயம் கனக்க
விழிகள் பனிக்க
பிரிவை நொந்து
பரிதவிக்கிறேன்
என்
அன்பின் அழுத்தம்
அவளில் இருந்து
விலகிய கணத்தை
நினைந்து நினைந்து
நெடுமூச்செறிகிறேன்...

கண்ணீர் மல்க
காதலைக் கொன்று
கையசைத்தவள் செல்கையில்...
வார்த்தைகளற்று....
ஏதும் செய்யவகையற்று....
முடமாய்
விறைத்து நின்றதை,
எனக்கு விதிக்கப்பட்டது
இதுவென்று
தேற்றிக்கொள்ள முடியவில்லை.

அறுக்க முடியாத
தொப்புள் கொடி உறவாய்
நிழலெனத் தொடரும்....
கொல்லப்பட்ட
காதலின் எச்சங்கள்
என் இதயத்தைக் குத்திக்
கிழிக்கின்றன...
காதலற்ற தனிமையில்
வெறுப்பூட்டும்
இருப்பின் வெறுமையில்
ஊசியாய் உறுத்தும்
அவள் நினைவுகளின்
முற்றுகைக்கிடையில்
மூச்சுத் திணற நசியுண்டு
அவஸ்தையுறுகின்றேன்...

உதறி எறியும்
அவள் நினைவுகள்
ஒவ்வொன்றும்
சுவர் மீது
எறியப்பட்ட பந்தாய்
என்னையே வந்தடைகின்றன.

அவள் நினைவுகளின்
தளையிலிருந்து விடுபடும்
என் முயற்சிகள்
முனை முறிந்து
மழுங்கிப் போகின்றன.

எப்படி மீளுவேனோ
இத் துயர்நிறை
புதைசேற்றிலிருந்து....?
எதுவரை தொடருமோ
இத் துயர்நிறை நாட்கள்....!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


மேலைத்தேய கலை இலக்கியங்களின் பயில்வு எமக்கு வேண்டாம் என இங்கு கூற முற்படவில்லை. அவை எமது கழுத்தை நெரித்துவிட நாம் அனுமதிக்கக் கூடாது என்பதே எனது நோக்கம். மேலைத்தேய நாடகங்களைப் போன்று அமையா தவற்றை ஏற்கத் தயங்கும் நுகர்வோரும் விமர்சகரும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். மேலைத்தேய கோட்பாடுகள், வடிவங்கள், வகைகள் என்பவற்றை அடிப்படையாக வைத்தே அவர்கள் தமது கருத்துக்களை வெளியிடுகின்றனர். சிலர் தாம் செய்வதை அறிந்து செய்கிறார்கள், சிலர் தம்மை அறியாது மேலைப்புலச் செல்வாக்குக் குட்பட்டு நின்று கருத்துக் கூறுகிறார்கள். இவ்வாறு நாம் நடந்து கொள்வதால் நமது கலை அதன் சுயத்தோடு, தனித்துவத்தோடு வளரமுடியாது சங்கடப்படும்.

சில புதிய முயற்சிகளைப் பார்த்து "இவை நாடகங்களல்ல" என்று கூறும் வன்போக்கு இன்று தோன்றியதல்ல, ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே இப்போக்கு தோற்றம் பெற்று விட்டது. இருப்பினும் அன்றைய நாடகங்கள் கண்டங்களின் மத்தியில் நின்று நிலைத்து, இன்று அவ்வடிவங்களே பரவலாகியுள்ளன. அவை ஏறத்தாழ நியம அரங்கின் வடிவங்களாகி விட்டன. அந்த நிலையில், பின்னர் வேறு சில புதிய வடிவங்கள் தோற்றம்பெற முயலும் வேளையில், "இவை நாடகங்களல்ல" என்ற வன்மமும், புரியவில்லை என்ற வாதமும் மேலெழுந்துள்ளன. ஆழ்மனநிலையில் நாம் அனைவரும் பழமை பேணும் பண்புடைய வைதிகவாதிகள் போலும். நேற்றைய நவவேட்கை வாதிகள் இன்றைய வைதிகவாதிகளாகவும், இன்றைய நவவேட்கை வாதிகள் நாளைய வைதிகவாதிகளாகவும் மாறிவிடுவது, எமது சமூகத்தின் இயல்பு போலும்.

பழையனவற்றைத் தூற்றிப் புதியனவற்றைப் போற்ற வேண்டுமென்ற கட்டாயம் இருக்க வேண்டியதில்லை. ஆயினும் மாற்றங்களைக் கண்டு திகிலடையத் தேவையில்லை. மாற்றங்களை வளர்ச்சிகளாக வளர வழி வகுப்பது நுகர்வோரதும் விமர்சகர்களதும் பணியாகும். தாராளமனப் பான்மை கொண்டதொரு தந்தை போல இருந்து புதிய கலை இலக்கிய முயற்சிகளை வழி நடத்துவது மேற்கூறிய இருசாராரதும் கடமையாகும். அது இயலாதவிடத்து கடும் கண்டிப்பு நிறைந்ததொரு தந்தை போலேனும் அவர்கள் இருக்க முயற்சிப்பது அவசியம். இங்கு "தந்தையை" உதாரணமாகக் கொள்ளக் காரணம், எவ்வளவு கெட்ட ஒருவராக இருப்பினும் தந்தை ஒரு போதும் தன் பிள்ளை அழிந்து போகவேண்டுமென நினைக்க முடியாது. தனயனின் நலனில் அக்கறை இருப்பதாலேயே அவர் அளவுக்கு அதிகம் கண்டிப்பவராக இருப்பார். தந்தையே ஆயினும், அளவுக்கு அதிகம் கண்டனமும், கிண்டலும், கேலியும், கண்டிப்பும் வெறுப்பும் இருப்பின் பிள்ளையின் வளர்ச்சி "தறுக்கணித்துப்" போய்விடும். எனவே "தந்தை" உதாரணத்தின் குறிப்புணர்ந்து நுகர்வோரும் விமர்சகர்களும் நடந்து கொள்வது அனைவருக்கும் நலம் பயக்கும்.

புதிய சிந்தனையும் புதிய நோக்குகளும் கொண்டு புதியன படைக்க முற்படுகிறவர்கள், எமது பண்பாடு, பாரம்பரியம் என்பவற்றிலிருந்து பல உத்திகளையும் சம்பவங்களையும், கதைகளையும், காட்சிப்படிமங்களையும் பெற்றுக்கொள்வது போன்று எமது பண்பாட்டிலும் பாரம்பரியச் சிந்தனையிலும் வேரூன்றிப் பதிந்து விட்ட சில "விழுமியங்களை"க் கையாள முற்படுகையில் மிகுந்த கவனத்தோடு நடந்து கொள்ள வேண்டியுள்ளது. சிறிதளவு கவனக் குறைவு ஏற்படும் பட்சத்திலும், நுகர்வோரும் விமர்சகர்களும் புண்பட்டு விடக்கூடும். வெகுண்டெழக் கூடும்.

உளப்பிணி தீர்க்கும் மருத்துவரைப் போலவே சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த விளையும் கலைஞர்களும் நடந்து கொள்ளவேண்டும். வயிற்றில் நோவுடன் வரும் நோயாளியைப் பரிசோதித்து விட்டு, வைத்தியர் அவனைப் பார்த்து "உனக்கு வயிற்றில் கட்டி வளர்கிறது. சத்திரசிகிச்சை செய்தால் நல்லது" என்று நேரடியாகவே கூறலாம். ஆனால் மனப்பிறழ்வுக்கான அறிகுறிகளோடு வரும் ஒரு நோயாளியைப் பரிசோதிக்கும் உளமருத்துவர், அவனை நோக்கி "உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது" என்று மிகக்கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்திக் கூறுவது சரியா? கூறினால் மருத்துவர் அடுத்தகணம் உயிருடன் இருப்பாரா என்பதே சந்தேகமாகி விடும்.

பழமைப் பண்புபால் எம்மை அறியாது நாட்டங்கொண்டுள்ள "முற்போக்குவாதி"களாகிய நாம் "கட்புலநுகர்ச்சி" அறிவு குறைந்தவர்களாகவே உள்ளோம். எழுத்தறிவும், "செவிப்புலநுகர்ச்சி அறிவும்" எமக்கு உண்டு. "தாலி அவள் கழுத்தில் தூக்குக் கயிறாய் தொங்கியது" என்றதொரு வாக்கியத்தைக் கேட்டு நாம் திகிலடைவதில்லை. ஆனால், மேடையில் அவ் வரிகள் காட்சிப் படிமங்களாகக் காட்டப்படும் போது நாம் திகைத்து விடுகிறோம். ஆத்திரப்படுகிறோம். எம்மைச் சொல்லிக் குற்றமில்லை. எனவே, இத்தகையதொரு கருத்துப்படிமத்தைக் காட்சிப்படிமமாக்க முனையும் போது, எமது திகைப்பையும், எதிர்ப்பையும் குறைக்கக் கூடிய முறையில் அவசியமான உத்திகளைக் கையாள்வது அவசியம். இல்லையேல் நாம் நோயாளியை எமது எதிரியாக்கி விடுவோம். எம்மீது உள்ள நம்பிக்கையை அவன் இழந்துவிடுவான். இழந்த பின்னர், நாம் கூறும் எதுவும் அவனுக்குப் பிடிக்காது.

பிணி தீருவதையே நோயாளியும் விரும்புவான், வைத்தியனும் விரும்புவான், சமூகமும் விரும்பும். நோயைக் கூறுவது மட்டுமல்ல, அதனை நோயாளிக்குக் கூறும் முறைமையும், நோயைத் தீர்க்கும் பொறுப்பும் வைத்தியருக்கு உண்டு. எனவே, இந்த விஷயத்தில் நோயாளியையும், உற்றார் உறவினரையும் விட வைத்தியருக்கே பொறுப்பு அதிகம். மற்றும் இரு சாராருக்கும் பொறுப்பு எதுவுமே இல்லை என்பது இதன் அர்த்தமாகாது. நோயாளி ஒத்துழைத்தால் வைத்தியனது பணி சுலபமாகும். □

**கொடுங்கோலாட்சிக்கு எதிராகக் கலகம் செய்யும் உரிமை மிகப் பழங்காலத்திலிருந்து இன்று வரையிலும் பல்வேறு மதக் கோட்பாடுகளையும், கருத்துக்களையும், தத்துவங்களையும் மேற்கொண்ட மனிதர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே இருந்து வருகிறது.**

**- பிடல் காஸ்ட்ரோ**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வீடியோப்பட மதிப்பீடு

# முகங்கள்

ஈழத்தின் திரைப்படம் என்பது கலை சார்ந்தது மட்டுமல்ல உண்மைகளின் வெளிப்பாடு ஆகும். அபத்தங்களை நிராகரிப்பதும் ஆகும். உயர்கலையை புத்தாக்கம் செய்வதுமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக "தமிழில் திரைப்படக் கலையை" புனர்நிர்மாணம் செய்வதும் ஆகும். இந்தப் பின்னணிகளிலேயே "முகங்கள்" என்னுள் பார்வை கொள்கின்றன.

ஏற்கனவே "காற்றுவெளி...." என்ற திரைப்படத்தை வழங்கிய ஞானரதன் 'முகங்கள்' படத்தின் கதை, உரையாடல், நெறியாள்கை ஆகியவற்றை செய்துள்ளார். கதையை "இயற்கைவாதப் பண்புடன்" எழுதியது மாதிரி, படத்தையும் அவ்வாறே இயக்கியுள்ளார் ஞானரதன். கவிதை நடையில் கதை சொல்வது போல் கதை நகர்கிறது.

சில இடங்களில் சில காட்சிகள் உயர்சித்திரங்களுடன் போட்டி இடுகின்றன. பொதுவாக சித்திரத்தின் இடத்தை புகைப்படம் பிடித்து விட்டது என்பர். ஆனால் இங்கு சில, ஓவியத்தின் ஆற்றலை நிலைகொள்ளச் செய்கின்றன.

படப்பிடிப்பாளர் சிறீராம், ஞானரதனின் வலதுகையாக இயங்கியுள்ளார். ஆரம்பப் புலம்பெயருதல் வன்னிக்காட்சிகளில் படப்பிடிப்பாளர் பங்கு மிகப் பெரியது. கதையின் தேவைக்கேற்ப கமரா இயல்பாக கையாளப்பட்டுள்ளது. இன்று படப்பிடிப்பாளரைப் படப்பிடிப்பு இயக்குனர் என்று ஏன் சொல்கிறார்கள் என்பதை இப்படம் காட்டுகிறது. நடிகர்கள் தேர்வு மிகப் பொருத்தமாக இருப்பதுடன் அவர்கள் தத்தம் பணியை மிகவும் பொறுப்பாக - தொழில்முறைக் கலைஞர்கள் போல் - செய்திருகின்றார்கள். இரத்தினவடிவேல் ஐயா அவர்கள் இத்தகைய பாத்திரங்களுக்கென்றே படைக்கப்பட்டவர் போல இயல்பாக நடிக்கிறார். அகிலாவாக - நடித்த சகுந்தலா அபார நடிப்பாற்றல் கொண்டவர். அகதியென்ற சோகம், வாழ்க்கைப்படகை ஒட்ட வேண்டும் என்று தன் உணர்ச்சிகளை உள்ளடக்கி, முகத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரை காட்டும் இறுக்கம், கணவன் முதலில் பேசிவிட்டு பிறகு மன்னிப்பு கேட்கும் போது குமுறிக் குலுங்கி அழுவதற்கும், குழந்தையைப் பறிகொடுத்துவிட்டு அழும்போது காட்டும் வேறுபாடுகள் இவற்றோடு படம் முடிந்தும் நெஞ்சம் கனக்க வெளியேற, அந்த அகன்ற விழியில் எழுந்து மறையும் சோகச் சூழலே காரணம் எனலாம். அகிலாவின் கணவன் சந்திரன் அவளுடன் போட்டி போட்டு நடிக்கிறார். இவருக்குத்தான் உரையாடல்கள் அதிகம். சேர்க்கை இல்லாமல் இயல்பாகப் பேசுகிறார். மனைவியைப் பேசிவிட்டு, வீட்டுக்கு வெளியே வந்து, பிறகு வீடு திரும்பி மனைவியிடம் மன்னிப்புக் கேட்கும் போது நடிப்பை எப்படி அநாயாசமாக வெளியிடுகிறார். திரைப்படம் ஆக்க பலரும் தயங்கும் ஒரு கதையை எல்லோரும் பார்த்து ரசிக்கும்படி செய்பவன் படத் தொகுப்பாளன். அதிலும் புதிய நடிகர்களை வைத்து எடுத்த காட்சிகளை Shots, frames ஆகப் பிரித்து சம்பவங்களின் ஒழுங்கு மாறாமல் பார்வையாளரின் சிந்தனை ஒன்றிப்பு சிதறாமல் படத்தொகுப்பு செய்வது கூரிய கத்தி முனை நடனம். இந்த முயற்சியில் பெருவெற்றி ஈட்டி இருப்பவர் பிரதீப் என்ற இளைஞர் என்பதனை அறியும் போது எனது விழிகள் வியப்பால் விரிந்தன. அதுமட்டுமல்ல தயாரிப்புப் பொறுப்பையும் இவரே ஏற்றுக் கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இசையை "முரளி" வழங்கி இருக்கிறார். தமிழீழப் படங்களில் இசை என்பது பின்னணியில் Rerecording தான் முக்கியத்துவம் பெரிதும் வகிக்கின்றது. கதாபாத்திரங்களின் செயற்படு சூழல், கட்டம், பின்னணிக்கேற்ற இசை. பார்வையாளனை காட்சியுடன் ஒன்றவைக்கும் முரளியின் இசையில் நல்ல எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றன.

சரி, குறைகளே இல்லையா? உண்டு. அவற்றுள் பல தொழில்நுட்பக் குறைபாடுகள், மின்சாரம் சார்ந்தவை. சில முக்கிய கருவிகள் இல்லாமை. எல்லாவற்றிற்கும் மேலாக எங்களிடம் Tele Play, Tele Drama, Tele Cinema, என்ற வேறுபாடுகளைக் காட்டக் கூடியவாறு நவீன தொழில்நுட்ப சாதனங்களோ குறைவு. வீடியோ கமராவினால்தான் பெரிய படங்களைப் பிடிக்கின்றோம். சிங்கள அல்லது இந்திய அல்லது மேலைத்தேய தொலைக்காட்சிப் படங்கள் பெரும்பாலும் 32 எம் எம் - இல் எடுக்கப்பட்டு (Tele-ல்) காட்டப்படுகின்றன. அதனால்தான் அவற்றை Blow up செய்து பெரிய திரைகளில் றன் 70 எம். எம் - இல் கூடக் காட்ட முடிகிறது.

எங்களது அறிவை, ஆற்றலை வளர்க்கும் முயற்சிகளே இவை. இவை விரிவடையும் போது - எமது படைப்புக்கள் சிறக்கும். Feature, Documentary, News ஆகிய கலப்புக்கள் பல இடங்களில் எமது கலைத்தடத்தை மங்கச் செய்தாலும், இக்குறைபாடுகள் நாளடைவில் நீங்கக் கூடியன.

- செம்பியன் செல்வன்

பாடல் ஒலிப்பேழை

# நெருப்பு நிலவுகள்




இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தாயக மண்மீட்புப் போராட்டத்தில் அனைவரும் ஒன்று திரண்டு வடம் பிடிக்க வேண்டிய ஒரு சூழ்நிலையில், "படையணி நகரும் பெண்கள் படையணி நகரும்" என்ற அணிவகுப்பு நகர்வில் ஒரு கட்டாய தேவையை முன்னிட்டு ஒத்துழைப்பு நல்கி உதவவேண்டிய வேளையில் வெறும் காட்சிப் பொருளாக, கற்பனைக்குகந்தவர்களாக, வர்ணனைக்குரியவர்களாக மட்டும் இருக்கமுடியாதபடி காலமாறுதல்களும், காலத்தின் தேவைகளும் எம்முன் நிற்கையில், தமிழீழப் பெண்கள் குனிந்த தலைகளை நிமிர்த்தி நெருப்பு நிலவுகளாக, நிமிர்ந்த புயல்களாக வெற்றி மகளிராகப் புறப்பட்ட, புறப்பட்டுக்கொண்டிருக்கின்ற, புறப்படவேண்டிய நிலையைச் சித்தரிக்க வேண்டிய தேவையே "நெருப்பு நிலவுகளின்" வெளியீடு என்று கூறலாம். விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் இரண்டாவது வெளியீடாகவும் கலை பண்பாட்டுக் கழக மகளிர் பிரிவின் முதலாவது உருவாக்கமாகவும் வெளிவந்திருக்கிறது. விரைவில் இந்த ஒலி இழை நாடா இசைத்தட்டு உருப்பெற்று இங்கும் எம் செவிகளிலும் ஒலிக்கும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்








## விரைவில் வெளிவர இருக்கும் இசைத்தட்டுக்கள்

★'விடுதலை முரசம்' (நாதஸ்வர இசை - கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி ★'முன்னேறிப் பாய்வது என்ன அம்மா', 'நெருப்பு நிலவுகள்' ★'இசைபாடும் திரிகோணம்' ★'தமிழீழத் திரைப்படப் பாடல்கள்' ஆகியவை விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளையாலும் ★'தாயக மண்ணின் காற்று' (வாத்திய இசை) விடுதலைப் புலிகள் பிரித்தானியக் கிளையாலும் இம் மாதம் வெளியிடப்பட உள்ளன.

இசைத் தட்டு

# மாவீரர் புகழ் பாடுவோம்

உருவாக்கம்.
விடுதலைப்புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்

தேசத்துக்காக தம்வாழ்வை அர்ப்பணித்தவர்களின் வாழ்வைப் பாடுகிற பாடல்கள். காட்டிலும், மேட்டிலும் திரிந்து தாயின் விலங்கை உடைத்தவர்கள். எங்களின் மண்ணில் எழுந்த இளைய ஞாயிறுகளைப் போற்றிப்பாடுகிற இந்தப் பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு மாவீரர் நாள் 95-ல் வெளிவருகிறது. இவ் இசைத்தட்டு எழுப்புகிற ராகம் மண்ணுக்காக வீரச் சாவடைந்த மாவீரர்களை எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாது காக்கும்.

# விழித்தெழுவோம்

வெளியீடு:
விடுதலைப்புலிகள் மகளிர் படையணி

இந்த இசைத் தட்டு ஒரு போர் முழக்கத்தை, விடுதலைக்கான எழுச்சியை தோற்றுவிக்கும் பாடல்களோடு வெளிவந்திருக்கிறது. புலம் பெயர்ந்த நாடுகள் எங்கணும் பரந்து வாழும் தமிழீழ மக்களிடையே இப் பாடல்கள் ஏற்கனவே அறியப்பட்டதாய் இருந்திருந்தாலும், இப்பாடல்கள் இசைத்தட்டு வடிவத்தில் வருவது மகிழ்ச்சியானதே.

'எத்தனை எத்தனை யுகங்கள் அடிமையாய்க் கிடந்தோம்' என எழும் பாடல் தடைகளைத் தகர்க்கும் எண்ணத்தை விதைக்கிறது.

'புதுயுகம் ஒன்று படைத்திடவேண்டும் புறப்பட்டு வா தோழி பூவாய் நீயும் இருந்தது போதும்' என ஒலிக்கும் பாடல், அதனைப் பாடுகிற தன்மை, இசை யாவும் சிறப்பாக அமைந்திருக்கிறது. கேட்கும் ஒவ்வொருவரிடத்திலும் அவ் இசைத் தட்டு ஒரு செய்தியைச் சொல்லுகிறது.

'நெருப்பென நிமிர்ந்திட துணிந்திட்டோம்' என்கிற பாடலின் அடி மூலம், இன்றைய தமிழீழப் பெண்கள் கொண்டு நிற்கின்ற எழுச்சியின் வடிவத்தை விளங்கிக் கொள்ளலாம். ஒடுக்கப்படும் பெண்களின் விடுதலைப் போருக்கான முரசமாக ஒவ்வொரு வீடுகளிலும் இப் பாடல்கள் ஒலிக்கும்.

'படையணி நகரும் எங்கள் படையணி நகரும்' எனும் பாடலை, போரெனில் பூரித்து எழும் தன்மையும், விடுதலைக்கான சிறகசைப்பும், ஆகர்சிப்பும், மகிழ்ச்சியும் கொண்டு பெண்கள் கூட்டாக சேர்ந்து பாடியிருக்கிறார்கள். அந்த இசைத் தட்டு எழுப்புகிற ஆத்ம ராகம் விடிந்திடக் கூவும் குயில்களின் பாடல்களாக என்றும் செவிகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சுவடுகளைத் தொடருதல்......

திடீரெனக் கேட்ட துப்பாக்கிச் சத்தத்தினால் நிலைகுலைந்த அக் குழந்தை, தாயை நோக்கி வெருண்டடித்து ஓடுகின்றது.

அவள் தன் மகளைத் தூக்கி முத்தமிடுகின்றாள். "அக்கா" என்ற சத்தம் கேட்டுத் திரும்புகிறாள். அது அவள் தம்பி சந்திரன். தம்பியைக் கண்ட ஆனந்தத்தில் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றாள். ஏனெனில் 86-ம் ஆண்டு காணாமல் போனவன் இன்றுதான் வந்துள்ளான். அதுவும் எப்படி வந்துள்ளான் தெரியுமா? வரிப்புலி சீருடயில், கையில் துவக்குடன், கழுத்தில் நஞ்சுடன்.

சாந்தா மாமன்காரனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

சந்திராவைப் பார்த்து, "ஏன் சாந்தா வெருண்டு போய் இருக்கிறாள்?" என்று கேட்க, "அது இப்ப கொஞ்சம் முந்தி ஐஞ்சாறு துவக்குச் சத்தம் கேட்டது. அது தானெடா" என்கிறாள் சந்திரா.

அவன் அவளைத் தூக்கி, "சாந்தாக் குட்டிக்கு மாமா என்ன வாங்கித் தாறது?" என்று கேட்க, அவள், "எனக்கு குட்டித் துவக்கு வாங்கித் தாங்கோ ஆமியைச் சுட" என்கிறாள்.

அதற்கு சந்திரன் "ஏன் ஆமியைச் சுடவேணும்? அவன் பாவமெல்லோ!" என்று சொல்ல, சாந்தா குறுக்கிட்டு, "அவன் என்ர அப்பாவைச் சுட்டவன்" என்று கூறுகிறாள்.

அதற்குச் சந்திரன், "இனி வரும் பொழுது வாங்கி வாறன்" எனக் கூறிவிட்டு, "அக்கா போட்டுவாறன். சாந்தாக் குட்டி போட்டு வாறன்" என்று போய்விட்டான்.

அன்றிரவு சாந்தா சாப்பிடவில்லை. மாமா வாங்கி வாறனெண்ட துவக்கின் கதைதான். அவளை நித்திரையாக்க சந்திரா படாதபாடு பட்டாள்.

★★★

ஆண்டுகள் உருண்டோடின. சாந்தா வளர்ந்துவிட்டாள். அவளுக்கு இப்போ உலகம் புரியத் தொடங்கிவிட்டது.

மாமா சொல்லிவிட்டுப் போன மாதிரி துவக்கு வரவில்லை; மாமாவும் வரவில்லை.

சாந்தா முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் 8-ம் வகுப்பு படிக்கிறாள். அவளின் நண்பி சத்தியகலா. இருவரும் இணைபிரியாதவர்கள்.

அன்று பாடசாலைக்கு வந்த சத்தியகலா முகத்தைத் தொங்கப் போட்ட வண்ணம் இருந்தாள். இதைப் பார்த்த சாந்தா, "ஏன் சத்தியா இப்படி ஒரு மாதிரி இருக்கிறாய்?" என்று கேட்க,

அதற்கு அவள், "மட்டக்களப்பு மோதலில் இரு அண்ணாக்கள் வீரமரணமாம். அதுதான் பயமாயிருக்கு. என்ர அண்ணாவும் அங்கதான் நிற்கிறார் என்று நேற்று வந்த அண்ணாக்கள் சொன்னவை" என்று சொல்லி அழுகிறாள்.

அதற்கு சாந்தா "அழாதையடி. என்ர மாமா துவக்கு வாங்கி வாறனெண்டு சொல்லிப் போனவர். அன்று தொடக்கம் இன்னும் வரவில்லை."

அன்று இடைவேளை நேரத்துடன் வீட்டுக்குப் போவதென்று இருவரும் தீர்மானித்தனர்.

## பூக்களுக்கும் ஆசை!

மாவீரர்களே! உங்களுக்கு நான் ஒரு கதை சொல்ல விரும்புகிறேன். நிம்மதியாக உறங்கும் உங்களைக் குழப்புவதற்கு என்னை மன்னிப்பீர்கள் என்று, எனக்குத் தெரியும்.

ஒரு நாள் உங்களுக்கு வைப்பதற்காகப் பூப்பறிக்கச் சென்றபோது, பூந்தோட்டத்தில் ஏதோ "புஷ.... புஷ..." என்ற சத்தம் கேட்டது. யார் இப்படிக் கதைக்கிறார்கள் என்று பார்த்தேன். ஒரு மல்லிகைப் பூவும் ஒரு செவ்வந்திப் பூவும் ஏதோ கதைத்து கடைசியில் சிரித்துக் கேட்டது. அவை என்ன கதைத்தன என்று தெரியுமா? அதைத்தான் உங்களுக்கு இப்போது சொல்லப் போகின்றேன். மல்லிகைப் பூ செவ்வந்திப் பூவைப் பார்த்துக் கேட்கிறது-

"செவ்வந்தியாரே! ஏன் நீர் மட்டும் பூத்தால் கன நாளைக்கு வாடாமல் இருக்கின்றீர்? எம்மால் இப்படி இருக்கமுடியவில்லை; ஒரு நாளிலேயே இறந்து விடுகிறோமே!"

அதற்குச் செவ்வந்தி கேட்டது-

"ஏன் மல்லிகையே, உமக்கு இவ்வளவு காலமும் இல்லாத கவலை இப்போது மட்டும் வந்தது?"

மல்லிகை:

"இல்லை செவ்வந்தியாரே, ஒருவர் வந்து எம்மையும் உம்மையும் மாவீரர்களுக்கு வைப்பதற்காகப் பறித்துச் செல்கிறார். ஆனால் நீரோ அவருடன் எத்தனை நாளுக்கு இருக்கின்றீர், என்னால் அவருடன் ஒருநாள்தானே இருக்கமுடிகின்றது?"

செவ்வந்தி:

"ஐயோ! நீர் இதற்காகக் கவலைப்படுகிறீர்? உம்மைப் பார்த்து நாம் பொறாமைப்பட்டிருக்கின்றோம் தெரியுமா? ஒவ்வொரு மாவீரரதும் வித்துடல் வரும்போதும், மனிதர்கள் ஓடோடி வந்து, உம்மினத்தைத் தானே பறித்துச் சென்று மாலையாக்கி அவர்களின் உடலில் சாத்துகின்றார்கள்! அவர்களின் உடல்களில் நீங்கள் இருந்துகொண்டு, மானிடவர்க்கத்தையே விட உங்களுக்குத் தான் உரிமை கூட என்று நீங்கள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருவரும் ஒரு வகுப்பாகையால் பக்கத்தில் பக்கத்தில் இருப்பார்கள். அப்போது சத்தியகலாவின் அக்கா மாலினி வந்து சத்தியகலாவையும், சாந்தாவையும் வரட்டாம் எனக் கூட்டிச்செல்கிறாள்.

அவள் பயந்தது போல, அது அவளது அண்ணன் சங்கரேதான்! அவள் பெரும் குரலெடுத்துக் கத்தினாள். சத்தியாவின் வீட்டிலிருந்து சிறு தொலைவில் சாந்தாவின் வீடு உள்ளது.

சாந்தாவின் வீட்டிலிருந்தும் ஒப்பாரி கேட்பதை உணர்ந்த சத்தியா அங்கே விரைகிறாள்.

அங்கே அவள் கண்ட காட்சி....

சாந்தா அவள் மாமாவின் பெட்டிக்கு மேல் விழுந்து கத்துவதையும், அவள் தாய் புழுதியில் புரண்டு ஒப்பாரி வைப்பதையும், சந்திராவை ஆசுவாசப்படுத்த பலர் முனைவதையும் கண்டாள்.

இவள் அருகில் சத்தியா நிற்பதைக் கூட சாந்தா கவனிக்கவில்லை.

"சாந்தா" என்ற குரல் கேட்டுப் பின்னே திரும்புகிறாள்.

சத்தியாவைக் கண்ட சாந்தா திரும்பவும் விம்மத் தொடங்கினாள்.

"நீ மட்டும் அழுகிறாய் என்று நினைக்காதை; நானும் அழுதிட்டுத்தான் வாறன்" என்று கூற, கண்ணீரைத் துடைத்தவாறு அவளை, 'ஏன் அழுதாய்?' என்பதுபோலப் பார்க்கிறாள் அவள்.

சொல்லத் தொடங்கினாள்-

"நான் நினைத்தது நடந்துவிட்டது. அது என் அண்ணாவேதான். நானும் உன்னைப் போலவே சரியாக அழுதேன். பின் எனக்கொரு எண்ணம் வந்திட்டுது. ஏன் வீணாக அழுவான்? நாங்கள் அழுதாற் போல திரும்பி வருவினமே செத்தாக்கள்? இனி அழுவதில்லை என்று முடிவெடுத்திட்டன்" என்று கூறி முடிக்கிறாள்.

சந்திரனுடையதும் சங்கரினுடையதும் புகழுடல்கள் அணிவகுப்பு மரியாதையுடன் இறுதிக் கிரியைக்காக, கோப்பாய் மாவீரர் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

சாந்தா தான் அழுவதை திடீரென நிறுத்தியதைக் கண்ட சந்திராவிற்கு ஒரே ஆச்சரியம். "மாமா மாமா" என இடைவிடாது கத்தும் இவளா இப்படி நிற்கிறாள் என வியந்துகொண்டாள் சந்திரா.

★★★

நாட்கள் வாரங்களாக, வாரங்கள் மாதங்களாகின. எல்லாம் வழமை போல நடைமுறைக்கு வந்தன. இருவரும் பாடசாலைக்குப் போய்வந்தனர்.

ஆனால், அவர்களின் சிந்தனை பாடப் புத்தகத்தில் அல்ல; போர்க்களத்தில் எப்படி ஆமியை அழிப்பது என்றுதான் விடை தேடிச் சிறகடித்தது.

வீட்டை அடைந்த சாந்தா, "அம்மா, இப்ப 4.00 மணிக்கு மாணவர் இயக்கக் கூட்டமாம். நானும் சத்தியாவும் போகப்போறம். போகட்டுமா?" என்றாள்.

அதற்கு சந்திரா, "போய் இருட்டுவதற்கு முன்னே வந்திடவேணும். பிறகு உன்னைத் தேடி நான் அலையேலாது" என்று கூறி விடை கொடுக்கிறாள். தாய் அடுப்படிக்குள் சென்றதும், சங்கிலி காப்பைக் கழற்றிப் பெட்டிக்குள் வைத்து விட்டுச் செல்கிறாள்.

சத்தியகலா வீட்டிற்குச் சென்று அவளையும் கூட்டிக்கொண்டு, இருவரும் இயக்கத்திற்குப் போய்விட்டார்கள்.

8.00 மணியாகிவிட்டது. இன்னும் சாந்தாவைக் காணாத சந்திரா கலங்கத் தொடங்கிவிட்டாள். அப்போது படலை திறபடும் அரவம் கேட்டு நிம்மதி அடைந்தவளாக, கதவை நோக்கி ஓடுகின்றாள். அங்கே சத்தியாவின் அப்பாவும் அம்மாவும் கலங்கிய கண்களுடன் நிற்பதைக் கண்டாள்.

"சத்தியாவை இன்னும் காணவில்லை, சாந்தா வந்திட்டாளே?" என்று கேட்டனர்.

"இல்லை" என விம்மினாள் சந்திரா. அவள் இயக்கத்திற்குப் போய் இருப்பாள் என்ற ஊகிப்புச் சரி என்பதை, பெட்டிக்குள் இருந்த சங்கிலி, காப்பு உறுதிப்படுத்திக் காட்டின.

அழுது பயனில்லை என்பதை உணர்ந்த அவள், அப்படியே உறங்கிப் போனாள்.

அவர்கள் மனித நேயமுள்ள போராளிகளாகி, பயிற்சிப் பாசறையில், உறுதியான வழிநடத்தலில் உருவாகிக் கொண்டிருந்தனர். எதிரியை விரட்டியடித்து, மாவீரர்களின் கனவை நனவாக்குவதற்காக!

**- அருள்நந்தி**

---

**பெருமையாக மலர்ந்து இருக்கும் போது, அதில் எனக்கு மாலையாக இருக்க இடமில்லாவிட்டாலும், நானும் உங்கள் இனத்தைச் சேர்ந்தவள்தானே என்று பெருமைப்படுகின்றேன்."**

**மல்லிகை:**

**"ஆமாம்! நீர் சொல்லுவதும் சரிதான். அந்த மாவீரர்களின் வித்துடலில் இருந்து, கடைசியில் அவர்களுடனேயே போய்ச்சேருகின்றோம். எல்லாருக்கும் இந்தப் பாக்கியம் கிடைப்பது இல்லை!"**

**செவ்வந்தி:**

**"அந்த மாவீரர்களே எம்மினத்தையும் சரி, மானிட இனத்தையும் சரி சாதி, மதம், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரது மனதையும் கவர்ந்து விடுகின்றார்கள் தெரியுமா?"**

**மல்லிகை:**

**"ஓ..... அவர்களின் இந்த நல்ல பண்புகளுக்கு எல்லாம் யார் காரணம் தெரியுமா? அந்த மாபெரும் வீரத் தலைவனின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள் அல்லவா இந்த மாவீரர்கள்?"**

**செவ்வந்தி:**

**"இப்படிப் பார்க்கும் போது நாமும் பெருமைப்பட வேண்டும். ஏன் தெரியுமா? அந்தத் தானைத் தலைவன் பிறந்த நாட்டில் தானே நாமும் வளர்ந்து பூத்துக் குலுங்க, அந்த மாவீரர்களின் காலடியில் இருக்கும் பாக்கியம் எங்களிற்குக் கிடைத்திருக்கிறது"**

**மல்லிகை:**

**"அது சரிதான். அப்ப இனி நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பொறாமை கொள்ளாமல், ஒற்றுமையாக இருக்க வேண்டும். புஷ..... புஷ என்று கூறி இருவரும் பலத்த சத்தமாகச் சிரித்தார்கள்.**

**பார்த்தீர்களா மாவீரர்களே! பூக்கள் கூட உங்களுடன் இருப்பதற்கு எவ்வளவு ஆசையில் போட்டி கூடப் போடுகின்றன. அப்பிடியானால் எங்களுக்கு எவ்வளவு ஆசை வரும். இந்தப் பூக்கள் விரும்புவது போல் ஒற்றுமையாக இருந்து, தமிழீழம் பெறும் வரை போராடி உம்முடன் சேர்வதற்கு ஆசைப்படுகின்றேன்.**

**மாவீரர்களே, இனி நீங்கள் உறங்குங்கள்!**

**- ரமணி**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஐரோப்பியப் பாராளுமன்ற பேரணியின் பின்னணி என்ன?




23.10.95-ம் திகதி, பிரான்சின் ஸ்ராஸ்பூக் நகரில் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் முன்பாக நடைபெற்ற தமிழ் மக்களின் பேரணி பல்வேறு காரணங்களால் முக்கியத்துவம் பெறுகிறது. ஐரோப்பிய பாராளுமன்றம், ஐரோப்பிய சமூக நாடுகளின் பொதுவான பாராளுமன்றம் என்ற அடிப்படையில், ஐரோப்பிய நாடுகளைக் கூட்டாக இலக்கு வைத்து நடாத்தப்பட்ட பேரணியாக உள்ளது. அது மாத்திரமல்லாமல், ஐரோப்பிய சமூக நாடுகளிலுள்ள தமிழ் மக்களை ஒன்றிணைத்து நடாத்தப்பட்ட முதல் பேரணியாகவும் இது சிறப்புப் பெறுகிறது.

ஐரோப்பிய சமூக நாடுகளில் பல, தனிப்பட்ட முறையில் எமது பிரச்சினையில் அக்கறை காட்டி வருகின்றன; நேரடியாகத் தலையிடவும் விருப்பம் தெரிவித்துள்ளன. சந்திரிகாவுடன் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்திய போது, நெதர்லாந்து அரசாங்கம் தனது பிரதிநிதி ஒருவரை, மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் குழுவில் நியமித்ததை இங்கு குறிப்பிடலாம். பல்வேறு சந்தர்ப்பங்களின் போது இந்நாடுகள் சாதகமான, பாதகமான பல்வேறுபட்ட அபிப்பிராயங்களை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளன. மேலும், பிரித்தானியாவைப் பொறுத்தவரையில், இவ்வினப்பிரச்சினையில் தலையிட்டு, சமாதானத் தீர்வைக் கொண்டு வருவதற்கான வசதிகளைச் செய்யத் தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளது. அண்மையில், பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜெரமி ஹான்லி கொழும்புக்குச் சென்றபோதும் இதனைத் தெரிவித்திருந்தார். மேலும், விடுதலைப்புலிகள், தங்கள் சட்டத்தை மதித்து நடக்கும் காரணத்தினால், தங்கள் நாட்டில் அவர்கள் சுதந்திரமாகச் செயற்படலாம் என்றும் தெரிவித்திருந்தார். ஆயினும், பிரித்தானிய அரசாங்கமானது, சிறீலங்காவுக்கான இராணுவத் தளபாடங்களை பிரித்தானிய நிறுவனங்கள் விற்பதற்கான தடையை அண்மையில் நீக்கியதானது, பிரித்தானிய அரசாங்கத்தின் நடுநிலையைக் கேள்விக்குறியாக்கி உள்ளது. வெடிபொருட்களுக்கான, ஆபத்தான ஆயுதங்களுக்கான தடை தொடர்ந்து இருப்பதாகக் கூறியபோதிலும் பிரித்தானிய அரசாங்கத்தின் அணுகுமுறை, சிறீலங்கா அரசாங்கத்துக்கு விடுதலைப்புலிகளிலும் பார்க்கச் சிறிது கூடுதல் சார்பானதாகக் காணப்படுகிறது. மேலும், ஐரோப்பிய சமூக நாடுகளான போர்த்துக்கல், ஒல்லாந்து (நெதர்லாந்து) பிரித்தானியா ஆகிய குடியேற்ற நாடுகளின் ஏகாதிபத்திய எச்சசொச்சங்களாகவே, எமது பிரச்சினையும் நீடிக்கிறது. எனவே, இப்பிரச்சினையை நீதியான முறையில் தீர்த்து வைப்பதற்கு இவற்றிற்கு கூடுதலான பங்கு உண்டு. மேலும், உள்நாட்டுப் போரின் விளைவாகவும், சிறீலங்காவின் ஒடுக்குமுறையின் காரணமாகவும், அகதிகளாக வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்த தமிழ் மக்களில் அநேகமானோர் ஐரோப்பிய சமூக நாடுகளிலேயே உள்ளனர். இலங்கையிலிருந்து தஞ்சம் கோரி வருபவர்களுக்கு இனிமேல் அரசியல் புகலிடம் கொடுக்கக் கூடாது என்று பிரித்தானியாவில் நடைமுறைப்படுத்தவிருக்கும் சட்டமும் ஒருதலைப்பட்சமானது. சிறீலங்கா அரசாங்கத்தின் ஒடுக்கு முறை தமிழ் மக்கள் மீது இல்லையென்றோ, தமிழ் மக்கள் அங்கு பாதுகாப்பாக வாழலாம் என்றோ உத்தரவாதம் அளிப்பதாக பிரித்தானிய அரசாங்கத்தின் நிலைப்பாடு உள்ளது. இதுவும் உண்மைக்கு மாறானது. இவ் உதாரணத்தைப் பின்பற்றி ஏனைய ஐரோப்பிய நாடுகளும், தமிழ்மக்களுக்கு அகதி அந்தஸ்து வழங்க மறுக்கும் ஆபத்தும் இங்கு உண்டு

1994-ம் ஆண்டு ஐரோப்பிய பாராளுமன்றம், 52-ம் விதிப்படி, ஐரோப்பிய பாராளுமன்றத்தின் வெளிவிவகாரத்துக்கான குழு, இலங்கை குறித்துத் தயாரித்த அறிக்கையை ஆராய்ந்தது. மேலும், 63-ம் விதியின் பிரகாரம், இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான முன்மொழிவையும் ஐரோப்பிய பாராளுமன்றம் விவாதித்தது. இவ் வருடம் ஆகஸ்ட் மாதம் 9-ம் திகதி, ஐரோப்பிய சமூகத்தின் பேரில், அதன் தலைவர் வெளியிட்ட அறிக்கையில், விரைவில் இலங்கையில் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையை வெளியிட்டிருந்தார். இப் பின்னணியில், சிறீலங்கா அரசாங்கம் தமிழினப் படுகொலையை நடாத்தி, தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழித்து ஒழிக்க முற்படும் வேளையில் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் முன் நடைபெற்ற இப் பேரணி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், காலப்பொருத்தம் உள்ளதாகவும்

மதி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அமைகிறது. சிறீலங்காவின் இனப் படுகொலை ரீதியான போர் நடவடிக்கைகளைக் கண்டிக்குமாறும், தமிழ்மக்களின் தேசிய உரிமைகளை, சட்டரீதியான ஆயுதப் போராட்டத்தை, அதை தலைமை தாங்கி நடாத்தும் விடுதலைப்புலிகளை அங்கீகரிக்குமாறும் கோருவதாக ஐரோப்பிய பாராளுமன்றத் தலைவருக்கு (KLAUS HANSCH), அப்பேரணியை ஒழுங்கு செய்த அனைத்துலக தமிழர் ஒன்றியம் வழங்கிய மனு அமைந்திருந்தது. இன ஒடுக்குமுறை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் ஆதரவை விலக்கி தமிழ் மக்களின் சுதந்திர அபிலாசைகளுக்கு ஆதரவளித்து, தமிழ் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை மனு வெளிப்படுத்தியிருந்தது. தமிழ் மக்களின் தாயக உரிமை தன்னாட்சி உரிமை, ஆகியவை அங்கீகரிக்கப்பட்டால் பரஸ்பர நன்மை தருவதாக இறைமையுடைய ஒரு தேசங்களும் இணைந்து செயற்படுவதற்குரிய வடிவங்களைக் (MECHANISM) கண்டு பிடிக்கலாம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இம்மனுவை, ஐரோப்பிய பாராளுமன்ற இயக்குனர் ஜக் பிரிற்ஸ்சும் (JACQUES FRITZ), பெல்ஜிய நாட்டு ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் பேர்னான்ட் ஹேர்மனும் (FERNAND HERMAN) அதன் தலைவரின் சார்பில் பெற்றுக்கொண்டனர். கொடுக்கப்பட்ட மனுவின் அடிப்படையில், ஐரோப்பிய பராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று பெர்னான்ட் ஹேர்மனால் எடுத்துரைக்கப்பட்டது. இது பேரணி ஏற்படுத்திய தாக்கமாகவும் ஒரு திருப்பு முனையாகவும் அமைகிறது. ★

---

ஒகஸ்ட் 1995 எரிமலையில், அகதியுமெனவாகி எனத் தலைப்பிட்டு வெளியாகியிருந்த புகைப்படத்திற்கு, வாசகர்களிடம் இருந்து வந்திருந்த கவிதைகளில் தெரிவனவை:




# அகதியுமெனவாகி...

கற்றுத் தெளிவுபெறு கன்னி வயதிலிவர்
முற்றுகை இட்டழிசெய் மூர்க்கரால் - தொற்றுயிரே
ஏனும் மிஞ்சா தாவன்றே மூட்டை முடிச்சுடனே
போமென்றே போகின்றா ரோ?

(அகதியுமெனவாகி)

ஆராரோ பாடியன் பூட்டிவளர் தாய்தந்தை
வாராரோ மாட்டாரோ வந்துநமைச் - சேராரோ
வேறாரும் தீண்டி துயர் தாராரோ வென்றோரும்
சீரா ரிளந்தளிர்கள் பார்.

(அகதியுமெனவாகி)

நாட்டோடு கொண்டநேசம் நாட்பட நாட்பட
கூட்டாகி ஒட்டும் எனவுணர்ந்தோ - நோட்டமிட்டு
ஆட்டோடும் வீட்டைவிட்டு போகுவிதம் சிங்களவர்
காட்டும் வெறித்தனத்தைக் காண்.

(அகதியுமெனவாகி)

அன்றலர்ந்த தேன்மலராய் ஆர்வவிதழ் கோர்த்தவிளம்
கன்றனைய இச்சிறார்கள் கால்வலிக்க - எந்தத்
திகதியில்தீர் வென்றோங்கிப் போவதைப்பார் தோழா!
அகதிகளாய் ஆகி அழுது.

(அகதியுமெனவாகி)

- க. திருமாவளவன்

- ஞானி

பேரின பூசாரிகளின்
நரபலிக்கிறுக்கில்
ஆதிக்கக் கரங்கள்
அரிப்பெடுத்து
முன்னோக்கிப் பாயும்.
ஊளையிடும் புக்காரா
உயிர்ப்பூவை சிதைக்க
கூவி வரும் செல்
குறிவைத்து
காவு கொள்ளும்.
அடிமையுமாகி...
அகதியுமாகி...
அழிவாகி..
ஒற்றை வினாடி
நாளையை மாற்றி
கூனல் குறியாக்கும்.
நிம்மதி நாடிய
அணிநடை நகர்வில்
வேள்விக்குத் தப்பி,
விலங்குகளும்
கூடவரும்.
புத்தகம் ஏந்திட
வேண்டிய கைகள்
பொதி சுமக்க
புத்தியை சுமந்திட
வேண்டிய தலையில்
நித்திய சோகம்

குப்பி விளக்கின்
குறை இருளில்
பாறையில் வேரென
பதித்த யாவும்
கலங்களாகும்.

செல்வழி புரியாது
கால்கள் திசையிழக்க
விடியலின் அவசியம்
மெல்லப் புரியும்.

இன்றையின் நகலாய்
நாளையும் நகர்ந்து
யாவும் ஓய்ந்து
மீண்டு வருகையில்...

புதைந்த உறவு
புகைந்த வீடு
புலம்ப வைக்கும்
தீக்குளித்த புத்தகம்
குற்றுயிரில்
சோகம் சொல்லும்.
எதிரிகள்
புதைபட்டும்
வேங்கைகள்
விதைபட்டும்
மண்மட்டும்
மீண்டிருக்கும்.
இத்தால்
பிரிய எதிரியே
தெரிந்து கொள்
உந்தன் பாய்ச்சல்கள்
போராளியையும்
வார்த்திடும் வழிகள்.
நாளைய வார்ப்புக்கள்.

உன்னைத் தேடி
அணி நடக்க
கையில் கருவிகள்
உனது இருப்பை
விசாரணை செய்யும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வரவுக்காய்...!

இராப் பொழுதினைப் பகலாக்கி
இருக்கலாம்
பாடப்புத்தகங்ளைப் படித்து
பரீட்சையில் முன்னேறுவதற்காய்
காலைப்பொழுதினைக் கழித்திருக்கலாம்
கடவுளினைக் கரம் கூப்பி
வணங்குவதற்காய்.
மாலைப்பொழுதினைக் கழித்திருக்கலாம்
கடற்கரையில் இன்பமாய்ப்
போக்குவதற்காய்!

ஆனால் இப்போ....
யாமறியா நம் தேசத்து சுவர்களில்
நம் நினைவலைகள்.
படித்து பரீட்சையின் தேர்வுக்காய்
பூத்துக்கொண்டிருந்த கண்கள் இன்னமும்
காலாமுதல் இரவுவரை
பகைவனின் பாசறை நோக்கி....

நாளைய விடியலுக்காய்
எதிரியின் வரவுக்காய்
இன்னமும்.....
விழிகள் விழித்துள்ளன!

- ம. பிரசன்னா

---



# உயிரே எனக்காக...!

உயிரே! எனக்காக ஒன்று செய்வாயா.....?
எனக்காக ஒன்று செய்வாயா?
என்னுடல் வெடித்துச் சிதறினும்
ஒரு தமிழ்த்தாய் வயிற்றில் புகுவாயா?
தமிழ்த்தாய் வயிற்றில் புகுவாயா?

உயிருக்கும் உடலுக்கும் ஒப்பந்தமா?
இல்லை இல்லை! உடல் மண்ணுக்காக
உயிர் தமிழுக்காக அல்லவா!
அதனால்தான்.

அமைக்கின்றேன் காப்பரண்
வெடிமருந்துகளால் என்னைச் சுற்றி
எனக்காகவா? இல்லையே!
தமிழுக்காக..... தமிழ் மண்ணுக்காக

என் வயிற்றினுள்ளும் வெடிமருந்து
நிரப்ப விருப்பமே - என்னசெய்வது?
நீயும் நானும் சேர்ந்தல்லவா
இருக்கின்றோம்!
அதனால் முடியவில்லை.

என்னை ஏன் அப்படிப் பார்க்கிறாய்?
கவலையா! வேண்டாம் உனக்கது.
என்விழிகளில் என்றுமில்லாத
பிரகாசத்தை
இன்றுதான் பார்க்கமுடிமும் உன்னால்.

நீயும்நானும் செய்யும் தியாகத்தால்தானே
தமிழீழத்தை பிரசவிக்க முடியும்!
புரிகிறதா உனக்கு? புரிந்திருக்கும்
என்னுளல்லவா இருக்கின்றாய் நீ!

என் இறுதிப் பயணத்தின்போது
உன் பயணத்தை நீ மீண்டும் ஆரம்பி
தமிழின மைந்தர்கள் உருவாக
உத்தரவா...? இல்லை, வேண்டுகோள்!
ஒளியின்... ஒலியின்... வழியாகக்
கரையும்
உடலுக்கு ஒரு சின்ன ஆசை -
அவ்வளவுதான்!

உயிரே செய்வாயா...?

வெ. தமிழ்நெஞ்சன்
முல்லை மணலாறு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## வீழ்ச்சி வளர்ச்சி!

விழுந்தபோதெல்லாம் வலித்தது
எழுந்துபார்த்தேன் நடக்க முடியவில்லை
கண்ணை அகலவிரித்தேன்
தேகத்தைப் பார்த்தேன்
உடம்பெல்லாம் காயங்கள்
அதையும் பொருட்படுத்தாது
நடந்தேன் மறுபடி வீழ்ச்சி
கால்களோ பின்னிட்டது
காலொன்றும் செயலிழப்பு
அருகில்பார்த்தேன் ஓர் ஊன்றுகோல்
அதன் நம்பிக்கையுடன் நடந்தேன்
மீண்டும் இடறிவீழ்ந்தேன் தேகமெல்லாம்
கண்டல்காயங்கள் நடக்கவே...
முடியவில்லை
இருப்பதற்கோர் நிழலைக்கண்டேன்
அங்கே... விரைந்தேன்..
பார்த்தால் நிழலா... ஆ..கா!
அருமையான நிழல்
போயமர்ந்தேன். அங்கே...
நெளிந்தன பாம்புகள்
எழுந்தேன் வீழ்ந்து வீழ்ந்து
நடந்தேன். இடையிலும்
சிலரின் தூண்டுதலில் அவனை
மீண்டும் வீழ்த்தியது... ஓய்வு...
ஒருநாளாகி ஒருவாரமாகி, ஒருமாதமாகி
இறுதியில் மூன்றுமாத ஓய்வு...
ஓய்வா... ஓய்வு வானமோ, வெயிலோ
நிழலோகாணாத ஓய்வு - ஆனால்
அவனோ அதற்காய் சோர்வடையவில்லை
மீண்டும் அவன் இப் புனிதப்
பணியில் கொள்ளும் காதலோ ஏராளம்
ஏராளம். இப்போதும் களமுனை நோக்கி
காலை முன்னே பதிக்கிறான். கால்கள்
இரண்டும் மீண்டும் எழுந்தது. ஆனால்
பணியோ தொடர்ந்து செல்கிறது. பாதையும்
தொடர்கிறது. வீழ்வதும் எழுவதும்
போராட்டத்தில் ஒரு முன்னேற்றப்
பாதைக்கே ஒரு ஊன்றுகோலாகட்டும்!

- இந்துமதி

## ஒரு தங்கையின் ஏக்கம்!

மொட்டுக்கள் விரிவதும் மணம்
கமழ்வதும்
மண்மீது செறிந்து கொள்வதும்
இது கண்ட காட்சி தானே
இதயம் பிளக்கின்றது.

தாயக மண்ணில் தவழ்ந்து
விளையாடிய
எங்கள் கரங்கள் இன்று
ஆயுதத்துடன் எமது மண்ணில்
தவழ்ந்து விளையாடுகின்றது.

தங்கையே! நீ தூக்கிய துப்பாக்கியை
வீறு நடையுடன் கொண்டு செல்
வரும் துன்பத்தை ஒதுக்கி வைத்துவிட்டு
உனது ஆயுதத்துடன் எதிரியை
சல்லடை போட்டு தேடி அழித்துக்கொள்.

அப்போதுதான் உனது அப்பாவினதும்
உன் தங்கையினதும் ஆத்மா
சாந்தி அடையும் - அவர்களை
எப்படி அழித்தானோ அப்படியே
அழித்துக் கொள்.



## மாவீரர் துயிலும் இல்லம்

எங்களின் மண்ணுக்காக...
மாசற்ற உள்ளங்கள்
மானத்தோடு களம் வென்று
கல்லறைக்குச் சென்ற இடம்

எட்டுத் திக்கிலும்
எதிரியை அழித்து
விடுதலைக் குயில்கள்
விதையாகப் புதைந்த இடம்

சொர்க்கத்தின் கோயில்கள்
ஒன்றாகச் சேர்ந்து - நாளைய
சந்ததியின் ஆலயங்களாய்
காட்சி அமைக்கும் இடம்

விடிவுக்கு முடிதரிக்கச் சென்று
வீணர்களின் அம்புபட்டுச் சரிந்த
விசித்திரக் குயில்கள்
உறங்கும் இடம்

ஈன்றவளின் வயிற்றில் கருவாக இருந்து
தலைவன் அணியில் புலியாக மாறி
எதிரி முன் புயலாக எழுந்து
எங்கள் முன் நிலைத்துவிட்ட
செல்வங்களின் இல்லம்!

- தலைவண்ணன்

## எம் தலைவன்

பிரபாகரன்! எம் ஈழத்தமிழர்க்கு அரசனவன்
நாவில் மணியோசை மிகு நற்றமிழன்; ஈழத்தமிழ்
தாயருளைப் பெற்றமகன்; தமிழருவித் தேன்மழையான்!
சோழர் குலத் தோன்றலிவன்; கரிகால்வளவன்!
வீரத்தமிழ் வரலாற்று ஆழியிலே மூழ்கி; மறம்பெற்று
எதிர்ப்படை வீழ்த்துகின்ற வேங்கையிவன் வாழ்வினிலே
ஒப்பறியா படைத்தலைவன்! உணர்வு மிகு
தேசப்பற்றாளன்!
வெண்புறாவின் மனமுடையோன்!
மாவுலகின் நெஞ்சறிவான்!
ஓங்குபுகழ் இராஜேந்திர சோழனாய்; தமிழ்
உணர்வு மிகு கருணாகரத் தொண்டைமானாய்;
பாங்கு பெறும் பண்புருவாய்; பைந்தமிழின் பெருமகனாய்;
தமிழ் ஓங்குபுகழ் தலைவனின் வாழ்வோங்கி வாழியவே!
வானோங்கும் கற்பகம்போல், தமிழன்மறம் பெருக்கும்
மறத்தமிழன்!
தமிழர் மனமெங்கும் ஒளிர்கின்றபாசத் தலைவன்;
எம் தலைவன்; பிரபாகரன்!

- ராஜன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



திரைகளுக்குள்ளும்
முகமூடிகளுக்குள்ளும்
அரசியல்வாதிகளின் உயிர்வாழ்தல்
தொடர்கிறது.
சந்திரிகாவிற்கும் அது சாத்தியமாயிற்று.
கையில் வெண்புறா
முகத்தில் சமாதான முகமூடி
வாயில் சாத்வீக உச்சாடனம்
உலகைச் சுற்றிவர
இது போதும்.

www.tamileelamarchive.com